


இந்து மாணவர் மன்றம்,
இராம கிருஷ்ண சங்க ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி,
திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

"மேன்மைகொள் சைவநிதி விளங்குக உலகமெல்லாம்"

# சாரதை

இதழாசிரியர்

செல்வன். கு. பாலமுரளி

இந்து மாணவர் மன்றம்

இராம கிருஷ்ண சங்க ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

(தேசிய பாடசாலை)

திருக்கோணமலை.

1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையடி இம்மலரை வைத்தோம்

கிழக்கு வான் தந்த வெள்ளி
கிடைத்திடா தமிழர் சொத்து
அளக் கொணாக் காரை தீவான்
அனைத்து நாட்டுக்கு மானோன்
பழந்தமிழ் புதுக்கும் சிற்பி
பாப்புனை புலவர் ஏறு
இழந்த நல்லிசையை மீட்டோன்
எங்கனும் பள்ளி செய்தோன்

சீலமிகு விபுலானந்தா
சீரிளமை தமிழ் வளர்த்தோய்
கோலமார் திருமலையில் கலைக்
கூடமாம் இந்துக் கல்லூரி
ஞாலத்தில் வளர்த்ததாலே
நன்றியைச் சாற்றுதற்கே
இயலுமோ? எனினும் நிந்தன்
இணையடி இம்மலரை வைத்தோம்

"சாரதை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து மலர்

தி/இ. கி. மி. கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, திருக்கோணமலை மாவட்டத்தில், முதன்மை இடத்தை வகிக்கிறது. என்பது பெருமைக் குரிய விடயம்.

இக்கல்லூரியின் இந்து மாணவர் மன்றம், "சாரதை" என்ற பெயரில், வருடாந்த சஞ்சிகையொன்றை வெளியிடயிருக்கிறார்கள் என்று அறிந்து மகிழ்ச்சியடைகிறோம்.

"மூளையில் சில விடயங்களைத் திணிப்பது கல்வியாகாது" என்பார் சுவாமி விவேகானந்தர். மாணவர்களது உள்ளத்தில் உயர்ந்த இலட்சியங் களையும், பண்புகளையும் வளர்க்கும் வகையில் கல்வி அமைய வேண்டும், தன்னம்பிக்கையையும் மனோதிடத்தையும் அது அளிக்க வேண்டும் என் பார் அவர்.

"சாரதை" இதழ், சிந்தனைகளைத் தூண்டக்கூடிய கட்டுரைகளையும், மனதைப் பண்படுத்தக் கூடிய கருத்துக்களையும் வாழ்க்கையை மேம்படுத்தக் கூடிய நெறிமுறைகளையும் வழங்கி, மாணவர் சமுதாயத்திற்கு சிறந்த ஒளி விளக்காய் அமைய வேண்டும்.

இந்த இதழை சிறந்தமுறையில் தயாரிக்கப் பாடுபட்ட ஆசிரியர், மாண வர் அனைவருக்கும் எங்கள் பாராட்டுக்கள்

சுவாமி ஆத்மகனாநந்தா

இராமகிருஷ்ண மிஷன்,
கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

எமது கல்லூரியின் இந்து மாணவர் மன்றத்தினர் தமது வருடாந்த வெளியீடாக "சாரதை" என்ற இச்சஞ்சிகையை வெளிக் கொணர்ந்துள்ளனர். இந்து மாணவர் மன்ற நிர்வாகிகளினதும், பொறுப்பாசிரியர்களினதும் இவ்வரிய முயற்சி உண்மையில் பாராட்டப் பட வேண்டியதாகும்.

எதிர்வரும் காலங்களிலும் இச்சஞ்சிகை ஒரு வருடாந்த வெளியீடாக தொடர்ச் சியாக வெளியிடப்படுவதற்கு இவர்களது இந்த முயற்சி ஒரு ஆரம்பமாக அமையும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

வாழ்க்கையில் ஒழுக வேண்டிய நெறிமுறைகளைப் பயின்றுகொள்வதற்கு பள்ளிக் காலம் மாணவருக்குத் தகுந்த வாய்ப்பாக அமைகின்றது. இத்தகைய பயிலுதல் வெறும் போதனைகள் ஊடாக மாத்திரமல்லாமல் சாதனைகள் ஊடாகவும் நிறைவேறுமானால் அது அர்த்த பூர்வமானதாக இருக்கும்.

சமயம் என்பது பாடசாலைகளில் ஒரு பரீட்சைப் பாடமாக மாத்திரம் இருக்கின்ற நிலை மாற வேண்டும். சமயம் என்பதே வாழ்க்கை முறைமைதான். ஆகவே இந்த வாழ்க்கை முறை மைக்கேற்ற நெறிகளை போதனை ஊடாக மாணவர் மனத்திலே பதிப்பதுடன் அந்த நெறி முறைகளைப் பின்பற்றி மாணவர் ஒழுக வேண்டிய அவசியத்தையும் வற்புறுத்துதல் வேண் டும். அப்போதுதான் இந்த வாழ்க்கை ஒழுங்கு நெறிகள் சாதனையாக மலரும்.

இந்த வகையிலே எமது கல்லூரியில் இந்து மாணவர் மன்றம் இந்துமதப் பண்பாடு களையும் நெறி முறைகளையும் சாதனையாக்கும் ஒரு களமாக செயலாற்றிக்கொண்டிருப்பது பாராட்டப்பட வேண்டியதாகும்.

நவராத்திரி விழா, சமய அறிவுப் போட்டிகள், சமயப் பெரியார்களது குருபூசைத் தினங் கள் போன்ற பல்வேறு செயற்பாடுகளையும் மிகவும் செவ்வையாக ஆற்றிவரும் மன்றம் தற் போது மாணவர்களது சிந்தனைகளையும், ஆக்கங்களையும் வெளிக்கொணருவதற்கேதுவாக இச்சஞ்சிகையை வெளியிட்டிருப்பது மிகவும் பாராட்டுக்குரியதாகும்.

இராமகிருஷ்ண தத்துவத்தின் பின்னணியில் வளர்க்கப்பட்ட எமது கல்லூரியின் இந்து மாணவர் மன்றத்தின் சஞ்சிகைக்கு "சாரதை" என்ற பெயரும் மிகப் பொருத்தமாக அமை கின்றது. இச்சஞ்சிகை வெளியீட்டுக்காக உழைத்த அனைவருக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவிப்பதோடு, இச்சஞ்சிகைக்கு எனது வாழ்த்துக்களையும் அளிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

வணக்கம்

சி. தண்டாயுதபாணி,
அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பாசிரியரின் உள்ளத்தில்

கோணேசப் பெருமான் திருவருள் துணைக் கொண்டு இராம கிருஷ்ண சங்க ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் இந்து மாணவர் மன்றமானது தனது கன்னி முயற்சியாக 'சாரதை' என்னும் வருடாந்தஇதழை வெளியிடு வதனையிட்டு அகமகிழ்வு அடைகின்றேன்.

எமது கல்லூரி இந்துப் பாடசாலை என்பதனால் இந்துப் பண்பாடுகளும், சமயப் பழக்கவழக்கங்களையும் சமுதாயத்திற்கு எடுத்துச் செல்லும் பொறுப்பு எமக்குண்டு. எனவே அத்தகைய முயற்சியில் எமது மன்றம் ஈடுபட்டு வரு கின்றது. அதற்கு மாண வர்களினதும், ஆசிரியர்களினதும் பங்கு முக்கியமாகும். எந்த பாடசாலையும் மாணவர்களது பூரண பங்களிப்பினால் தான் முழுமை பெற முடியும் என்பது உண்மை. அந்த வகையில் எமது மாணவர்கள் தமது சேவையை சமுதாயத்திற்கு வழங்க காலடி எடுத்து வைத்திருப்பது வரவேற்கத் தக்கதாகும்.

எமது மன்ற உறுப்பினர்கள் மலரை வெளியிட வேண்டும் என்பதில் முழுமுயற்சி எடுத்துள்ளனர். இம்மலரில் ஆசிரியர்களதும், மாணவர்களதும், பெரி யார்களினதும் ஆக்கங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இம் மலரானது மாணவர் களது அயராத உழைப்பில் பல இடர்ப்பாடுகளின் மத்தியில் வெளிவருகின்றது.

எமது கல்லூரியின் வரலாற்றில் இம்மலர் ஒரு மைல் கல்லாகவும், சாதனைப் பதிப்பாகவும் அமைகின்றது. ஆயினும் இனிவரும் காலங்களில் இதனைவிட சிறப்பாக மலர் மலர வேண்டும் என இறைவனை பிரார்த்தித்து இம் மலர் வெளியிட உதவிய கல்லூரி நிர்வாகத்தினர், ஆசிரியர்கள், மாணவர்கள் மன்ற உறுப்பினர்கள், பெரியார்கள், நிதி உதவி வழங்கியோர் யாவருக்கும் நன்றி கூறி வாழ்த்தி விடை பெறுகின்றேன்.

நன்றி

செ. பத்மசீலன்,
பொறுப்பாசிரியர்,
இந்து மாணவர் மன்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியரின் சிந்தனையிலிருந்து.....

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

தாயினும் நல்ல தலைவராக திருக்கோணமலை பதியில் வீற்றிருக்கும் கோணேசப் பெருமான் திருவருளால் இராம கிருஷ்ண சங்க ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் இந்து மாணவர் மன்றத்தால் முதன் முதலாக வெளியிடப்படும் இந்து சமய சஞ்சிகையான 'சாரதை' வெளியிடப்படுவதையிட்டு பேருவகையடைகிறேன்.

சைவத்தின் தொன்மையை பாரெங்கும் உணர்த்த வேண்டும் என்ற ஆசையுள்ள சைவசமய பெருந்தகைகளுக்கு எமது இச்சிறிய முயற்சி சிறிதளவேனும் துணைபுரியும் என்பதில் ஐயமில்லை. தற்கால சூழலில் இவ்வாறான ஆன்மீக முயற்சிகளுக்கு தடங்கல் ஏற்படுவது உண்டு. அவ்வாறான தடங்கல் எல்லாவற்றையும் மீறி இறையருளால் இச்சஞ்சிகை வெளியிடும் முயற்சி திருவினையாகியுள்ளது. எமது இக் கன்னி முயற்சி எதிர்வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து, சைவத்திற்கு எம்மாலான சேவையை ஆற்ற இறைவன் துணைபுரிய வேண்டும்.

எமது இம்மேலான முயற்சியை கேள்வியுற்று தனது இதயபூர்வமான ஆசிச் செய்தியை வழங்கிய பெருமதிப்பிற்குரிய கொழும்பு இராம கிருஷ்ண சங்க சுவாமிஜி அவர்களுக்கு இந்து மாணவர் மன்றம் சார்பல் முதற்கண் எனது பணிவான நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

எமது மன்றத்தின் இம்முயற்சி வெற்றியளிப்பதற்கு பல்வேறு ஆலோசனைகளையும் தமது மேலான ஆதரவினையும் தந்துதவிய எமது கல்லூரியின் மதிப்பிற்குரிய முதல்வர் அவர்களுக்கும், அவரது நிர்வாகத்தினர்க்கும் இந்து மாணவர் மன்றம் சார்பில் எனது உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பல்வேறு சிரமங்களுக்கும், கடமைகளுக்கும் மத்தியில் எமது அன்பான வேண்டுகோளை ஏற்று குறுகிய காலத்தில் ஆக்கங்களை நல்கியுதவிய சைவப் பெருந்தகைகளுக்கும், கல்விமான்களுக்கும், ஆசிரியர் பெருந்தகைகளுக்கும் எமது மன்றத்தின் சார்பில் விசேட நன்றிகள் உரித்தாகுக. இவர்களின் இப்படைப்புக்கள் எமது சஞ்சிகைக்கு பெருமை சேர்ப்பதோடு, இளம் சமுதாயத்தினரிடையே ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்தும் என்பதில் சிறிதளவேனும் ஐயமில்லை.

மாணவர்களின் எழுத்தாற்றலை வளர்ப்பதும் இச்சஞ்சிகையின் ஒரு நோக்கமாகும். அந்நோக்கத்தை பூர்த்தி செய்யும் வகையில் ஆரம்ப பிரிவு மாணவர் முதல் உயர்தரப் பிரிவு மாணவர் வரை வியக்கத்தக்க வகையில் பல அரிய தத்துவ கருத்துக்களடங்கிய ஆக்கங்களை அளித்துதவினர். அவர்களுக்கு எமது மன்றத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது இந்து மாணவர் மன்றத்தின் பல்வேறு பணிகளையும் உடனிருந்து முன்னெடுத்து செல்பவர் எமது மன்றத்தின் பொறுப்பாசிரியர் ஆவார். அந்த வகையில் இவ்விதழ் சிறப்புற அமைய எம்முடன் சேர்ந்து உழைத்த அன்பிற்குரிய பொறுப்பாசிரியர் திரு. செ. பத்மசீலன் அவர்களுக்கு இதழ் ஆசிரியர் என்ற வகையில் எனது இதயம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் பல்வேறு வழிகளிலும் இவ்விதழ் சிறப்புற அமைய உதவிய எமது கல்லூரியின் ஆசிரியர் பெருமக்களுக்கு எமது சிறப்பு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வெளியீட்டிற்கு விளம்பரங்கள் மூலமாகவும், வாழ்த்துக்கள் மூலமாகவும் நிதியுதவி நல்கிய கொடை வள்ளல்களுக்கும், குறுகிய காலத்தில் அச்சேற்றித் தந்துதவிய ஸ்ரீ கணேச அச்சகத்தார்க்கும் எனது நன்றிகள்.

எனது இக்கட்டான நிலை கண்டு, எந்நேரமும் எனக்கு பக்கபலமாக நின்று உதவிய மன்றத்தின் தலைவர் செல்வன். க. ஜெயந்தன் அவர்களுக்கு எனது தோழமையான நன்றிகள்

கோணேசப் பெருமானின் திருவுளத்தினால் வெளியிடப்படும் இச்சஞ்சிகை எதிர்வரும் காலங்களில் வளர்ச்சி பெற்று மேலும் பொலிவுடன் வெளிவர வேண்டும் என்று எம்பெருமானைப் பிரார்த்தித்து விடைபெறுகிறேன்

- நன்றி

**செல்வன். சுகபாலன் பாலமுரளி**
இதழாசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழின் உள்ளே......


| | பக்கம் |
|---|---|
| ★ நவராத்திரி விழா | 01 |
| ★ இறை வணக்கம் | 03 |
| ★ இந்து மதம் தொடர்பானவை | 04 |
| ★ நாமும் நமது கலாசாரத் தனித்துவமும் | 05 |
| ★ அன்னைத் தெய்வம் | 11 |
| ★ நடனக்கலை இந்துப் பண்பாட்டு மரபில் பெறும் முக்கியத்துவமும் சிறப்பியல்புகளும் | 12 |
| ★ பக்தியும் பயின்றிடுவோம் | 13 |
| ★ 21ம் நூற்றாண்டில் சைவமதம் ஒரு சமூகவியல் நோக்கு | 14 |
| ★ பாரதம் பெற்ற விவேகானந்தன் | 16 |
| ★ பாவந்தீர்க்கும் பத்திரகாளியம்பாள் | 18 |
| ★ சைவசமய வளர்ச்சியும் அதன் வரலாற்றுப் பின்னணியும் | 23 |
| ★ சக்தி துதி | 24 |
| ★ ஈழத்திற் சைவம் | 25 |
| ★ சரஸ்வதி தேவி | 26 |
| ★ அருள் புரிவாய் கோணேசா | 27 |
| ★ பொருளுணர்ந்து சொல்வார் சிவபுரத்துள் செல்வார் | 29 |
| ★ வாணி விழா | 31 |
| ★ நவராத்திரி | 32 |
| ★ சக்தியின் மகிமை | 35 |
| ★ சிந்திக்கக் கூடாதா...? | 37 |
| ★ கல்வியும் சமயமும் | 40 |
| ★ இந்து சமயம் | 41 |
| ★ சைவ சமய வளர்ச்சிக்கு திருமுறைகள் வகித்த பங்களிப்பு | 45 |
| ★ இந்து மதத்தில் பெண்ணுரிமை | 47 |
| ★ சமயத்தை நோக்கி | 48 |
| ★ உண்மைச் சைவன் | 49 |
| ★ ஒழியட்டும் இவ்வேளையில் | 50 |
| ★ பக்தி இயக்கமும் சைவ இலக்கியமும் | 51 |
| ★ சைவ சமய அறிவுப் போட்டி முடிவுகள் | 55 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி/இ. கி. ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

(தேசிய பாடசாலை)

## இந்து மாணவர் மன்றம் - 1995

### செயற்குழு

| | | |
|---|---|---|
| காப்பாளர் | : | திரு. சி. தண்டாயுதபாணி (அதிபர்) |
| பொறுப்பாசிரியர் | : | திரு. செ. பத்மசீலன் |
| தலைவர் | : | செல்வன். க. ஜெயந்தன் |
| உப தலைவர் | : | செல்வன். ப. ராஜ்கண்ணா |
| செயலாளர் | : | செல்வன். ர. ரவிசங்கர் |
| பொருளாளர் | : | செல்வன். ச. சுதர்ஷன் |
| இதழாசிரியர் | : | செல்வன் கு. பாலமுரளி |
| உறுப்பினர்கள் | : | செல்வன். கே. தேவானந்தகுமார் |
| | | செல்வன். கை. ரதன் |
| | | செல்வன். பி. ஜெயபாஸ்கர் |
| | | செல்வன். மு. மயூரன் |

### ஆசிரியர் குழு

திரு. கா. ஜீவரெத்தினம்
திருமதி. அ. கணேசலிங்கம்
செல்வி. ந. நற்குணம்
செல்வி. சு. ரவிச்சந்திரிகா
திருமதி. ஆர். மல்லிகா

திரு. இ. முருகதாஸ்
திரு. ந. பாலசுந்தரம்
செல்வி. மீ. இராமச்சந்திரன்
செல்வி. எஸ் விக்னேஸ்வரி
செல்வி. த. குகனேஸ்வரி

### வகுப்பு பிரதிநிதிகள்

| | |
|---|---|
| எஸ். சக்திராஜ் | - 6 சீ |
| ஐ. இளங்கோவன் | - 6 சீ |
| இ. பிரணவன் | - 7 ஏ |
| ச. சஞ்சயன் | - 7 ஏ |
| செ. கஜேந்திரன் | - 7 பீ |
| இ. இரஞ்சித் | - 7 பீ |
| க. ஜனார்த்தனன் | - 7 பீ |
| ஜெ. மதிகிருஷ்ணா | - 7 சீ |
| ச. அஜந்தரூபன் | - 7 சீ |
| ச. கேசவன் | - 8 ஏ |
| நா. கோபிகிருஷ்ணா | - 8 ஏ |
| வி. கிருஷாந்தன் | - 8 சீ |
| செ. மகேந்திரகுமார் | - 8 டீ |
| ரூ. ரஜீவ்சங்கர் | - 8 டீ |
| சி. கஜராஜ் | - 8 பீ |
| பா. கேதிஸ்வரன் | - 8 பீ |
| எஸ். கோபிநாதன் | - 9 ஏ |
| எஸ். உமாமகேஸ்வரன் | - 9 பீ |
| கு. பிரபாகரன் | - 9 பீ |
| எஸ். கோணேஸ்வரன் | - 9 பீ |
| த. சர்வானந் | - 9 சீ |
| பா. பிரணவன் | - 9 சீ |
| எஸ். வினோதன் | - 9 டீ |
| எஸ். சஞ்சித் | - 9 டீ |
| எஸ். செந்தூரன் | - 10 ஏ |
| வி. விஜயசங்கர் | - 10 ஏ |
| ரி. கிரிதரன் | - 10 பீ |
| ரி. ஹரிகரன் | - 10 பீ |
| ரி. சரவணபவன் | - 10 சி |
| எஸ். மகேஸ்வரன் | - 10 சி |
| பா. உமாசாந்தன் | - 10 டீ |
| ஆர். ஹரிகரன் | - 10 டீ |
| என். செந்தூரன் | - 11 ஏ |
| ஆர். ஹரேகிருஷ்ணராம் | - 11 ஏ |
| ஜி. செந்தில்குமரன் | - 11 பீ |
| பா. பாகீஸ்வரன் | - 11 சி |
| நா. தவப்புதல்வன் | - 11 சி |
| ஜே. அன்டன் | - 11 டீ |
| எஸ். சிவானந்தன் | - 11 டீ |
| பி. குகானந்தன் | - 11 ஈ |
| எஸ். சுதாகரன் | - 11 ஈ |
| வி. ஸ்ரீகாந்தன் | - 12 உயிரியல் பீ |
| ரி. சுசீந்திரன் | - 12 வர்த்தகம் ஏ |
| ரி. பண்ணகாபரணன் | - 12 கணிதம் பீ |
| பொ. தவசிதன் | - 12 கணிதம் பீ |
| ரி. பிரபாதரன் | - 13. கணிதம் |
| ரி. ரமனேந்திரன் | - 13 கணிதம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து மாணவர் மன்ற செயற்குழு - 1995




**இருப்பவர்கள் இடமிருந்து வலம்**

ச. சுதர்சன் (பொருளாளர்), ர. ரவிசங்கர் (செயலாளர்), திரு. செ. பத்மசீலன் (பொறுப்பாசிரியர்), க. ஜெயந்தன் (தலைவர்), திரு. சி. தண்டாயுதபாணி (அதிபர்-காப்பாளர்), கு. பாலமுரளி (இதழாசிரியர்),

**நிற்பவர்கள் இடமிருந்து வலம்**

ப. ராஜ்கண்ணா (உபதலைவர்), கை. ரதன் (உறுப்பினர்), கை. தேவானந்தகுமார் (உறுப்பினர்), ப. ஜெயபாஸ்கர் (உறுப்பினர்), மு. மயூரன் (உறுப்பினர்).

## அதிபர், பிரதி அதிபர்களுடன் இந்து மாணவர் மன்ற ஆசிரியர்களும் வகுப்பு பிரதிநிதிகளும் - 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி விழா

ஞானசிரோன்மணி பண்டிதர்
**இ. வடிவேல்**

புரட்டாதி மாதம் என்றால் இந்துக்களுடைய உள்ளத்தில் நவராத்திரி விழாவின் பக்திக் கோலங்கள் பரிணமிக்கத் தொடங்கி விடும். நமது முன்னோர்கள் பன்னிரண்டு மாதங்களுக்கும் பவித்திரமான பக்திப் பெருவிழாக்களை மக்களின் வாழ்க்கையோடு இணைத்து இழையோட வைத்திருக்கிறார்கள். இதனால் இந்து சமய வளர்ச்சிக்கு போதகர்களின் அவசியம் ஏற்படுவதில்லை. இந்து சமயக்கலை, கலாச்சார பண்பாட்டு நெறியில் மக்களின் வாழ்க்கை வளமாக வளர்ந்து கொண்டிருக்கிறது.

புரட்டாதி மாதம் வளர்பிறையில் முதல் நாள் தொடங்கி ஒன்பது நாட்கள் தேவிக்குப் பூசை பெற்று வரும் நவராத்திரி விழாவில் ஒரு கண்ணோட்டம் செலுத்துவோம். ஒன்பது நாளும் ஒன்பது விதமாகத் தேவியை அலங்கரித்து வழிபட்டு வருவது மரபு. பெண்கள்தான் இவ்வழிபாட்டில் முக்கியமானவர்களாக கருதப்பட்டு வந்தார்கள் பராசக்தி வழிபாட்டை நவசக்தி வழிபாடாக வகுத்து விரிவாக வழிபட்டு வந்தார்கள்.

மனோன்மணி, சர்வபூததமணி, பெலப்பிரதமணி, காளி, கலவிகரணி, ரௌத்திரி, சேட்டை, வாமை, வைஷ்ணவி என்னும் ஒன்பதும் பராசக்தியின் வியாபகத்தத்துவசக்திகள், ஆத்ம தத்துவம் நிகழ்தற் பொருட்டு இவ்வாறு விரிவாக வழிபட்டு வந்தார்கள்.

தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் இந்த நவசக்திகளும் துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி ஆகிய மூன்று தேவியர்களுக்குள் ஒடுக்கி வழிபடும் பண்டிகையாக நிகழ்ந்து வருகின்றது. இதனைக் கொலுப் பண்டிகை என்றும் கூறுவர். தெய்வத் திருவுருவங்களின் பொம்மைகளைக் கொலுவிருத்திக் கொண்டாடி மகிழ்வதால் இது கொலுப் பண்டிகை எனப்பட்டது.

கர்நாடக மாநிலத்தில் குறிப்பாக மைசூரில் சாமுண்டேஸ்வரிக்கு விழாவெடுத்து தசராப்பண்டிகை எனக் கொண்டாடி வருகிறார்கள். வங்காளத்தில் இது மிகச் சிறப்பாக துர்க்கா பூசையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழர்களுக்குப் பொங்கல் பெருவிழாவைப் போல இது வங்காளத்தில் முக்கியமான பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இவ்விழாவில் துர்க்கையுடன் லட்சுமி, சரஸ்வதி, கணபதி, முருகன் ஆகியோரின் திருவுருவங்களும் பூசையில் வைக்கப்பட்டிருக்கும்.

துர்க்காபூசை ஒரு கலைவிழாவாகவே வங்காளத்தில் நடைபெற்று வருகின்றது. இசைக்கலைஞர்கள், நாடக கலைஞர்கள், பொம்மை செய்வோர், அரங்க நிர்மாணம் செய்வோர், அலங்கார ஆடை தயாரிப்பவர்கள், ஒப்பனைக்காரர்கள் ஆகிய அனைவருக்கும் பாராட்டும் சன்மானமும் இவ்விழாக்காலங்களில் கிடைக்கும். ஒன்பதாவது நாள் பூசைக்குப்பிறகு துர்க்கையை பீடத்திலிருந்து எடுத்து அலங்கார வண்டியிலிருத்தி ஊர்வலமாக எடுத்துச் சென்று கடல், நதி, ஏரி போன்ற இடங்களுக்குக் கொண்டு சென்று படகில்ஏற்றி ஆழமான இடத்தில் மூழ்கச்செய்து மந்திரங்கள் ஒலிக்க மங்களவாத்தியங்கள் முழங்க, நீருக்குள் விட்டு விடுவார்கள். துர்க்கா தேவியை மலை மகளாகவே கருதும் அன்னையை மீண்டும் அப்பனிடம் அனுப்பி வைப்பதாக ஐதீகம் உண்டு.

வடமாநிலங்களில் வாரணாதியில் இவ்விழா "ராமலீலா" என்ற பெயரில் பத்து நாட்கள் நடைபெற்று வருகிறது. பத்தாவது நாள் மூங்கிலால் பெரிய அளவில் உருவாக்கப்பட்ட இராவணனுடைய பொம்மைக்குள் வெடி வாணம், மத்தாப்பு ஆகியவற்றை வைத்து அரக்கர்களை இராமன் அழித்து வெற்றி கொண்டதாகக் கருதி விழாவில் இதைக் கொளுத்தி எரிப்பார்கள். பத்து நாட்களும் இராமாயணகாவியம் படிப்பார்கள். சம்பூர்ணஇராமாயண நாடகம் நடித்து மகிழ்வார்கள். கடைசி நாளன்று இராம பட்டாபிஷேகம் நடைபெற்று இராமலீலா வைபவம் நிறைவு பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குஜராத்தில் இது வண்ண விழாவாக கொண்டாடப்படுகின்றது. ஒன்பது வடிவங்களில் தேவியை வைத்து சக்தி பூசை செய்வார்கள். நவராத்திரியின் போது பெண்கள் தலையில் குடவிளக்கு வைத்து நடனமாடுவார்கள் துவாரங்களுள்ள மண்குடத்துள்ளே தீபம் ஏற்றித் தலையில் வைத்துக் கொண்டு இசைக் கருவிகள் மத்தளங்கள் ஒலிக்க நடனமாடி மகிழ்வார்கள். குஜராத் மக்களின் நாகரீகம், பண்பாடு, கலையழகு என்பன இவ்விழாவில் பிரதிபலிக்கும்.

நவராத்திரி விழா வெவ்வேறு இடங்களில் அங்கு வாழும் மக்களின் பண்பாடு, கலை கலாச்சாரங்களுக்கும். ஐதீகங்களுக்கும், மரபுகளுக்கும் ஏற்றவாறு பக்தி பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டுவருகின்றது. நமது நாட்டில் நவராத்திரி விழா ஆலயங்களிலிருந்து விரிவாக்கம் பெற்று, கல்வி நிலையங்கள், காரியாலயங்கள், சமயஸ்தாபனங்கள், தொழிற் கூடங்கள் முதலிய இடங்களிலெல்லாம் நடைபெற்று வருவது போற்றத்தக்கது.

பக்தி பெருவிழாவானது பக்திகுன்றி பேருக்கும், புகழுக்கும் நடைபெறும் போட்டிவிழாவாக மாற்ற மடைவது ஏற்புடையதன்று. அர்த்தமுள்ள இந்து மதத்தின் விழாக்களும் அர்த்தமுள்ளனவாக அமைவதே சாலச் சிறந்தது. மக்களின் அன்றாட வாழ்க்கை நலம் பெறச் செய்வதாக அமைய வேண்டும். எதிர்கால பிரஜைகளாகிய இளைஞர்களின் உள்ளத்தில் இத்தகைய விழாக்கள் பக்தி நெறியை அறிவிக்கும் களமாக அமைய வேண்டும்.

முற்றும்

சுயநலமா இல்லையா என்பதை உனது மனச்சாட்சியையே முதலில் கேட்டு நீ தெரிந்துகொள். சுயநலம் என்பது இல்லையானால், பிறகு எதையும் நீ பொருட்படுத்த வேண்டாம். எதுவும் உன்னைத் தடைசெய்ய முடியாது. செயலில் இறங்கு. அருகில் இருக்கும் செயலைச் செய்யத் தொடங்கு. அவ்விதம் செய்யச் செய்ய உண்மை உனக்கு எளிதில் புலப்படும்.

சுவாமி விவேகானந்தர்

எந்த சக்தியையும், திரவியத்தையும் விரயமாகச் செலவழிக்காமலும் அதே சமயம், ஒரேயடியாகப் பூட்டிக்கொண்டு விடாமலும் தானும் சமூகமும் பயனடையும்படி அளவறிந்து செலவழிக்கவும், காத்து வைத்துக்கொள்ளவும் அறிய வேண்டும்.

-காஞ்சி பரமாச்சாரியார்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை வணக்கம்

நாம் சைவ சமயிகள். எமது முழுமுதற் கடவுள் சிவபெருமான் என்பதில் ஐயமில்லை. எம்மைப் படைத்து, காத்து, அழித்து, மறைத்து தன்னுடன் சேர்த்துக் கொள்பவர். இப்படி எமக்கு எல்லாமான இந்த சக்தியை அதாவது இறைவனை நாம் எப்படி வணங்க வேண்டும் என்பதை எமது விபுலானந்த அடிகளார் மிக அழகாக அறிவு பூர்வமாக அனைவரும் அறிந்துகொள்ளும்படி மிக எளிமையாக கூறியுள்ளார்.

நாம் இறைவனுக்கு மலர், கற்பூரம், வாசனைப்புகை, அட்சதை, நைவேத்தியம் என்பவற்றை அர்ப்பணித்துவணங்குகிறோம். இவற்றில் மலரை எடுத்துக் கொண்டால், எப்படியான மலரை இறைவன் விரும்புகிறார் என்று பார்ப்போம்.

வெள்ளை நிறமல்லிகையோ
வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு
வாய்த்த மலர் எதுவோ?
என்று கேள்வியைக் கேட்போமானால்
வெள்ளை நிறப் பூவும்மல்ல
வேறெந்த மலருமல்ல

வெள்ளை நிறமான பூவுமில்லை என்கிறார். வேறு எந்த மலரும் அல்ல. அப்படி என்றால் எப்படியான மலரை வேண்டுகிறார். எம்மிடம் இல்லாத எதையும் இறைவன் கேட்பதில்லை மிக எளிமையாகச் சொல்கிறார்.

" உள்ளக் கமலம் அடி உத்தமனார் " வேண்டுவது.

ஆம். எமது கள்ளங் கபடமற்ற வெள்ளை உள்ள மலரைத்தான் அந்தக் கமல மல்ரைத்தான் இறைவன் வேண்டுகிறார். " கூப்பியகை காந்தளடி கோமகனார் வேண்டுவது "

எமது சின்னஞ்சிறு கைகளைக் கூப்பினால் அழகான காந்தள் மலர் போல இருக்குமாம். அதைத்தான் இறைவன் வேண்டுகிறார்.

" நாட்டவிழி நெய்தலடி நாயகனார் வேண்டுவது "

எமது மூடிய கண் மடல்களுக்குள் இருக்கும் நெய்தல் நிலத்து மலராகிய கண்கள் என்ற மலரைத்தான் இறைவன் ஏற்றுக் கொள்வாராம்.

எனவே நாம் எமது கண்களை மூடி கைகளைக் கூப்பி எமது இதயத் தாமரையில் இறைவனை இருத்தி வணங்குதல் வேண்டும்.

செல்வன் சூரியமூர்த்தி சூரியபிரதாப்
ஆண்டு 3 A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மதம் தொடர்பானவை

| | | | |
|---|---|---|---|
| 01. | இருவினை | - | நல்வினை, தீவினை |
| 02. | இருவகைப் பயன் | - | இம்மை, மறுமை |
| 03. | இரு வகை அறம் | - | இல்லறம் நல்லறம் |
| 04. | இருவகை பஞ்சாட்சரம் | - | நகராதி (நமசிவாய) சிகராதி (சிவாயநம) |
| 05. | இரு நிலை | - | சொரூபநிலை, தடத்தநிலை |
| 06. | முக்குற்றம் | - | காமம், வெகுளி, மயக்கம் |
| 07. | முக்கனி | - | மா, பலா, வாழை |
| 08. | முப்பொருள் | - | பதி, பசு, பாசம் |
| 09. | மும்மூர்த்திகள் | - | பிரம்மா, விஷ்ணு, சிவன் |
| 10. | முச்சுடர் | - | சூரியன், சந்திரன், அக்கினி |
| 11. | மும்மலம் | - | ஆணவம், கன்மம், மாயை |
| 12. | மூவகை வழிபாடுகள் | - | குரு, லிங்கம், சங்கமம். |
| 13. | மூவகை மாயைகள் | - | சுத்தமாயை, அசுத்தமாயை, பிரக்குருதிமாயை |
| 14. | மூவகை தீட்சைகள் | - | சமயதீட்சை, வீசேடதீட்சை, நிர்வாணதீட்சை |
| 15. | நால்வகைப் பூ | - | கோட்டுப்பூ, கொடிப்பூ, நிலப்பூ, நீர்ப்பூ |
| 16. | நால் வேதங்கள் | - | இருக்கு, யசுர், சாமம், அதர்வம் |
| 17. | நாற்பாதங்கள் | - | சரியை, கிரியை, யோகம், ஞானம் |
| 18. | ஐவகை நிலம் | - | குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை |
| 19. | ஐம்பூதம் | - | நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் |
| 20. | பஞ்சகௌவியம் | - | பால், தயிர், நெய், கோசலம், கோமயம் |
| 21. | பஞ்சபுராணம் | - | தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் |
| 22. | பஞ்சாமிர்தம் | - | வாழை, பலா, மா, நெய், தேன். |
| 23. | அறுவகை சமயம் | - | சைவம், சாக்தம், வைணவம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் |
| 24. | சப்தஸ்வரங்கள் | - | ச, ரி, க, ம, ப, த, நி |
| 25. | சப்தரிஷிகள் | - | அத்திரி, வசிட்டர், கச்யபர், கௌதமர், பரத்வாசர், விஸ்வாமித்திரர், ஜமதக்னி |
| 26. | அட்டாங்க யோகம் | - | இயமம், நியமம், ஆசனம், பிரணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி |
| 27. | நவதானியம் | - | உழுந்து, எள், கடலை, சாமை, தினை, துவரை நெல், பயறு, கொள்ளு |
| 28. | நவக்கிரகம் | - | சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, இராகு, கேது |
| 29. | தசாவதாரம் | - | மீன்,ஆமை, பன்றி, நரசிம்மம், வாமனம், பரசுராமன், தசரதராமன், கண்ணன், பலதேவன், கல்கி |

தொகுப்பு:- ராதாரஞ்சன். புஷ்பராகவன்
ஆண்டு 7B

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமும் நமது கலாசாரத் தனித்துவமும்

கலாநிதி சி. மௌனகுரு
கிழக்கிலங்கை பல்கலைக்கழகம்

தமிழ் மக்கள் மிக நீண்ட காலமாக இலங்கையில் வாழ்ந்து வருகிறார்கள். நீண்ட கால வரலாற்றைக் கொண்ட ஓரினம் தனித்துவமான பண்பாட்டினைக் கொண்டிருத்தல் அவசியம். ஓரினத்தின் அல்லது ஒரு குழுவின் தனித்துவத்தை நிர்ணயிக்கும் காரணிகளுள் அவ்வினத்திற்கோ அல்லது குழுவிற்கோவுரிய தனித்துவமான பண்பாடும் மிக முக்கிய ஒரு காரணியாகும்.

எமது பண்பாடு என்று எண்ணியதும் நம் மனக்கண் முன்னே சில கருத்துருவங்கள் தோன்றுகின்றன. சமூகவியல், மானிடவியல் துறைகளில் உயர் வழக்கு மாத்திரம் பண்பாடாகக் கொள்ளப்படுவதில்லை பண்பாடு என்பது, ஒரு மக்கள் கூட்டம். தமது சமூக வரலாற்று வளர்ச்சியினடியாகத் தோற்றுவித்துக் கொண்ட பௌதீகப் பொருட்கள், ஆத்மார்த்த கருத்துக்கள், மத நடைமுறைகள், சமூக பெறுமானங்கள் ஆகிய யாவற்றினதும் தொகுதியாகும். ஒரு கூட்டத்தினரின் பண்பாடு என்பது அக்கூட்டத்தினரின் தொழிநுட்ப வளர்ச்சி, உற்பத்தி முறைமை, உற்பத்தி உறவுகள், கல்வி, விஞ்ஞானம், இலக்கியங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றின் தொகுதியாகும்.

இவற்றுள் கலைகள் முக்கியமானவையாகும். ஒரு குழுவின் சமூக அமைவின் மிகத்துூரத்துப் பிரதிபலிப்பாக அமைவன கலைகள். ஒரு இனத்தின் அல்லது குழுவின் மத்தியிற் காணப்படும் கலைகளின் பரிமானத்தைக் கொண்டும் அவ்வினத்தின் தன்மை அமைப்பு என்பவற்றைக் கணக்கிடவும் முடியும். வெள்ளத்தனைய மலர் நீட்டம் போல சமூகத்திலே கலைகளும் அமையும். கலைகளை ஆராய்தல் என்பது ஓர் ஆய்வாளனை இறுதியில் சமூகத்தை ஆராய்தலுக்கு கொணடு சென்று விடும்.

ஓர் இனத்தின் அல்லது குழுவின் வளர்ச்சிப் போக்கில் அக்குழுவினுள் இருந்து அவ்வினத்திற்கோ அல்லது குழுவிற்கோ உரிய கலைகள் இயல்பாக எழுமாயின், வலிமை வாய்ந்த அல்லது வளர்ச்சியடைந்த பிறிதோர் இனத்தின் தொடர்புகளும் அவற்றின் கலைத்தாக்கங்களும் குறிப்பிட்ட இனத்தின் கலையிற் பல மாற்றங்களை ஏற்படுத்தவும் கூடும்.

கட்டிடம், சிற்பம், ஓவியம், நடனம், சங்கீதம், இலக்கியம், நாடகம் போன்ற கலைகலைப் பொறுத்தவரை ஈழத்துத் தமிழரிடையே ஒரு நீண்ட பாரம்பரியம் உள்ளது. எமது கலைப்பாரம்பரியத்தை நிர்ணயிப்பதில் எமது அண்டை நாடான இந்தியா அன்றிலிருந்து இன்று வரை பெருஞ் செல்வாக்கு செலுத்தி வருகிறது. எமது பாராட்டுக் கலைகளில் மாத்திரமல்ல தென்னாசிய நாடுகளனைத்திலும் இச் செல்வாக்கினை காணலாம்.

"இந்தியாவிலுள்ள கலையை மட்டுமே அறிவது. இந்தியக் கலையின் பாதியையே அறிவதாகும்" என்று சேர் - ஜோன் மார்சல் கூறுவார். இந்தியாவிலிருந்து வெளியே சென்று குடியேறிய கலையில் அதிகமான உத்வேகமும் கம்பீரமும் இருப்பதாக பேர்சிபிறவுன் கூறுவார். வணிகத் தொடர்பு, கலாசாரத் தொடர்பு ஆகியவற்றின் காரணமாகவே இந்தியச் செல்வாக்கு எமது கலைகளிற் பதிந்தது. இவற்றுட் கலாசாரத் தொடர்பின் ஓரம்சமாக சமயம் முக்கிய இடம் பெறுகின்றது. இவற்றுட் குறிப்பிடத்தக்கவை இந்து மதமும், பௌத்த மதமுமாகும். இந்த இரண்டு மதம் சார்ந்த கலைகளும் இம்மதங்களினூடாகவே நம் நாட்டுக்கும் வந்தன.

எனினும் எமது நாடு இந்தியாவினின்று கடலாற் பிரிக்கப்பட்டிருப்பதாலும், எமக்கென நாம் வித்தியாசமான சமூக அமைப்பு, வாழ்க்கை முறை, வரலாறு என்பவற்றை பெற்றிருப்பதனாலும், இந்நதியாவினின்றும் வேறுபட்ட தனித்துவம் மிக்க கலைகளைக் கொண்டிருப்பதும் இயல்பு. இத்தகைய தனித்துவம் மிக்க கலைகளுடன் இந்தியக் கலைகள் இணைந்து புதுப் பொலிவு பெற்ற தன்மையினை தென்னாசிய கலை வரலாறு காட்டுகிறது. இவ்வகையில் இந்தியத் தன்மையும் தமக்கென்றோர் தனித்துவமும் காணப்படுவது தான் ஈழத்தில் வாழும் தமிழர் கலையின் சிறப்பம்சமாகும். இவ்வரையறை சிங்கள மக்கள் மத்தியில் வழங்கி வரும் கலைகளுக்கும் பொருந்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கே ஆனைக்கோட்டையில் நடந்த அகழ்வாராய்வுகளும், கிழக்கே நடந்த அகழ்வாராய்வுகளும் பெருங் கற்காலப் பண்பாட்டைச் சேர்ந்த ஒரு குழு, பண்டு இங்கு வாழ்ந்தது என்பதைக் காட்டுகிறது. எமது பாரம்பரியம், இவ்வகையிற் புராதனமானது. அங்கு கண்டு எடுக்கப்பட்ட பொருட்கள் எமது கலை வரலாற்றின் ஆரம்ப கட்டத்திற்குரியவை. அன்றிலிருந்து இன்று வரை ஈழத்துத் தமிழரிடையே வளர்ச்சி பெற்று வந்த கலைகளை வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் ஆராய்வது அவசியம். இதன் பெறுபேறாக நமது தனித்துவத்தை நாம் இனங் காண்பதுடன் புதிய திசைகளை நோக்கி அவற்றை வளர்க்கவும் முடியும்.

சாதாரணமாக நம்மத்தியில் வழக்கிலுள்ள நடனத்தையும் சங்கீதத்தையும், எடுத்துக்கொள்வோம். இன்று பரதநாட்டியம் ஈழத்துத்தமிழரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு கலையாகக் கொள்ளப்படுகிறது. கி. பி. 10ம் நூற்றாண்டிலிருந்து இக்கலை தமிழரிடம் இருந்து வந்தது என்பதற்கு பதவியாவில் மொரகொட என்னும் இடத்திற் காணப்படும் இந்துக்கோயில்களின் அழிபாட்டிற் கண்டெடுக்கப்பட்ட புடைப்புச் சிற்பங்களைக் கொண்ட ஒரு தூண் சான்றாகும். இதில் நடமாடுபவர்கள் செதுக்கப்பட்டு உள்ளனர். இந்தியாவில் சிறப்பாக தமிழ் நாட்டில் இப்பரதக்கலை வளர்ந்ததற் கொப்பவே ஈழத்துத் தமிழர் மத்தியிலும் கோயிற் கலையாக இது வளர்ந்தது. கோயிற் கணிகையரிடம் வளர்ந்த இக்கலை பின்னாளில் தாசியரிடம் சென்று நலிவெய்திய பின்னாளில் தமிழ் நாட்டில் அக்கலை உயரிடம் பிடித்தது. இன்று, அக்கலை சமூக அந்தஸ்தின் சின்னமாகவும் கணிக்கப்படுவதைக் காண்கின்றோம். கற்றோரும் சமூகத்தில் உயர் நிலையிலிருந்தோரும் அக்கலையின்பால் ஈடுபாடு காட்டியமையால் அக்கலை இன்று வளர்ச்சியுற்று ஈழத்தில் வாழும் தமிழர் கலையாக தொலைக்காட்சியிலும், மங்கள நிகழ்ச்சிகளிலும் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது. இப்பரத நடனம் போன்றதும், ஆட்டக் கோலங்கள் நிறைந்ததுமான கூத்துக்கள் ஈழத்தில் தமிழர் வாழும் பிரதேசங்கள் பலவற்றிலும் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்து வசந்தன் கூத்து, முல்லைத்தீவு கோவலன் கூத்து, மட்டக்களப்பு வடமோடிக் கூத்து, தென் மோடிக் கூத்து என்பவற்றில் ஆட்டமுறைகளுள்ளன. கிராமிய மக்களும், கல்வியறிவில் குறைந்தோரும் இக்கூத்தினை ஆடுவதால் இவை செம்மையற்றனவாகக் கணிக்கப்பட்டு கவனிப்பாரற்றுப் போயின. இவையும் நமது நடன வகைகளே. இன்னொரு வகையிற் சொன்னால், பரத நடனத்தில் இந்தியச் செல்வாக்கு அபரிதமாகச் செறிந்திருக்க இவ்வகை நடனங்களில் ஈழத்துத் தமிழரின் தனித்துவங்கள் மேலோங்கி நிற்கின்றன.

சங்கீதத்திலும் கூட இதே தன்மையினைக் காண்கின்றோம். எமக்கென்று ஒரு நீண்ட சங்கீதப் பாரம்பரியம் உண்டு. இன்று ஈழத்துத் தமிழரின் சங்கீதமாகப் பிரதிநிதித்துவப்படுவது கர்னாடக சங்கீதமே. இதில் ஒன்றும் தவறில்லை. அது சரியானதே. கற்றோரும், அந்தஸ்து மிக்கோரும் கூத்தில் ஈடுபடுவதனாலும், இயல்பாகவே சிறந்த நுணுக்கங்களை அது பெற்றிருப்பதினாலும் அது சிறப்பிடத்தைப் பெறுகின்றது. எமது இசை மரபு பன்முகப்பட்டது. ஈழத்தின் தமிழர் வாழ் பிரதேசங்களில் எல்லாம் வெவ்வேறு விதமான இசைக் கோலங்களைக் காண முடியும். அங்கு காணப்படும் சிறு தெய்வ வணக்க உடுக்கடிப்பாடல்கள், தொழில் செய்யும் போது பாடப்படும் பாடல்கள், நாட்டார் பாடல்கள் என்பன கிராம மக்களுடன் ஊறியவை. இவை தவிர பண்ணிசை, கூத்திசை, நாடகமேடை இசை என பல்வேறு இசைப் பாரம்பரியங்களும் எம்மிடையே வளர்ந்துள்ளன. ஆனால் இவை ஈழத்துத் தமிழரின் இசையாகப் பிரதிநிதித்துவப்படுவதில்லை. எமது தனித்துவங்களைக் காட்டுகின்ற இவ் இசை மரபினை நாம் போற்றாமைக்கு அல்லது வளர்க்காமைக்கான காரணமும் உண்டு. அவை சமூகவியலின் பாற்படும்.

இந்தியாவில் தமிழ் நாட்டோடு ஈழத்தில் வாழ்ந்த தமிழர் வைத்திருந்த அறாத் தொடர்பு காரணமாகவும் இங்குள்ள சமூக அமைப்பு காரணமாகவும் குறிப்பிட்ட சில கலைகளையே உயரிய கலைகளாகக் கொள்ளும் மனோபாங்கும் நமது தனித்துவங்களை மறந்து தாய்நாடு எனக் கூறப்படும் தமிழகத்தினையே எதற்கும் ஆதர்சமாகக் கொள்ளும் பண்பும் எம்மவருக்கு ஏற்பட்டது. இதற்குப் பல வரலாற்றுக் காரணங்கள் உண்டு.

எமது அயல் இனத்தவரான சிங்கள மக்களும் எமது தனித்துவங்களைப் பற்றிச் சிந்திக்காத காலம் ஒன்று இருந்தது. ஆனால் பின்னாளில் அவர்கள் இப்பிணைப்பினின்றும் மெல்ல விடுபட்டு தமது தனித்துவங்களை கலையின் பல துறைகளிலும் வளர்த்தெடுத்து உள்ளனர். இந்நாடு சுதந்திரம்பெற்ற பின் ஏற்பட்ட தேசிய எழுச்சியில் வளர்ச்சி பெற்றோர் அவர்களே. சிறுபான்மையினர் என்ற அச்சம் காரணமாக தமிழர் அங்ஙனம் தம்மை வளர்க்க முயன்றாரில்லை. மிகப் பெரும்பான்மையினர் இந்தியத் தமிழ் பாரம்பரிதயத்தின் நிழலில் மானசீகமாக ஒதுங்கி மன ஆறுதல் தேடிக்கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1950 ஆண்டுகளுக்குப் பின்னர் சிங்களவர் மத்தியில் கலைத்துறையிற் பெருவளர்ச்சி தோன்றுகிறது. இரு இன மக்களுக்கும் அன்று அரச ஆதரவு கிடைத்த போதிலும் உடனடித் தேவை காரணமாகவும் அரசின் திட்ட மிட்ட ஊக்குவிப்பு காரணமாகவும் அவர்கள் கலைகள் வளர்ச்சி பெறலாயின. மக்குலொலுவ, அமரதேவ் போன் றோர் சிங்கள சங்கீதத்தை வளர்த்தனர். பணிபாராத, சித்திர சேனா, வஜிரா போன்றோர் சிங்கள நாட்டியத்தை வளர்த்தனர். கண்டிய நடனம் அவர்களின் கலாச்சாரச் சின்னமாக தேசிய நடனமாயிற்று. சரத்சந்திர போன்றோர் சிங்கள மக்களுக்கெனத் தனித்துவம் மிக்க நாடக அரங்கினைத் தோற்றுவித்தனர். அவரது மனமே, சிங்கபாகு நாடகங்கள் சிங்கள நாடகத்துறையின் வழிகாட்டிகளாயின. ஹென்றி ஜெயசேனா, போன்றோர் புதுவழியில் நாடகங்களைச் செய்தனர். லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் போன்றோர் தனித்துவம் மிக்க சிங்கள சினிமாவை உருவாக்கினர். அவரது ரேகாவ சந்தேசிய திரைப்படங்கள் சிங்கள கலாசாரத்தைப் பிரதிபலித்தன. பின்னாளில் தர்மசேன பத்திராஜா போன்றோர் இதை தொடர்ந்தனர். ஓவியம், சிற்பம், இலக்கியம் போன்ற ஏனைய துறைகளிலும் இம்முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. இத்துறைசார்ந்த பலர் வெளிநாடுகட்கு அரசாங்கத்தால் அனுப்பப்பட்டு பயிற்றப்பட்டனர். புலமைப்பரிசில்கள் பெற்று கலைபயிலச் சென்றோர் பலர். இதனால் உலகமளாவிய சிந்தனையும், வளர்ச்சிப் போக்கும் அவர்கள் கலைகளில் ஏற்படலாயிற்று. இவ்வண்ணம் தம் கலைத்தனித்துவத்தை வளர்த்தெடுக்க வேண்டிய தேவை அவர்களுக்கு இருந்தது. இதற்கு அரசியற் காரணிகள் பெருமளவில் துணை புரிந்தன.

ஈழத்துத் தமிழர்களைப் பொறுத்த வரை இம்முயற்சிகள் பெருமளவு நடைபெறவில்லையென்றே கூறலாம். தமிழ்நாட்டுக்கும், எமக்குமிடையே மொழி, சமயம், கலாசாரம் ஆகிய விடயங்களில் ஒற்றுமை இருந்தமையால் இந்தியத் தமிழர் தம் கலைகளையே இங்குள்ள தமிழரும் ஆதர்சமாக கொண்டார்கள். இங்குள்ள தமிழரது சமூக அமைப்பும் அதற்குத் துணையாக நின்றது. தமிழ் நாட்டில் வளர்ச்சி பெற்ற பரதம், நாடகம், சினிமா, இலக்கியம் என்பவற்றை நிறையப் பார்க்கவும் படிக்கவுமான சூழல் இங்குள்ள தமிழர்க்குத் தொடர்ந்து வாய்த் தது. இதனால் தென்னிந்தியக் கலையையே நமது கலை என்று வெளிப்படையாகக் கூறும் நிலைக்கும் வந்தோம்.

தென்னிந்திய கலைகள் எம்மவை என்பதும், எமது கலை வளர்ச்சிக்கு அவைபெரு வழிகாட்டின என்பதும் விவாதத்திற்கு இடமில்லாத உண்மைதான். எனினும் எமக்கென்றும் சில தனித்துவங்கள் உள்ளன என்பதும் உண்மையே. நடனத்திலும் இசையிலும் எமது தனித்துவங்கள் கிராமப்புறங்களிலும். சாதாரண மக்கள் மத்தியிலும் செறிந்து கிடக்கின்றன. என்பதைச் சுட்டியுள்ளேன். கட்டிடம், ஓவியம், சிற்பம் போன்ற துறைகளில் முழுக்க முழுக்க இந்திய பாணியையே பின்பற்றினோம். எனினும் இவற்றில் எமக்கென்று ஒரு பாணி வகுத்தோமா? என்பது பற்றி இத்துறை வல்லார் ஆராய வேண்டும்.

இந்த நாட்டில் தமிழர் ஒரு தனி இனமெனவும் அவர்களுக்கெனத் தனித்துவமான பண்பாடு உண்டென்று குரல்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே தோன்றத் தொடங்கி விட்டன. ஈழத்துத் தமிழருக்கென தனியான இலக்கியப் பாரம்பரியம் உண்டென்பதை ஆறுமுகநாவலர் உரத்துக் கூறினார். சி. வை. தாமோதரம்பிள்ளை (1832 - 1901) வி. கனகசபைப்பிள்ளை (1863 - 1922), சி. கனகசுந்தரம்பிள்ளை (1863 - 1922), சபாபதி, நாவலர் (1874 - 1907), போன்றோர் தமது வாழ்நாளின் பெரும்பகுதியை தென்னிந்தியாவிற் கழித்தவர்கள். அரசாங்க சேவையில் உயர் இடம் வகித்தவர்கள். இவர்கள் தமிழராய்ச்சி செய்தவர்கள். அடிக்கடி யாழ்ப் பாணம் வந்து தமது கிராமங்களிற் பாடசாலை நிறுவியவர்கள். இவர்களை தமிழர் மத்தியில் வாழ்ந்த உயர் குழாத்தினர் (Elitos) என்ற பதத்தால் விபரிக்கலாம். இவர்களது ஆராய்ச்சி ஒரு காலத்தில் தமிழ் நாட்டையே வழிப்படுத்தியது.

நாவலர் உரத்தச் சொன்ன ஈழத்து இலக்கிய பாரம்பரியத்தை காரணம் காட்டி நிறுவினார். பண்டிதமணி கணபதிப்பிள்ளையவர்கள், இவர் காட்டிய இலக்கிய பரம்பரை பெரும்பாலும் யாழ்ப்பாணத்துப் புலவர் குழாத் தையுள்ளடக்கியதாகவும். செந்நெறி இலக்கியம் சார்ந்ததாகவும் மரபு வழிப்பட்டதாகவும் அமைந்தது. அவர் காட்டிய இலக்கியப் பாரம்பரியம் சமூக வளர்ச்சிப் போக்கில் மேலும் வளர்ந்தது. ஈழத்து இலக்கிய பாரம்பரியத்தை அகட்டி பாரம்பரியத் தொடர்ச்சியை வலியுறுத்தியவர்கள் கலாநிதி க. கைலாசபதியும், கலாநிதி கா. சிவத் தம்பியும். இவர்கள் பரப்பினுள் யாழ்ப்பாணத்துப்புலவர் மாத்திரமன்றி மட்டக்களப்பு, மன்னர், மலைநாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் எழுத்தாளர்களும் அடங்குவர். செந்நெறி இலக்கியம் மாத்திரமன்றி வாய்மொழி இலக்கியம், நாட்டார் இலக்கியம் என்பனவும் எமது இலக்கியப் பாரம் பரியமாக கணிக்கப்படலாயிற்று. சமூகத்தின் உயர் குழாத்தினர் மாத்திரமன்றி சகல மட்ட எழுத்தாளர்களும் ஈழத்துத் தமிழ் இலக்கிய பாரம்பரியத்தவராயினர். மண்வாசனையும் ஈழத்துத் தமிழர் பிரச்சினைகளும் வெளிப்பட நாவல் சிறுகதை எழுதிய நமது எழுத்தாளர்கள் அப்பாரம்பரியத்தை வளர்த்துச் சென்றனர். அவ்வகையில் 1960 களில் ஈழத்தில் வாழ்ந்த தமிழர்களின் இலக்கியத் தனித்துவம் இனங் காணப்படரலாயி இன்று இத்துறை மேலும் ஆராயப்படுகிறது. ஆராய்ச்சியில் ஈடுபடுபவர்களுள் பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர். பொ. பூலோகசிங்கம், பேராசிரியர் மு. வேலுப்பிள்ளை என்போர் குறிப்பிடத்தக்கவர்கள்.

நமக்கென்றோர் நாடகம் தேவை என்ற உணர்வு 1960 களில் உருவாகியது. எமது நாடகத் தனித்துவத்தின் ஊற்றுக்கண் எமது பண்டைய கூத்துக்களே. எனக் கண்டு அக்கூத்துக்கள் உயிரோடு வாழும் மட்டக்களப்புப் பிரதேசம் சென்று அவற்றைச் செம்மைப்படுத்தி இலங்கை முழுவதும் அறிமுகம் செய்தார் பேராசிரியர் சு. வித்தியானந்தன், கர்ணன் போர், இராவணேசன், நொண்டி நாடகம், வாலிவதை என்பன அவர் தயாரித்த நாடகங்களாகும். அத்தோடு மன்னார், வவுனியா, மட்டக்களப்புப், பகுதிகளில் அண்ணாவிமார் மாகாநாடு நடத்தி கூத்துக்களை பழைய முறைப்படி ஆடவும் தூண்டினார். இதில் இவருக்கு பேராசிரியர் சிவத்தம்பி உதவி புரிந்தார்.

பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை தமிழ் நாடகத் துறையிலேயே பெரும் புரட்சி செய்தவர். அதுவரை உயர் குழாத்தினரான சாரங்கதாரனும், அரிச்சந்திரனும் நடமாடிய மேடையில் யாழ்ப்பாணத் தமிழை உணர்ச்சியோடு பேசும் பருத்தித்துறை மாந்தர்களின் பிரதிநிதிகளான வள்ளிப்பிள்ளையையும், கார்த்திகேசுவையும், தாமுவையும் நடமாடவைத்தார். இன்று இதன் வளர்ச்சியை ஈழத்துத் தமிழ் நாடக உலகிற் காண்கின்றோம். நமது கூத்து மரபும் தனித்துவமானது தமிழ் நாட்டை விட நாடகத்துறையில் ஈழத்துத் தமிழர் தனித்துவம் மிக்கோராய் உள்ளனர்.

1970களில் குத்துவிளக்கு, வாடைக்காற்று, பொன்மணி போன்ற தமிழ்ப்படங்கள் வெளிவந்தன. ஈழத்தில் வந்த தமிழ்ப்படங்களுள் இவை தனித்துவமானவை. இவை வெற்றி கரமாக ஓடாது விடினும் சாராம்சத்தில் தென்னிந்தியத் தமிழ்ச் சினிமாவினின்றும் வேறுபட்டவை. ஈழத்துத் தமிழ் மக்களின் வாழ்க்கை முறைகள் பிரச்சனைகள் ஆகியவற்றை அலசுபவை. இவற்றுள் வாடைக்காற்று மன்னார் பகுதிமீனவத் தமிழ் மக்கள் வாழ்க்கையைப்பற்றி கூறுவது.

1970களில் இலங்கை வானொலி ஈழத்துப் பாடல்களை ஒலிபரப்பலாயிற்று, மெல்லிசை வளர்ச்சியுற்றது. பரராஜசிங்கம் குலசீலநாதன், முத்தழகு போன்றோர் இத்துறையிலீடு பட்டனர். இவர்களை பின்தொடர்ந்தோர் ஏராளம் ஈழத்துத்தமிழிசையில் மட்டக்களப்பு, மன்னார், மலைநாடு போன்ற இடங்களில் வழங்கிய நாட்டுப்பாடல்கள் செம்மைப்படுத்தப்பட்டு வழங்கப்பட்டன. இவ்வகையில் இங்கு வாழும் தமிழருக்கென்று ஓர் இசையைத் தோற்றுவிக்க பலர் முயன்றனர்.

இதில் ஒருவிடயம் அவதானத்திற்குரியது. உயர் குழாத்தினருக்குரிய நிலையினின்று இலக்கியம், நாடகம் சினிமா, சங்கீதம் என்பன சகல மட்ட எழுத்தாளர்களையும் மக்களையும் உள்ளடக்கியதாக வளர்வதும், யாழ்ப்பாணம் என்ற நிலையினின்றும் வளர்ச்சி பெற்று மட்டக்களப்பு, மன்னார் என விரிந்து செல்வதும் ஆகிய பண்பை இக்கலாசாரத் தனித்துவம் வளர்க்கும் முயற்சியிற் காண்கின்றோம்.

இவ்வண்ணம் ஈழத்துத் தமிழரின் கலைத்தனித்துவத்தைக் காணும் முயற்சிகளும் பேணும் முயற்சிகளும் வளர்க்கும் முயற்சிகளும் 1960களிலிருந்து மெல்ல மெல்ல மேற்கொள்ளப்பட்டு வந்தன. எனினும் இன்னும் நாம் தென் இந்திய மாயையினின்றும் முற்றாக விடுபட்டோமில்லை. அளவுக்கதிகமாக இங்கு வந்து குவியும் மூன்றாந்தர வீடியோ திரைப்படங்கள் இதற்குச் சான்றாகும். ஆனால் இன்றைய சூழலும் நெருக்கடியும் தேவையும் இங்குள்ள தமிழர் தங்களைத் தாங்களே அறிந்துகொள்ள வேண்டிய அவசியத்தை ஏற்படுத்துகின்றன.

இன்றைய சமூக மாற்றத்தின் மத்தியில் கலைத்தனித்துவம் பற்றிய வாத பிரதிவாதங்கள் நிகழ்கின்றன. ஏற்கனவே எமது முன்னோடிகளால் தொடங்கப்பட்ட கலைப்பாரம்பரியத்தை மென்மேலும் முன் கொண்டு செல்ல வேண்டியதும் இதுவரை உயர்ந்தோர் கடைக்கண் படாது கவனிப்பாரற்று கிடந்த தனித்துவம் மிக்க கிராமியக்கலைகள் வளர்க்கப்படவேண்டியதும், தற்போது வளர்ச்சி பெற்றுள்ள கலைவடிவங்கள் மக்கள் மத்தியில் பிரபல்யபடுத்தப்பட வேண்டியதும் அவற்றினூடாக இங்குள்ள தமிழர்களின் வாழ்க்கை முறை போராட்டங்கள் என்பன பிரதிபலிக்கப்பட வேண்டியதும் இன்றைய காலகட்டத்தில் வாழும் கலைஞர்களின் கடமையும் ஆகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments
From

# R. RAVICHANDRAMOHAN COMPANY (PVT) LTD.

Civil Engineers, Merchants & General Contractors

- ✤ TRANSPORT AGENTS
- ✤ MANUFACTURERS OF CEMENT HOLLOW BLOCKS
- ✤ DISTRIBUTORS OF C.I.C. PAINTS
- ✤ AUTHORISED B. M. C. DEALERS
- ✤ HARDWARE MERCHANTS

Office & Hardware Stores

71, Thirugnanasampanther Street,

Trincomalee.

Tel:- 026 - 22046

Fax :- 026 - 22043

Workshop

159, Seaview Road, Trincomalee.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from:-*

# Thassim Jewellers

Specialist in:-

**Gems, Jewellery, Antiques, Curios Batiks & Manufacturing Jewellers**

(FULLY AIR CONDITIONED SHOW ROOM)

**76, Dockyard Road,**
**Trincomalee**
**Sri Lanka.**
**T. P. 026 - 22007**

**Branch:-**

## *Hotel Blauer Ocean*

**Uppuveli, Trincomalee**
**Sri Lanka.**

இதயபூர்வமாக ஒருவரிடம் அன்பும் நம்பிக்கையும் வைத்தால், அது ஒரு நாளும் வீண் போகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னைத் தெய்வம்

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று ஔவைப்பாட்டி சொல்லியிருக்கிறார். இரண்டு முன்னறி தெய்வங்களிலும் முன்னதாக "அன்னை"யைச் சொல்லியிருக்கிறார். தைத்திரியோபநிடதமும், "மாதாவைத் தெய்வமாகக் கொள்வாயாக, பிதாவைத் தெய்வமாக கொள்வாயாக" என்கிறது.. இங்கேயும் முதலில்அம்மாவைத்தான் சொல்லியிருக்கிறது.

தாயாரைத் தெய்வமாக நினைக்க முடியுமானால், இதையே திருப்பிவைத்துப் பார்க்கும் போது தெய்வத்தைத் தாயாராக நினைக்க முடியும். சர்வ லோகங்களையும் படைத்துக் காத்துக் கொண்டிருக்கிற மகாசக்தியைத் தாயாராக நினைக்கும் போது அம்பாள் என்கிறோம்.

எல்லாமாக ஆகியிருக்கின்ற பரமாத்மா நாம் எப்படி நினைத்தாலும் அப்படி வந்து அருள் செய்கிறது. எந்த ரூபமாக தியானித்தாலும் அப்படியே வந்து அநுக்கிரகம் செய்கிற கருணை பரமாத்மாவுக்கு உண்டு. அப்படி சாட்ஷாத் பரப்பிரமமே தாயாகி அம்பிகையாய் இருந்து கொண்டு நமக்கு அனுக்கிரகம் செய்ய வேண்டும். என்று நாம் பிரார்த்தித்தால் அவ்விதமே வருகிறது.

பரமாத்மாவை அன்னைத் தெய்வமாகப் பாவிப்பதில் தனியான விசேஷம் உண்டு அம்மாவிடம் நமக்குள்ள அன்பும் அம்மாவுக்கு நம்மிடமுள்ள அன்பும் அலாதியானவை அல்லவா? எனவே, "அம்மா" என்று நினைத்துபக்தி செய்வதால் ஒரே அன்புமயமாக இருக்கிறது. ஆனந்தமயமாக இருக்கிறது. நாம் குழந்தையாகி விடுவதால் தானாகவே காமக் குரோதிகள் நம்மைவிட்டு விலகுகின்றன. வயதேறிப் போவதால் ஏற்படும் விகாரங்களை, அவளுடைய குழந்தை என்ற உணர்வினால் போக்கிக் கொள்கிறோம்.

பரமாத்மாவை "அம்மா" என்பது நாமாக உபசாரத்திற்குச் செய்கிற பாவனை அல்ல, வாஸ்தவத்திலேயே பரமாத்மா ஒரு தாயாரின் அன்போடு கூடவே சமஸ்தப் பிராணிகளுக்கும் அனுக்கிரகம் செய்து கொண்டிருக்கிறது.

செல்வன். ஜெயச்சந்திரன். மதிகிருஷ்ணா
ஆண்டு: 7

இவ்விதழிற்கு பொருத்தமானதொரு பெயரை சூட்டுவதற்கு நாம் சிந்தித்துக் கொண்டிருந்தபோது, இராமகிருஷ்ண தத்துவத்தின் பின்னணியுடன் தொடர்புடைய "சாரதை" என்ற திருநாமத்தினை தனது உள்ளக்கிடக்கையிலிருந்து வெளிக்கொணர்ந்தவர் எமது கல்லூரியின் மதிப்பிற்குரிய ஆசிரியர் திரு. ரீ. என். தவபாலன் அவர்கள். அவருக்கு எமது பணிவுடன் கூடிய நன்றியினை இயம்புகின்றோம்.

இப்பெயருக்கு பொருத்தமாகவும், பல அரிய தத்துவக் கருத்துக்கள் அடங்கியதாகவும் முன் அட்டைப் படத்தினை வரைந்துதவியவர் பிரபல ஓவியர் திரு. ம. சிவதாசன் அவர்கள். அவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

இதழாசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடனக்கலை இந்துப்பண்பாட்டு மரபில் பெறும் முக்கியத்துவமும் சிறப்பியல்புகளும்

இந்து நடனக்கலை, பரதம். பரதநாட்டியம் என்ற பெயரால் வழங்கப்பட்டு வருகின்றது. பரத முனிவராலே வகுக்கப்பட்ட பரதசாஸ்திரத்தின் விதிகளுக்கு அமையும் ஆடற்கலை என்பதால் இதற்கு "பரதநாட்டியம்" என்ற பெயர் அமைந்தது. "ப" என்பதற்கு பாவம் எனவும், "ர" ராகம் எனவும், "த" என்பதற்கு தாளம் எனவும் கொண்டு இம் மூன்றும் இணைந்தது, பரத நாட்டியக் கலை என விளக்கம் தருவது உண்டு. பரத நாட்டியத்தில் சிருங்காரம், ஹாசியம், அற்புதம், வீரம், சோகம். சாந்தம் முதலாகிய பாவங்களை அங்க அபிநயங்களாலும் விழி, உதடு,புருவம் என்பவற்றின் அசைவுகளாலும் நளினமும், அழகும், சுவையும் பொருந்த வெளிப்படுத்துவதே பரத நாட்டியத்திற்கு சிறப்பினை ஊட்டுகின்றது. இராகமும் தாளமும் ஆகிய இசைக்கூறுகள் பாவத்துடன் இணைகையில் அக்காட்சியை காண்போர் உள்ளங்கள் ஆனந்த பரவசம் ஆவது இயல்பே.

ஆனாலும் அந்த ஆனந்தம், பரவசம் சிற்றின்பத்தை சார்ந்ததாய் விளங்குதல் கூடாது. தூய்மையும் மாசற்ற இன்பமும் ஏற்பட வேண்டுமாயின் பரதக்கலை தெய்வீகத்தோடு இணைக்கப்படல் அவசியம் என்பதை உணர்ந்து இந்துச் சான்றோர் இக்கலையினை தெய்வீகத்தோடு இணைத்து வளர்த்து வந்துள்ளனர். பரத கலையினை தோற்றுவித்தவரே முனிவர் என்றால் அதில் சிற்றின்பம் அமைவதற்கு இடம் இல்லை என்பதும் குறிப்பாக பெறப்படுவதே ஆகும். சங்க காலத்தில் உலகியலோடு சேர்ந்து கருதப்பட்ட நடனக்கலை பல்லவர் காலத்திலிருந்து ஆன்மாவியலோடு இறையியலோடு இணைக்கப்படுவது ஆயிற்று. பல்லவ மன்னரான மகேந்திரவர்மன் நடனக்கலையினை ஊக்கி வளர்த்தான். இதற்கு முன்பு வரை பொது அரங்குகளிலே ஆடப்பட்ட நடனம் இக்காலத்திலிருந்து ஆலயங்களிலே பேணப்படுவதும் நிகழ்த்தப்படுவது மான ஒரு கலைப்பண்பாயிற்று.

உற்சவமூர்த்தி எழுந்தருளி வீதி வலம் வரும் காலத்தில் நடனமாதர் மூர்த்தியின் முன்பு ஆடிச் செல்லும் வழக்கம் பல்லவர் காலத்தில் நிலவியமைக்குப் பின்வரும் தேவார அடிகள் சான்று பகரும்.

""அமருக் கோயில் வலம் வந்து நடமாடமுழவ திர
மழை என்றஞ்சி சில மந்தி மரமேறி முகில் பார்க்கும் திருவையாறே"

சிவனடியார்கள் ஆலயங்களில் உணர்ச்சி மிகுந்து கூத்தாடுவதும், நடனக்கலைஞர்கள் அடியார்களாக வேடந் தரித்து கூத்தாடுவதும் "தலையாரக் கும்பிட்டு கூத்துமாடி" என்ற அப்பர் சுவாமிகளின் திருவாக்கும் சான்றுகள் ஆகின்றன. சோழர் காலத்திலே நடனம் ஆடுவதற்கு எனறு மாதர்கள் நியமிக்கப்பபட்டிருந்தனர் என்பது வரலாறு தரும் செய்தி.

தெய்வங்களையே நடனக் கோலத்தில் உருவாக்கி வழிபடுவதும் இந்து சமயத்தின் ஓர் சிறப்பு அம்சம் ஆகும். இவ்வகையில் நடனம் ஆடியே உலக உயிர்களை இயக்குபவனாக சிவபெருமானை நடராசர் வடிவில் அமைத்து வழிபடுவதும் அந்த நடன மூர்த்திக்குச் சமய தத்துவங்களை குறிப்பிட்டு காட்டுவதும் இந்து சமயத்தில் நடனக்கலை பெறும் நல் இடத்தையே காட்டுவனவாக அமைகின்றன. அப்பர் சுவாமிகள் "குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில்" என எடுத்துக் கூறுவதை காண முடிகின்றது.

இறைவனின் பக்தியிலே ஆழ்ந்து போய் அவனைத் தம் சிறுவயது முதற் கொண்டு அகமகிழ்ந்து போற்றி வந்தவர் காரைக்கால் அம்மையார் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தில் இறைவன் சுடலையில் பேய்களுடன் நின்றாடும் திருக்காட்சி அழகாகப் சித்தரிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து" எனும் மணிவாசகர் கூற்று நடனத்தோடு நாடகமும் கோயில்களால் வளர்க்கப்பட்டது என்பதற்கு ஆதாரமாக உள்ளது. நடன கோபாலர், நர்த்தனக் கணபதி, நடனமுருகன் விக்கிரகங்களாக அமைத்துக் காட்டுவதும் அந்த நடனக் கோலங்களை தரிசித்து நெஞ்சு நெகிழ உருகுவதும் சாதாரண மக்களுக்கு மட்டுமன்றிப் பெருஞானிகளுக்கும் கூட இயல்பாக உள்ளது. ஒவ்வொரு தெய்வமும் ஆடிய ஆடல்கள் என்று பல்வேறு ஆடல் வகைகளும் வகுக்கப்பட்டு நடனக்கலைஞர்களால் ஆடப்பட்டு வருகின்றன. நடராசரின் நூற்றி எட்டு ஆடல் வகைகள் சிதம்பரத்தில் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளமையும் ஆலய சிற்பங்களிலேயே நடனக் கோலங்கள் சிற்பங்களாக வடிங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு நடனக்கலை இந்துப் பண்பாட்டுப் பாரம்பரியத்தில் முதன்மையான இடத்தை வகிக்கின்றது.

**செல்வன். சரவணமுத்து கோணேஸ்வரன்**
ஆண்டு 9A

## பக்தியும் பயின்றிடுவோம்

ராமகிருஷ்ணர் விவேகானந்தர்
சாரதை சுவாமி விபுலானந்தர்
நாமங்கள் இவைதான் நம் கலாசாலை
நல் வளர்ச்சிக்குக் காரணங்கள்
பூமகள் போற்றும் அன்னவர் வாழ்க்கை
புரிந்திடின் உள்ளம் அதுவொன்றே
யாம் பிறந்திட்ட நோக்கமறிந்து
நல்லவை செய்ய வழி காட்டும்.

பாடசா லைக்குச் சென்றாரில்லை
பற்பல அறிவு அவர் கண்டார்
ஏடுகள் பாடும் இறைவனை ராம
கிருஷ்ணரோ இயற்கையில் கற்று நின்றார்
நாடியே குருமார் அன்னவருக்கு
நற்பல வித்தைகள் தந்திருந்தார்
வீடுகள் தோறும் சேவைகள் செய்ய
விவேகானந்தரை அவர் அழைத்தார்.

கல்கத்தாவின் தூயநல் அலைகள்
கருத்துடன் தவழத் திருமலைமண்
வல்லமை கோணேஸ்வரருமே நல்க
வந்ததே கோணேஸ்வரா இந்து
நல்லவர் இந்தக் கல்லூரியிலே
யாவரும் என்னும் நிலை தொடர
தொல்லைகள் தீர்க்கும் நவராத்திரியின்
தூயநற் கலைகள் அருள் சேர்க்கும்.

ஈகையில் சிறந்த உள்ளங்கள் இங்கே
இன் முகத்தோடு நிதி அளிக்கும்
"யாகமே வழங்கல்" என்றிடும் கர்ணன்
நம்மவர்க் கெல்லாம் உளும் வாழ்வான்
ஆகையால் இங்கே வழிபடு தலமும்
அமைவது கண்டு மகிழ்கின்றோம்
வேகமே கொண்ட பூமியில் சில நொடி
மெள்ளவே பக்தியும் பயின்றிடுவோம்.

**ரீ. என். தவபாலன்** ஆசிரியர்
இ. கி. ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21 ஆம் நூற்றாண்டில் சைவ மதம்
# ஒரு சமூகவியல் நோக்கு

சி. வன்னியகுலம். M. A

மலரப்போகும் 21ஆம் நூற்றாண்டை துணிவுடனும் நம்பிக்கையுடனும் எதிர்கொள்வதற்கு உலக சமுதாயம் தயாராகிக் கொண்டிருக்கிறது. அரசியல், பொருளாதாரம், சமூகவியல், கல்வி, விஞ்ஞானம், தொழில்நுட்பம், மொழி போன்ற துறைகளிலே ஈடுபாடு கொண்டு அடுத்துவரும் நூற்றாண்டிலே புத்தம்புது நெறிகளிலே அவற்றை வழி நடத்துவதற்கு மக்கள் தயாராகிக்கொண்டிருக்கின்றனர். 21ஆம் நூற்றாண்டிலே சகல துறைகளும் ஒரு திடீர்ப் பாய்ச்சலுக்குப் முகம்கொடுக்க நேரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆயினும் எமது சைவமதம் 21ஆம் நூற்றாண்டை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றது. என்பதைச் சிந்திப்போர் மிகச் சிலரே. எமது மதம் இறைவனால் படைக்கப்பட்டது. அது தூய்மையானது அழிவில்லாதது ஆற்றல் மிக்கது. அதன் கட்டமைப்பு மாற்றஞ் செய்ய முடியாதது. என்ற மரபுவழியான சிந்தனையே எமது சமயத்தின் கடந்தகால பலமாகவும் தற்காலத்தின் தவிர்க்கமுடியாத பலவீனமாகவும் விளங்குகிறது.

இன்றைய நிலையிலே சைவமதம் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றது. மற்றெல்லா மதங்களும் நிறுவனரீதியான அமைப்பொன்றினைக் கொண்டிறுக்கும் போது சைவ மதம் மட்டும் அப்படியான அமைப் பொன்றின் கீழ் கொண்டுவரப்படாமை இவற்றில் முக்கியமானதாகும். இது எமது மதத்தின் ஒழுங்கமைப்பினையும் நடைமுறைகளையும் வெகுவாகப் பாதித்து வருகின்றது. குறிப்பாக எமது மதத்திலிருந்து விலகி பிற சமயங்களைத் தழுவுவோரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகின்றது. இதனைத் தடுத்து நிறுத்துமளவிற்கு எமது சமயம் நிறுவனப்படுத்தப்படவில்லை. அப்பர், சம்பந்தர், மாணிக்கவாசகர் போன்ற நாயன்மார்கள் தமது தன்னலமற்ற தொண்டினால் எமது சமயத்தை நிறுவனமயப்படுத்த முனைந்ததையும் சமுதாயமயப்படுத்த முனைந்ததையும் நாம் நினைவிற் கொள்ளுதல் வேண்டும்.

தற்போதைய நிலையில் ஏனைய மதங்கள் சமூகநல நடவடிக்கைகளில் தம்மை இணைத்துக் கொண்ட அளவிற்கு சைவமதம் சமூக ஈடுபாடு கொண்டிருப்பதாகத் தென்படவில்லை. அமைதியற்ற இந்த சூழ்நிலையிலே ஏனைய மத நிறுவனங்கள் மக்களை அணுகி அவர்களின் தேவைகளை அறிந்து அவற்றை நிவர்த்திக்க முயன்று வருகின்றன. இந்தப் பெரும்பணியில் சைவமதம் முனைப்புடன் செயற்படும் காலம் உதிக்க வேண்டும். மாறாக பாதிக்கப்படும் பொதுமக்கள் கோயிலுக்கு வந்து இறைவனிடம் தன் குறைகளை முறையிடும் அளவிற்கே எமது மதம் சமூக ஈடுபாடு கொண்டதாக விளங்குகிறது.

சைவமதம் இம்மை வாழ்விற்கு அளிக்கும் முக்கியத்துவத்தைவிட மறுமை வாழ்வினுக்கே முதலிடம் வழங்குகின்றது. மனிதனின் அகத்தூய்மையை வலியுறுத்துமளவிற்கு அவனது புறவாழ்வுத் திறன்களுக்கு அது வலுவூட்டத் தவறுகின்றது. யதார்த்தமான உலக பந்தங்களினின்றும் அது தன்னைப் புறந்தள்ளிக் கொண்டு மறுமையின் சொப்பனாவஸ்தையில் சுகம் காண்கின்றது. இவ்வுலகின் இன்ப துன்பங்களெல்லாம் பழவினையின் பயன்களென அது அமைதி காண்கிறது. சமண மதம் உலக வாழ்க்கைகையை வெறுத்துக் கொண்டு கருந்துாய்மை வாதத்தைப் பேசிக்கொண்டு இம்மை உலக பந்தங்களை அறுத்துக் கொண்டு சமூகத்தினின்றும் அந்நியப் பட்டுப்போவதை நாம் மறந்துவிடலாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவமதத்தில் பிற கலாசாரங்களின் ஆக்கிரமிப்பு ஈடு செய்ய முடியாத வகையிலே தமது மேலாதிக்கத்தைச் செலுத்தி வருகின்றன. பிரபஞ்சத்தின் அருட்கொடையான இயற்கையையே தொன்று தொட்டு தமிழ் மக்கள் வணங்கி வந்திருக்கின்றனர். சூரிய சந்திரர்கள் மழை, காற்று, விலங்கினம், தாவரங்கள், போன்ற இயற்கை சக்திகள் அவர்களின் தெய்வங்களாக விளங்கியுள்ளன. ஆரியர் வருகையின் பின்னர் கி. பி. 3ம் நூற்றாண்டளவிலே எமது வழிபாட்டு முறைகளிலே பாரிய மாற்றங்கள் நிகழ்வுற்றன. மூவேந்தரின் ஆசீர்வாதத்துடன் இயற்கை வழிபாட்டு முறையினை மனுவின் வேதம் அமுக்கிக் கொண்டது. வடநாட்டு வேதம் வருணாச்சிரம தர்மத்தை வகுத்துக்கொண்டு சத்திரியர்களினதும் வைசியர்களினதும் பக்கபலத்துடன் பிராமணர்களின் மேலாதிக்கத்தை நியாயப்படுத்தியது. தமிழர் சமுதாயத்தில் புதிதாகப் புகுந்து கொண்ட பிராமண சமூகம் ஆட்சியமைப்பிலும், மதத்திலும், சமூகத்திலும் அதிகாரம் செலுத்தத் தொடங்கியது. அந்தச் சமூகம் தன்னை இறைவனின் தூதனெனவும் சமூகத்தை இரட்சிப்பதற்காகவே தான் படைக்கப்பட்டதாகவும் கூறி சமூகக் கட்டமைப்பில் தன்னை மேன்மைப்படுத்திக் கொண்டது. வேதம் அவர்களின் பாதுகாவலனாக அரண் செய்தது.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழின் வேற்றுமையான்"

என்ற கோட்பாட்டை காலில் போட்டு மிதித்துக் கொண்டு மக்களை அது கூறுபோடத் துவங்கியது.

"மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலார் பாடு"

என்ற தத்துவத்தை நிராகரித்துக் கொண்டு சமூகத்தின் கொடுமுடியில் தன்னைக் கொலுவிருக்கச் செய்தது. 20 நூற்றாண்டுகளுக்கு முன்னர் துவங்கப் பெற்ற இந்த ஆக்கிரமிப்பே இன்னும் ஆதிக்கம் பெற்று விளங்குகிறது.

அந்த அவல நிலையினின்றும் எவ்வாறு சைவமதத்தை மீட்டெடுக்கலாமென்பதை இன்று நம் முன்னுள்ள பிரதான பிரச்சினையாகும். சைவ மதத்தை நிறுவனமயப்படுத்தல் சமுதாயமயப்படுத்தல், சமுதாய ஈடுபாட்டினைக் கட்டியெழுப்பல் என்பவற்றுக்கு மேலதிகமாக பின்வரும் பயனுறுதிவாய்ந்த பணிகளை ஊக்கப்படுத்துவது இன்றியமையாததாகிறது.

ஓருலகு ஒருவனே தேவன் என்ற கோட்பாட்டின் விளக்கங்களை மக்கள் மத்தியில் பரப்புதல் முதன்மைப்பணியாகும். சிருஷ்டியின் மூலகர்த்தாவாக விளங்குவது பிரம்மமே என்பதை ஆணித்தரமாக விளக்குவதன் மூலம் "தெய்வம் பலப்பல சொல்லிப் பகைத்தீயை வளர்க்கும் மூடத்தனங்களை" எமது சமுதாயத்திலிருந்து அகற்ற முடியும்.

சைவமத வழிபாடியற்றல், கிரியைகள், சடங்குகள், பிரசார நடவடிக்கைகள் போன்றவற்றிலே ஆற்றல் வாய்ந்தவர்களை உருவாக்கி முழுமையாக அவர்களின் பங்களிப்பினைப் பயன்படுத்துதல் வேண்டும். பௌத்த மதத்திற்கு பாளி பல்கலைக்கழகமும், கிறிஸ்தவ மதத்திற்கு மிஷனறிகளும் இருப்பது போல சைவமதத்தின் மேம்பாட்டிற்கென சைவப் பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். அதில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு சமயப்பணிகளிலே முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டும்.

எமது சமயத்தின் கிரியைகள், சடங்குகள் போன்றவற்றின் புறத்தோற்றத்திலே மயங்கி நிற்கும் மக்களை மீட்டெடுத்து அவற்றின் விஞ்ஞான பூர்வமான விளக்கங்களை அவர்கள் மனதில் விதைத்தல் வேண்டும்

இவை இன்று எமது சைவமதத்தைப் பொறுத்தவரையிலே அவசரமாகவும், அவசியமாகவும் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளாகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம் பெற்ற விவேகானந்தன்

தாரணி யெங்கும் கொடுமைகள் மிஞ்ச
தன்னிலை தாழ்ந்தே சைவமும் கெஞ்ச
பாரதம் தன்னில் அதர்மங்கள் எஞ்ச
இந்நிலை கண்டே மக்களும் அஞ்ச

வங்கத் தலை நகர் கல்கத்தாவினில்
வளமிக நிறைகல் தத்தர் குலம் தனில்
செங்கதிர் சுடரோன் திரு ஒளியுடனே
தங்கம் தவழ்ந்தது தாயவள் மடியினில்

பாரெங்கும் ஞானம் பரப்பிடுவான்
பாரதப் புகழை உயர்த் திடுவான்
நானிலம் வாழ்கின்ற நரர்களுக் கெல்லாம்
நரேந்திரன் நல்வழி காட்டிடுவான்

தாயே சலித்திடும் குறும்புடனே
தணியா வேகத் துரும்புடனே
ஞானமும் வீரமும் அவனுடனே
வளர்ந்தன யாவும் வயதுடனே

உலகினிலுள்ள பொருட்களி லெல்லாம்
விருப்புக்கள் எழுந்திடும் வாலிய வயதினில்
உண்மைப் பொருளது உலகில் நிலையெது
என்றே தேடிட விளைந்திட்டான்

கடவுளைக் கண்டவர் யாரிங்கே?
கண்டவர் உண்டோ சொல் எங்கே?
உதித்தது நெஞ்சில் 'ஆன்மீகம்
உரைத் திடவே ஒருவர் காத்திருந்தார்.

அறிவுக் கனவின் வருகை தனை
அறிந்தே இருந்த அருட் புனலும்
அகிலம் எங்கும் ஆன்மீகம் தனை
அள்ளித் தெளித்திட அருளியது

அகிலம் புகழும் அமெரிக்காவில்
அழகிடை நகரம் சிக்காக் கோவில்
சர்வ மதங்கள் மா நாட்டில்
சைவத்தின் பெருமை சாற்றிடவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரம் மக்கள் கூடி நிற்கும்
அழகிய மாநாட்டு மண்டபத்தில்
கட்டிய தலைப்பாகை காவியுடையுடன்
வங்கம் ஈன்ற சிங்கம் எழுந்தது.

அமெரிக்க நாட்டு சகோதர; சகோதரிகளே
உதித்தது இரண்டு வார்த்தைகளே
உரைத்தது எல்லாம் வேதாந்தம்
உணர்ந்தனர் மக்கள் எம் சித்தாந்தம்

மேலை நாட்டின் பெருஞ் செல்வம்
மேன்மையுடைய அவர் செயல்கள்
துன்பம் இல்லா அவர் வாழ்வு
துணிவு நிறைந்த அவர் வாழ்க்கை

சோம்பிக் கிடக்கும் பாரதமும்
துன்பம் நிறைந்த அவர் வாழ்வும்
இனியும் இந்நிலை தேவையில்லை
ஏற்றமே இனி புது பாரதமே.

அஞ்ஞானத்தில் உழன்று தினம்
அல்லல் படுகின்ற மக்களுக்காய்
கண்ணீர் வடித்துத் தன்னுயிரும்
செந்நீர் வழங்குபவனே ஞானி.

சகித்திருப்பவன் துறவியல்ல - நித்தம்
சாதிப்பவனே துறவியென்றார்
போதனையுடன் அவர் நிற்கவில்லை
சாதனை செய்தே வாழ்ந்திட்டார்.

சோ. ராகுலன்
ஆண்டு 9C

கடவுள் நமக்குப் புறம்பேயும் வெகு தொலைவிலும் இருப்பதாகத் தோன்றும் வரையிலும் அஞ்ஞானம் நிலைத்திருக்கின்றது. ஆனால் நமக்குள்ளே கடவுளை அறிந்துணரும் பொழுது உண்மை ஞானம் தோன்றுகிறது. தன்னுடைய ஆத்மாவாகிய ஆலயத்திலும் அவரைக் காண கின்றான். கடவுள் அதோ அங்கே ஆலயத்தில் இருக்கின்றார் என்ற உணர்வு ஒரு மனிதனுக்கு இருக்கும் வரையிலும் அவன் அஞ்ஞானியாவான். ஆனால் கடவுள் இதோ இங்கே இருக்கின்றார் என்ற உணர்வு அவனுக்கு ஏற்படும் பொழுது அவன் ஞானத்தைப் பெறுகின்றான்.

- ஸ்ரீராமகிருஷ்ணர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவந்தீர்க்கும் பத்திரகாளியம்பாள்

"கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை அமர்ந்தாரே" என்று பாடினார் சிவஞான சம்பந்தம் பெற்ற திருஞானசம்பந்தர். அப்படிப் பாடல் பெற்ற தென்கயிலாயமென அழைக்கப்படும் திருகோண மலையிலே எம்பெருமான் கோணேஸ்வரநாதரை எதிர்நோக்கிய வண்ணம் வீற்றிருந்து அருள் பாலிக்கின்றாள் காளியம்பாள். வீரத்தலைவியாகிய பத்திரகாளியம்பாள், தாயைப்போல எம்மையெல்லாம் ஆள்கின்றாள்.

**கல்வெட்டுச் சான்றுகள்:-**

இவ்வாலயம் மிகவும் பழைமை வாய்ந்தது. இக்கோயிலில் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றது. இங்கே "உல்" என்று அழைக்கப்படும் தேங்காய் உடைக்கப்படும் கல்லிலே பின்வருமாறு காணப்படுகின்றது.

உ காளி அம்மனுக்கு
அயி செம்பு லிங்கம்
செய்து கொடுத்தது
1878 தை ஆசாரி

மற்றும் இக் கோயிலில் காணப்படும் கற்றூண் ஒன்றிலும் கல்வெட்டுக் காணப்படுகின்றது. இத்தூண் 15 அடி உயரமும் 10 அங்குல அகலமுமானது. இதன் மூன்று பக்கங்களிலும் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றது இது இராஜேந்திர மன்னன் காலத்தில் எழுதப்பட்டதாகும்.

### இக்கோயில் தோன்றிய வரவாறு

இக்கோயிலின் தோற்றத்திற்திற்கு ஒரு வரலாற்றுரீதியான கதை கூறப்படுகிறது. முன்னொரு காலத்திலே இரா- மேஸ்வரத்தில் வாழ்ந்த மதுரைஐயர் என்பவரின் கனவிலே அம்பாள் தோன்றி "திருகோணமலைக்குச் சென்று கடற் கரையோரத்திலுள்ள தொங்குசெவ்வரத்தை மரத்தின் கீழ் தோண்டு. அங்கே ஒரு செப்புக்கிடாரம் தென்படும் அதனுள் ஒரு அழகிய காளியம்பாளின் விக்கிரகமும், தீபங்களும், மணியும் காணப்படும் அவ்விக் கிரகத்தை எடுத்து பிரதிஷ்டை செய்து பூஜை நடாத்தி "வா என்றும்" கூறினார். இப்படியாக இவ்வாலயம் தோன்றியது. இவ்விக்கிரகம் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடியதாகவும் 11ம் , 12ம் நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டில் வழிபடப்பெற்ற காளிசிலைகளை ஒத்ததாகவும் காணப்பட்டது. எம்பெருமாட்டி முன்னே முற்ற வெளியையும், "ஓம் சக்தி" யென்று கரைபுரண்டோடும் கடலையும் எதிர் நோக்கியவண்ணம் வீற்றிருந்து எண்ணற்ற திருவிளையாடல்களை நடத்தி வருகின்றாள்.

### இக்கோயிலில் நடந்த அற்புதங்கள்

(1) பேசவைத்த பத்தினி

மட்டக்களப்பிலே ஆசிரிய பயிற்சிக்கல்லூரியில் ஓய்வுபெற்ற விரிவுரையாளராகிய ஒரு பெண்மணி. தனது கணவர் கடும் சுகயீனமுற்று மருத்துவர்களும் கைவிட்ட நிலையில் பேச்சையும் இழந்த நிலையில், அவளைச் சந்தித்த காளியாச்சியின் அடியார்கள் நீ கேதார கௌரி விரதம் அனுஷ்டித்தால் உன் குறை தீரு மென்று கூறினார்கள். அதன்படி அப்பெண்மணி இவ்வாலயத்திற்கு வந்து மனம் உருகி திரிகரண சுத்தியுடன் விரதம் அனுஷ்டித்தாள். இப்படியாக இருபத்தொருநாள் விரதத்தை முடித்துக்கொண்டு திருக்காப்பு அர்ச்சனைப் பொருட்களுடன் ஊருக்குத்திரும்பினாள். அங்கே அவளது கணவர் நல்ல சுகநலமுடையவராய் அவளை எதிர் நோக்கி "பூஜை முடிந்து விட்டதா?" என்று கேட்டார். குரல் கேட்ட பெண்மணி மெய்சிலிர்க்க ஆனந்தக் கண்ணீர் வடித்து அம்பாளின் பெருமையை எண்ணி மனமகிழ்ந்தாள்.

(2) நாக சாபம்

இக்கோயிலில் பூஜை நடாத்தி வந்த பரம்பரையில் வந்த ஒரு பெண் பெண்பிள்ளையுடன், ஒருநாகத்தை யும் பெற்றெடுத்தாள். அவள் அந்த நாகபாம்பை தன்பிள்ளைபோல உணவூட்டி வளர்த்து வருகின்ற நாளிலே ஒரு நாள் அவர்களது வீட்டிலே விருந்தொன்று நடந்தது. அவ் விருந்திலே ஒருவர் தவறுதலாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கிடாரமொன்றை பாம்பின் மேல் வைத்து விட்டார். இதனால் நசிவுற்ற பாம்பு இறந்து விட்டது. அது இறக்கும் போது "உனது ஆறு சந்ததிக்கு ஆண்பிள்ளையே பிறக்காது" எனச்சாபமிட்டது. இப்படியாக ஆறு சந்ததிக்கு ஆண்பிள்ளையே பிறக்காமல் ஏழாவது சந்ததியிலேயே ஆண்பிள்ளை பிறந்ததாக கூறப்படுகிறது.

**மறக்கணை**

முற்காலத்தில் இக்கோயிலில் பூசை செய்த ஒரு பூசகர், ஒரு நாள் பூசையை முடித்து விட்டு மறந்து தன் மகனை ஆலயத்திற்குள் வைத்துப் பூட்டிவீட்டுச் சென்றார். பின்னர் வீட்டிலே இரவுச் சாப்பாட்டின் போது தான் பூசகர் பிள்ளையைத் தேடினார். பிள்ளையை எங்கு தேடியும் காணாமையால் கோயிலுக்குள் வைத்துப் பூட்டியிருக்கவேண்டுமென்று எண்ணி கோயிலின் மூலஸ்தானத்தைத் திறப்பதற்கு வந்தார். அப்பொழுது மூலஸ தானத்தில் பேச்சொலிகள் பலவும் கேட்டன. அப்பொழுது அவருக்கு கோயிலின் இரவுப்பூசை முடிந்ததும் அதிகாலைப் பூசையில்தான் கோயில் கதவு திறக்கப் படவேண்டுமென்ற விதி ஞாபகத்திற்கு வந்தது. என்றாலும் புத்திர பாசம் அவரை விடவில்லை. அதனால் அவர் திறவுகோலை எடுத்தார். அவ்வேளை இராசபல்லி அடித் தது. பின்னர், "கதவைத்திறவாதே! திறவு கோலைத் திரும்பவும் கீழே வை! உனது மகன் எம்முடன் நலமே யுள்ளான்! அதிகாலை வந்து அவனை நீ அழைத்துச் செல்லலாம்." என்ற ஒரு அசரீரி கேட்டது. அதையும பொருட்படுத்தாது பூசகர் கதவைத் திறந்தார். அப்பொழுது "ஒரு பாதி உனக்கு மறுபாதி எனக்கென்று" ஒரு ஒலி கேட்டது. அவ்வேளை குழந்தை இரு துண்டங்களாக இருந்தது. இதனை பெரியோர்கள் அம்பாளின் மறக் கருணை என்று அழைப்பார்கள்.

**அகந்தை நீக்கிய அங்கயற் கண்ணி**

ஒருமுறை ஒரு பெண் தலைவிரி கோலமாக இக்கோயிலைத்தாண்டிச் சென்றாள். அவ்வேளை பலர் "தீங்கு வரும்" என்று கூறியும் அது "செவிடன் காதில் சங்கூதியது" போலாயிற்று. அவள் கோயிலைத்தாண்டி செல்லும் போது அவளது கழுத்து ஒருபக்கம் திரும்பியது. எத்தனையோ வைத்தியசிகிச்சைகள் பெற்றும் கழுத்தை செம்மையாக்க முடியவில்லை. இதனால் மனம் வருந்திய பெண், தான்செய்த பிழையை எண்ணி மனம் வருந்தி அம்பாளிற்கு தனது கூந்தலை காணிக்கையாகத் தருவதாக இரந்தாள். பின்னர் அவளது தலை செம்மையாகியது. இக்கூந்தல் அம்பாள் மகிடாசுர சங்காரத்திற்கு வரும்போது அம்பாளின் தலையிலே வைக்கப் பட்டிருப்பதைக் காணலாம்.

**சிங்கம் பெற்ற சிம்ம வாகினி**

இக் கோயிலிலுள்ள சிங்க வாகனம் மிகவும் அழகானதும் தொன்மை வாய்ந்ததுமாகும். இது கிடைத் தது ஒரு அற்புதமான கதையாகும். தென்னிந்தியாவிலிருந்து வந்த கப்பலொன்று திருக்கோணமலைத் துறை முகத்திலே நங்கூரமிடப்பட்டிருந்தது. பின்னர் அலுவல் முடிந்ததும் கப்பல் புறப்பட்ட போது கப்பல் இயங்க மறுத்தது. இந்நேரத்தில் இக்கப்பலிலிருந்து சிங்கவாகனத்தை அம்பாளுக்கு வழங்கியதும் கப்பல் இயங்கியது. இவ்வாறாக அம்பாளுக்கு சிங்கவாகனம் கிடைத்தது.

**மமதையைப் போக்கிய மகேஸ்வரி**

இக்கோயிலின் தீர்த்த உற்சவத்தின் போது அம்பாள் வீதி வழியாக ஊர்வலமாக வந்தே தீர்த்தக்கரைக் குச் செல்வது வழக்கம், அப்படி ஒருமுறை அம்பாள் வீதி வழியாக ஊர்வலம் வந்த பொழுது ஒருவீட்டில் வீட்டுக்காரர் நிறைகுடம் வைக்காதமையால் அங்கு வாடகைக்கு இருந்தவர்கள் நிறைகுடம் வைத்தார்கள். இதைக்கண்ட வீட்டுச் சொந்தக்காரத் தலைவன் "யாரைக் கேட்டு நிறைகுடம் வைத்தீர்கள்"? என்று கறுவினான் இதனால் மனம்வருந்திய வாடகைக்கிருந்த குடும்பம் அம்பாளிடம் தமதுநிலையை முறையிட்டு அழுதனர் அம்பாள் அவ்வீட்டுக்காரனின் மமதையைப் போக்குவதற்காக அவனது ஒரேமகளுக்கு அம்மை நோயைஉடல் எங்கும் போட்டாள். இதனால் அவ்வீட்டுக்காரனின் மகள் வேதனை தாங்க முடியாமல் கதறினாள். பின்னர் அவர்கள் தாம் செய்த பிழையை எண்ணி அம்பாளிடம் மன்னிப்புக் கேட்டதும் நோயின் அகோரம் குறைந்தது என்று கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாயை அடக்கிய பாகீஸ்வரி**

அம்பாள் தீர்த்தமாடுமிடத்தில், முன்னர் முஸ்லீம்கள் குடியேறியிருந்தனர். அவர்கள் தாம் மலம் கழிக்குமிடத்தில் அம்பாள் தீர்த்தமாட வருகிறாள் என்று பழித்தனர். இதனால் கோபங்கொண்ட அம்பாள் அவர்களுக்கு நோயைக்கொடுத்து அவர்களை அவ்விடத்தை விட்டே ஓடச்செய்தாள். பின்னர் அவ்விடத்தில் சிங்களவர்கள் குடியேறினார்கள். அவர்கள் பக்தியோடு அம்பாள் மேல் நம்பிக்கையோடு வழிபட்டு வருவதால் அவர்களுக்கொரு இடையூறும் ஏற்படாமல் அவர்களைக்காத்து வருகிறாள்.

**சகுனம் காட்டிய சாமுண்டி**

1990 ஆம் ஆண்டு கலவரம் வருவதற்கு சில நாட்களுக்கு முன்னர், அம்பாளின் கண்டாமணி கீழே அறுந்து வீழ்ந்தது. அதன் பின்னர் இவ்வூரில் கலவரம் மூண்டது. ஆனால் அம்பாளின் அருளால் இந்நகரத்தில் கலவரத்தால் அவ்வளவு சேதமேதும் ஏற்படவில்லை.

**தற்கால நியமங்கள்**

தற்பொழுது இவ்வாலயத்தில் இரண்டுகால நித்தியபூசை நடைபெறுகிறது. நவராத்திரி, ஆடிப்பூரம், மகோற்சவம், கேதாரகௌரி விரதம் என்பன சிறப்பாக நடைபெறுகின்றது. திருவிழாக்காலங்களில் அம்பாள் அழகிய ஆடையணிந்து நகைகளால் அலங்காரம் செய்யப்பட்டு வீதி உலாவந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றாள். இங்கே மூன்று சித்திரத்தேர்கள் காணப்படுகின்றன. தற்பொழுது இரண்டு இராஜ கோபுரங்கள் காணப்படுவதுடன் இன்னுமொரு இராஜ கோபுரம் அமைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இக்கோயிலின் ஆதீனகர்த்தா சோ. இரவிச்சந்திரக்குருக்கள் கோயிற்பணிகளை சிறப்பாக நடத்தி வருகிறார். சாதிமத பேதமின்றி பலகோடிமக்கள் இங்கு வந்து வழிபாடு செய்து, காளியம்பாளின் அருளைப் பெற்று செல்கின்றனர்.

## கீர்த்தனை

இராகம்:- சண்முகப்பிரியா — தாளம்:- ஆதி

அ { ஸரிகமபதநிஸ<br>
ஆ { ஸநிதபமகரிஸ } 56

**பல்லவி**

திருமலை நாயகியே பத்திரகாளியேயுன்<br>
அருள்வெள்ளம் பொங்கட்டுமே

**அனுபல்லவி**

கடலொலிக்கும் கோணைநகர்தனில் வீற்றிருந்து<br>
அடியவர் துயர்நீக்கும் மாதா பரமேஸ்வரியே

**சரணம்**

ஆழியின் முன்னிருந்து நீலகண்டனை நோக்கி<br>
ஆனைமுகனும் போற்ற கோயில் கொண்ட தாயே<br>
ஆணவத்தை அடக்கி ஞானத்தை நல்கிடும்<br>
அகிலாண்ட நாயகியே எமையாளும் ஈஸ்வரியே

தொகுப்பு: ச. செந்தூரன்<br>
ஆண்டு 10 A

சுபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from:-*

ITMS

# Computer Training Centre

Information Technology & Management Studies (pvt.) Ltd.

AFFLIATED WITH London College of Computing - U.K.

## In Search of Excellenc

No. 11, Saratha Lane,
Trincomalee.

வாழ்த்துக்களுடன்

# நிர்மலகாந் சினிமா

பாலையூற்று,
திருக்கோணமலை.

உரிமையாளர் - எஸ். ஸ்ரீஸ்கந்தராசா
தொ. பே. 026-22709



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாழ்த்துக்களுடன்

# இராஜலக்ஷ்மி டிரேட்

மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருட்கள்

V

252, கடற்படைத்தள வீதி,
திருக்கோணமலை.

*With Best Compliments from:-*

# STUDENT SHOPPING MART
# &
# PARADISE VIDEO

Professional Video Filming

Proprietor:- *D. George*

*T. PHONE:- 026 - 22597*

*312, Court Road,*
*Trincomalee.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசமய வளர்ச்சியும் அதன் வரலாற்றுப் பின்னணியும்

ஆ. நவரெத்தினம், அதிபர்,
தி/ஆதி கோணேஸ்வரா மகா வித்தியாலயம்,
தம்பலகமம்.

இந்து மதம் மிகத்தொன்மையானது.இதன் தொன்மையை கல்வெட்டுக்களும் அகழ்வாராய்ச்சிச்சான்றுகளும், தத்துவ நூல்களும், சமய நூல்களும் எடுத்துக் கூறுகின்றன. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கருதப் படும், சிந்து வெளி நாகரிகம் இந்துமத நாகரிகமாக இருக்க வேண்டுமென்று அகழ்வாராய்ச்சி நிபுணர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். மொஹஞ்சதாரோ, ஹரப்பா, முதலிய இடங்களில் அகழ்ந்தெடுக்கப் பட்ட நூற்றுக்கணக்கான சிவலிங்கங்கள் இதற்கு ஆதாரமாக உள்ளன.

சங்க இலக்கியங்களிலும் இதற்கான குறிப்புகள் காணப்படுகின்றன. புறநானூற்றில் காரிகிழார் என்னும் புலவர் பாண்டியன் பல்யாக சாலை முதுகுடிப் பெருவழுதியை "முட்கட் செல்வர்,நகர்வலம் செயற்கே இறைஞ்சுக பெரும நின்சென்னி" என்று சிவன் கோயிலை வலம் வரும்போது மாத்திரமே பாண்டியனுடைய தலை வணங்கு வதாக எனக் கூறியிருக்கிறார். இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் சிவன் திருமால், பலராமன், இந்திரன் கொற்றவை,முருகன் இவர்களுக்குக் கோயில் இருந்ததாக கூறியிருக்கின்றார். மணிமேகலையில் "நுதல்விழி நாட்டத்து இறையோன் கோயில்" இருந்ததாக குறிப்புகள் காணப்படுகின்றன.

மரத்தடியில் தோன்றிய கோயில்கள் பின்னர் களிமண், செங்கல் மரங்கள் போன்றவற்றால் கட்டப்பட்டமை யால் அவை நீண்டகாலம் நிலை பெற்றிருக்கவில்லை. பின்னர் பல்லவராட்சிக் காலத்தில் மலைகளையும் பெரும் கற்பாறைகளையும் குடைந்து கோயில்கள் அமைக்கப்பட்டன. திருச்சிராப்பள்ளி, சித்தன்ன வாசல், மாமல்ல புரம்,மர்மண்டூர் ஆகிய இடங்களில் அத்தகைய குகைக்கோயில்கள் காணப்படுகின்றன.

பல்லவராட்சிக் காலத்தில்தான் அப்பர், சம்பந்தர் முதலிய நாயன்மார்களின் சமயப்பணி தொடங்கி நடை பெற்றது. சங்கமருவிய காலத்தில் காரைக்காலம்மையார் முதலாழ்வார்கள் சைவ, வைஷ்ணவப்பணிகளை மேற் கொண்ட போதிலும் பல்லவர் காலத்திலேயே அதன் விரிவை நாம் காணமுடிகின்றது. இக்காலப் பகுதியில் கோயில்களுக்கு "தேவதானம்" என்ற பெயரில் மக்கள் நிலங்களை வழங்கினார்கள். கோயில்களுக்கு அருகில் மடங்களும் இருந்தன. மடங்களை மக்கள் குழுக்கள் கவனித்து வந்தன.மடங்களில் கலைகள் வளர்க்கப்பட்டன. கோயில்களில் பூசை, திருவிழாக்கள், விளக்கேற்றல், பழுதுபார்த்தல் ஆகிய பணிகள் நடைபெற்றன. பல்லவர் காலத்தில் பல்லாயிரக்கணக்கான இந்துக் கோயில்கள் இருந்தன. இக்கோயில்களுக்கு மக்கள் பல்வகைப் பொருட்களை வாரி வழங்கினர். நிலம், பொருள், ஆபரணங்கள் ஆகியவற்றைத் தானமாகக் கொடுத்தனர். இவற் றைக் கல்வெட்டுச் சான்றுகள் மூலம் அறிய முடிகின்றது.

சோழர் காலத்தில் சிற்பக்கலை சிறந்தோங்கி விழங்கியது. இசை, நடனம், கூத்து, ஓவியம் முதலாய கலை நிகழ்ச்சிகள் கோயிகளில் இடம் பெற்றன. மன்னரும் மக்களும் இவற்றில் ஆர்வம் காட்டினர். ராஜராஜசோழன், இராஜேந்திர சோழன் காலத்தில் சிற்பக்கலை சிறந்து விளங்கியது. தென் இந்தியக் கோயில்கள் இவற்றிற்கு சான்றாக உள்ளன. தஞ்சைப் பெரும் கோயில் அற்புதமான அமைப்பு உடையது. இதனைக் கட்டிவைத்தவன் இராஜராஜசோழன். சோழர் காலத்திலும் கோயில்களைச் சார்ந்து மடங்களும் காணப்பட்டன. மடங்களுக்குத் தலைவர்கள் இருந்தனர். இக்காலத்தில் இவர்களை மடாதிபதிகள் என அழைப்பர். இத்தகையவர்கள் பொறுப்பில் கோயிகளும் இருந்தன. அரச இதிகாரிகளால் கோயில்கள் கண்காணிக்கப்பட்டுவந்தன. கோயில் கணக்குகளும் நித்தியநைமித்திய காமிகப் பூசைகளும் இவர்களால் ஒழுங்காக மேற்ப்பார்வை செய்யப்பட்டன.

கோயில்களில் கதாகாலாஷேபகங்கள் நடை பெற்றன. பெரியபுராணம், பாரதம், இராமாயணம், முதலிய நூல்கள் இதில் இடம் பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயநகர் மன்னர், நாயக்க மன்னராட்சியில் கோயில்கள கட்டப்பட்டும் புதுப்பிக்கப்பட்டும் திருப்பணிகள் நடை பெற்றன. ஆதீனங்களும் மடங்களும் விரிவடைந்தன. முகமதிய படையெடுப்பால் அழிவுற்ற ஆலயங்கள் இக்காலத்தில் புதுப்பிக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்கள் இம்மடங்களில் சஞ்சம் புகுந்தனர். மக்களை ஆதரித்தனர். அவர்களுக்கு உண்டியும், உறையுளும், மருந்தும் கொடுத்தனர். சிறந்த கல்வி போதிக்கப்பட்டன. சமயக் கல்வியும், ஒழுக்கக் கல்வியும் மடங்களில் வளர்ந்தன. இக்காலப் புலவர்கள் கோயிற் புராணம், தல புராணங்களைப் பாடி பழைமையை வெளிக் கொணர்ந்து காட்டினர். இலக்கியங்கள் சமயச் சார்புடையனவாய் விளங்கின. தமிழ் நாட்டில் தோன்றிய ஆதீனங்களும், மடங்களும் அற நிலையங்களாகக் கருதப்பட்டன. மடச்சொத்துக்கள் வருவாய்களிலிருந்து இந்துமத நூல்கள் வெளியிடப்பட்டன. 1817 இல் கிழக்கிந்தியக் கம்பனியார் தமிழ் நாட்டை ஆட்சி செய்த போதிலும் கூட அவர்களால் இவ் அறநிலையங்கள் மேற் பார்வை செய்து பாதுகாக்கப் பட்டன.

இவ்வாறு வளர்க்கப்பட்ட அறக்கல்வி தமிழகத்தில் மட்டுமன்றி ஈழத்திலும் பரவத் தொடங்கிற்று. சுதந்திரத்திற்குப் பின் சமய நிறுவனங்களும், கல்வி நிறுவனங்களும் அறக் கல்வியில் ஆர்வம் காட்டின. இவ்வாறு தொன்மையும் சிறப்பும் வாய்ந்த இந்து மதம் காலத்திற்குக் காலம் ஏற்பட்ட வளர்ச்சியால் இன்று உலகளாவிய நிலையில் சிறந்து விளங்குகின்றது. வரலாற்று அடிப்படையிலும் தத்துவ அடிப்படையிலும் தொன்மை வாய்ந்த இந்து மதம் சமயப் பெரியார்களாலும் மன்னர்களாலும், ஆதீனங்கள் மடங்களாலும் பேணிப் பாதுகாக்கப்பட்டு வளர்ந்து வந்தன என்பதை நாம் நன்கு உணரலாம்.

## சக்தி துதி

ஈரேழு உலகத்தை இயங்கவைக்கும்
சக்தியம்மா
பாலர் நாம் கூடிநின்று பகர்ந்திடுவோம்
உன்புகழை
அரவணைப்பாய் அருள்புரிவாய் அளித்திடுவாய் கல்வியொடு
செல்வமும் வீரமும்
ஒன்பது நாள் நோன்பிருந்து விழாவெடுத்து
வணங்குகின்றோம்.
முதல் மூன்று தினங்களிலும் மலைமகளைப்
பணிந்திடுவோம்
இடைமூன்று நாட்களிலும் திருமகள் அருள்
வேண்டிநிற்போம்
கடைமூன்று தினங்களிலும் கலைமகளே
சிரம் தாழ்த்துகின்றோம்
"கல்வி" என்னும் செல்வத்தை வாரி
வழங்கிடம்மா.

செல்வன். கிருபாரட்ணம் யூட் மயூரன்
ஆண்டு 5A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்திற் சைவம்

சிவபூமி எனவும் ஈழநாடு எனவும் வழங்கப்பட்ட இலங்கைக்கும் சைவசமயத்திற்கும் மிகப் பழைய காலம் தொட்டு நெருங்கிய தொடர்பு இருந்து வருகின்றது. மிக பழைய காலத்தில் இலங்கை வேந்தனாகிய இராவணன் சைவ சமயத்தவன் என்றும், பல வேதங்களை ஓதியவன் என்றும் திருநீற்றில் நிரம்பிய அபிமானம் உள்ளவன் என்றும் திருஞானசம்பந்தமூர்த்திகள் அவனை புகழ்ந்து திருநீற்றை போற்றியுள்ளார். பஞ்சாக்கரப் பதிகத்தில்

"வண்டம ரோதி மடந்தை பேணின பண்டை இராவணன் பாடி யுயர்ந்தன"

என்று போற்றி சம்பந்தப்பெருமான் பாடியுள்ளார். மாணிக்கவாசக சுவாமிகள் ஓரிடத்தில் "அடிகமர் மண்டோதரிக்குப் பேரின்பம் அளித்த பெருந்துறை மேய பிரான்" என்று பாடியருளியுள்ளார். இராவணனிடமும் அவர் தேவியாரிடமும் இருந்த சிவ பக்தியும், சிவநெறி மரபும், சிவ வழிபாடும் அவர்களின் குடிமக்களிடம் இருந்தன. எனவே அக்காலத்திலே சைவ சமயத்தை விட வேறெந்தச் சமயமும் உண்டாகவுமில்லை, பரவவுமில்லை, நிலவவும் இல்லை என்பது வரலாற்று உண்மையாகும்.

இதனாலேயே இற்றைக்கு 1400 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த திருமூலர் "தமிழ் மண்டலம் ஐந்தும் தத்துவமாமே" என்று பாடியுள்ளார். அவர் குறித்த ஐந்து மண்டலங்களில் ஒன்று இலங்கையாகும். ஈழத்திலே மிகப்பழைய காலத்தில் சிவாலயங்கள் பல கட்டப்பட்டன. அவை ஈச்சரங்கள் என மக்களால் அழைக்கப்பட்டன. அவையாவன திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம், முனீஸ்வரம் என்பனவாகும். இப் பிரசித்தி பெற்ற கோயில்கள் இன்றும் இருக்கின்றன. திருஞானசம்பந்தரும். சுந்தரமூர்த்தி நாயனாரும் இலங்கையில் உள்ள திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகிய கோயில்களை புகழ்ந்து பாடியுள்ளனர். இத் திருப்பதிகங்கள் அழிந்து போகாமல் இருந்தது எமக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும். இவற்றை நாம் மறந்து போகவிடாமல் மனனஞ் செய்து வைத்தல் எமது முதற் கடமையாகும்.

இலங்கையை கைப்பற்றிய இராசராசன் என்பவன் திருமுறைகளை தொகுத்த பெருமைக்குரிய வனாவான் இவன் பொலநறுவையிலே சிவாலயங்களை கட்டுவித்தான். இவனுடைய மகனாகிய இராசேந்திரனும் இலங்கையில் உள்ள பல சிவாலயங்களுக்கு திருப்பணி செய்துள்ளான். இவன் செய்த திருப்பணிகள் யாவும் கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட்டுள்ளன. பின்னர் இலங்கையை பிற நாட்டினர் கைப்பற்றி ஆண்ட மையால் வட மத்திய மாகாணம், வட மாகாணம், கீழ் மாகாணம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட சிவாலயங்கள் அழிந்தன. தற்பொழுது ஆராய்ச்சிகள் மேற்கொண்டதன் காரணமாக அழிந்த சிவாலயங்கள் இருந்த இடங்களில் இருந்து சில சான்றுகள் எடுக்கப்பட்டுள்ளன. அந்நியர் ஆட்சி காலத்திலே அந்நியரால் சிவாலயங்கள் இடித்து அழிக்கப்பட்ட வேளையிலும் மக்கள் இறைவனை மறக்கவில்லை. இறைவனையும் அவன் அருள் மூர்த்திகளாகிய விநாயகர், வீரபத்திரர், சுப்பிரமணியர், வைரவர் முதலிய தெய்வங்களை வாயாலும், மனத்தாலும் தமது வீடுகளில் மறைத்து வைத்தும் வழிபட்டு வந்தார்கள். ஆறுமுக நாவலரின் முன்னோரான ஞானப்பிரகாசர் என்னும் பெரியார் பறங்கியருக்கு உணவு கொடுக்கும் பொருட்டு பசு கொடுக்க வேண்டும் என்பதால் இரவோடிரவாக இந்தியாவிற்கு ஓடிச்சென்று துறவு பூண்டு இறைவன் மீது பல புராணங் களை பாடியுள்ளார். அதே போல் அளவெட்டியில் இருந்த வைத்தியநாதர், வரணியிலிருந்து தில்லைநாதர் முதலானோர் தமிழ் நாட்டிற்கு சென்று தொண்டுகள் பல செய்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இறை வழிபாட்டுக்கு அனுமதி கிடைத்தது. வீழ்ச்சியுற்றிருந்த சைவ சமயம் எழுச்சி பெற தொடங்கியது. பல ஆலயங்கள் அமைக்கப்பட்டன. வண்ணார் பண்ணை வைத்திலிங்கச் செட்டியார் ஒரு சிவன் கோயிலை கட்டுவித்தார். இச் சிவன்கோயிலில் வைத்தீஸ்வர பெருமானும், தையல் நாயகி அம்மையும் கோயில் கொண்டுள்ளனர்.

ஆறுமுகநாவலருக்கு முன் தொடங்கிய கந்தபுராணம், திருவாதவூரர்புராணம், பெரிய புராணம் முதலியன எங்கள் ஊர்களில் படிப்பது வழக்கம். தற்காலத்தில் சைவ சமயம் பெரும் வீழ்ச்சி நிலையை அடைந்துள்ளது. இந்நிலையை மாற்ற தற்போது சில சிவ அன்பு கொண்ட அடியார்கள் சில போட்டிகளையும், வகுப்புக்களையும் இலவசமாக நடத்துகிறார்கள். இவர்களின் நோக்கம் சைவசமய சிறப்புக்களை வருங்கால சந்ததியிரான் தற்போதைய சிறுவர்கள் அறிந்திருக்க வேண்டும் என்பதே. இதனால் அதைப் பேணும் வகையில் பெரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள். எனவே பல அம்சங்களைக் கொண்டு மிகவும் பழைமையாக விளங்கி வந்துள்ள சைவசமயத்தை இளைஞர்களாகிய நாம் சிரத்தையோடு பேணிக்காப்பது எமது கடமைகளுள் ஒன்றாகும்.

"மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்."

இ. சஜீதன்
ஆண்டு 11A

## சரஸ்வதி தேவி

கல்வியின் கலைமகள்
கற்பூர தேவியவள்
கமலத்தில் வீற்றிருக்கும்
கலங்காத வடிவமவள்

வீணையின் இனிமையினால்
மேன்மை படைப்பவளே
உனை வேண்டி துதிப்போர்க்கு
கல்வியைக் கொடுத்திடம்மா

அம்புயத்தில் அமர்ந்திருக்கும்
அழகிய வாணியம்மா
நாமகள் கலைமகள் வாணி
நாமங்கள் பெற்ற நாயகி நீயம்மா

பிரம்மனின் ஆற்றலே நீயம்மா
பீதாம்பர நாயகி நீயம்மா
நாள்தோறும் நினைக்கவே
என்னாவில் வந்துறைந்திடுவாயம்மா

செல்வன். கௌரிபாலன் விஷ்ணுகாந்
ஆண்டு 5 B

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் புரிவாய் கோணேசா

பொங்கும் குரைகடல் சூழ்ந்த
எங்கள் திருக்கோணை நாதா
பொலிவுடனே வந்தெமக்கு
அருள் புரிவாய் திருநாதா
அங்கயற்கண் அம்மையொடு
இங்கிதமாய் அமர்ந்திருந்து
அடியார்வினை தீர்த்தெமக்கு
அருள்புரிவாய் கோணைநாதா

இயற்கையின் எழில் கொஞ்சும்
ஏற்றமிகு மலை அதிலே
இலங்கை வேந்தனாம்
இராவணன் வெட்டருகே
மருட்சி மிகு கண்களொடு
மான் கூட்டம் வலம் வரவே
விருப்புடனே வந்தெமக்கு
அருள்புரிவாய் கோணைநாதா

முத்துக்கள் நிறைந்த கடல்
முப்புறமும் சூழ்ந்தொழிக்க
கொத்துக்கள் நிறைந்த வாசப்
பொழிலதிலே ரீங்கார இசைகேட்க
எத் திக்கும் புகழ் பரப்பி
விளங்கிடும் கோணை நாதா
மாதுமையாள் சகிதம் நீ
வந்தெமக்கு அருள் புரிவாய்

தேவார முதலியாம்
திருஞானசம்பந்தரும்
பாவாரம் கொண்டு நினைப்
பாடினான் புகழ்சொல்லி
தேவாதி தேவர்களும்
முனிவர்களும் கூறும்
தெட்சணகைலாயம் உறைதேவா
பாங்குடனே வந்தெமக்கு அருள்புரிவாய் ஈசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவங்கள் தீர்த்திடுமாம்
பாபநாசதீர்த்தமும்
பக்தர்கள் போற்றிடும் கன்னியா
வெந்நீர் ஊற்றிலுமே
காலடிகள் பட்டாலே
வினைகள் ஓடோடிச் சென்று விடும்
கருணை கொண்டெமக்கு வந்து
அருள்புரிவாய் கோணேசா

✻

எத்திக்கும் புகழ் பெற்ற
ஈடில்லாத் துறைமுகமும்
மிக்க நலனுடைய
வளங்கள் பல கொண்டு
அழகு தமிழில் அருணகிரி
இசைகேட்டாய்
அன்போடு எனை ஏற்று
அருள் புரிவாய் கோணேசா

✻

ஒப்பற்ற திங்களை நீ
உயர் சடையில் வைத்து
ஒப்புவமை இல்லா
திருப்புகழைப் பெற்று
எப்புவியிலுள்ளோரும்
ஏத்தியேபாட
இன்றெமக்கு முன் வந்து
அருள்புரிவாய் கோணேசா.

ஆக்கம். **சௌந்தரராஜா, டினேஸ்ராஜ்**
ஆண்டு 11 D.

**திவ்விய மாதாவே! மக்களிடமிருந்து கௌரவத்தை யான் வேண்டேன். சரீர சுகத்தை நான் வேண்டேன். கங்கை, யமுனையின் நித்திய சங்கமம் போன்று என்னுடைய ஜீவன் உன்னுள்ளே பாய்வதாகுக, இதை மட்டும் நீ அருள்வாயாக. தாயே, என்னிடத்து பக்தி இல்லை. நான் தீனன், எனக்கு சகாக்கள் இலர். எவர் புகழும் எனக்கு வேண்டாம். உன்னுடைய பாத கமலங்களிலே என்னுடைய மனம் சதாகாலமும் லயித்திருக்க மட்டும் நீ அருள்புரி.**

**ஸ்ரீ ராமகிருஷ்ணர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளுணர்ந்து சொல்வார் சிவபுரத்துள் செல்வார்

திரு. க. கெஜரெத்தினம்
(ஓய்வு பெற்ற அதிபர்)

கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

என்பது வள்ளுவம்

அழித்துப் பிறக்கவொட்டா அயில் வேலன் கவியை அன்பால்
எழுத்துப் பிழையறக்கற்கின்றீ லீரிலைஎரிமூண்டதென்ன
விழித்துப் புகையெழப்பொங்கு வெங்கூற்றன் விடுங்கயிற்றாற்
கழுத்திற் சுருக்கிட்டிழுக்கு மன்றோ கவிகற்கின்றதே

என்பது கந்தரலங்காரம்

சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்துள் உள்ளார் சிவனடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

என்பது மாணிக்கவாசகனார் சிவபுராணம். இவற்றை நாம் ஆராயப்புகின் வள்ளுவம் சொல்வது கற்க வேண்டியதைக் குற்றம் நீங்க அதாவது சந்தேகம் நீங்கக்கற்று அதன்படி ஒழுகு என்பதாகும். கந்தரலங்காரம் படிப்பதை எழுத்துப்பிழை நீங்கப் படிக்க வேண்டுமென்றும். சிவபுராணம் சொல்வது சொல்லின் பொருளறிந்து ஓதவேண்டும் அவர்கள் தான் சிவனடிக்கீழ் செல்வார் என்றும் உரைக்கின்றது.

ஆகவே மாணவர் சமுதாயத்தை வழிநடத்திச் செல்லும் ஆசிரியர்களும் வளர்ந்த மாணவர்களும் மேற்காட்டிய பாடல்களில் பொருளில் கண்ணோட்டம் செலுத்தவேண்டியது அவசியமாகிறது.

சிறுவர்கள் மட்டுமல்ல வளர்ந்தவர்கள் கூடப்பிழையாக ஓதும் தேவாரதிருவாசகம் முதலான தோத்திரப் பாடல்களில் நான் அவதானித்த சில பாடல்களை இங்கு உதாரணத்திற்காகக் கீழே தருகிறேன்.

1. விநாயகர் புராணம்:-

"மண்ணுலகத்தினிற் பிறவிமாசற எண்ணிய பொருளெலாம் எளிதில் முற்றுறக்
கண்ணுதலுடையதோர் களிற்று மாமுகப், பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்"

இதில் "எளிதில்" முற்றுற என்பதை "எழுதில்" முற்றுற என்று படிக்கின்றார்கள் எளிதில் முற்றுற என்பது இலகுவாக நிறைவேறுவதற்கு என்றபொருள் தரும். ஆகவே எளிதில் என்பதுதான் சரியான பொருளுடையது

மூன்றாவது வரியில் "களிற்றுமாமுகப் பண்ணவன்" என்பதைக் "களிற்றில் மான்முக" என்று படிக்கின் றார்கள். "களிற்று மாமுகம்" என்பது யானையின் பெருமைக்குரிய முகம் என்ற பொருள் தொனிப்பது "களிற் றில் மான்முகம்" என்றால் யானையில் மான்முகம் எனப்படும். எனவே "களிற்று மாமுகப்பண்ணவன்" என்பது தான் விநாயகப் பெருமானைக் குறிக்கும்.

2. அம்மனுக்குறிய புராணம்:-

செறிதரும் உயிர் தொறுந்திகழ்ந்து மன்னிய
மறுவறு மரனிட மரபின் மேவியே
அறுவகை நெறிகளும் பிறவுமாக்கிய
இறைவிதன் மலரடி இறைஞ்சியேத்துவாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் மூன்றாவது வரியாகிய "அறுவகை நெறிகளும் பிறவுமாக்கிய" என்பதில் "பிறவுமாக்கிய" என்பதை "பிறவுமாகிய" என்று படிக்கிறார்கள். இறைவிதான் அறுவகை நெறிகளையும் பிறவற்றையும் ஆக்கியவரேயல்லாமல் தான் அறுவகை நெறிகளும் பிறவும் ஆகியவள் அல்ல. ஆகவே "பிறவும் ஆக்கிய" என்று படிப்பதே முறையாகும். கந்த புராணத்தில் இப்புராணம் "ஆக்கிய" என்றே உள்ளது. ககர மெய்யெழுத்து ஒன்று கெட்டதால் பொருள் விளக்கம் அதிக வித்தியாசமாகிவிட்டது.

3. சரஸ்வதிக்குரிய புராணம்

தாவறுமுலகெலாந் தந்த நான்முகத்
தேவுதன் துணைவியாய்ச் செறிந்த பல்லுயிர்
நாவு தொறிருந்திடு நலங்கொள் வாணிதன்
பூவடி முடிமிசை புனைந்து போற்றுவாம்.

இப்புராணத்தைப் படிக்கும் சில சிறுவர்கள் "நான்முகன் தேவுதன் துணைவியாய்" என்று படிக்கின்றார்கள் இதனால் நான்முகன் வேறு, தேவு என்பவர் வேறு என்றாகும் அந்தத் தேவுதன் துணைவிதான் சரஸ்வதி அந்தத் தேவுயார் என்றசந்தேகமான பொருளை உணர்த்துகிறது. நான்முகத்தேவு எனும் போது நான்கு முகங்களையுடைய பிரம தேவரின் மனைவி என்று சரியான பொருள் உண்டாகிறது.

4. திருப்புகழ்

I "ஏறுமயில் ஏறிவிளையாடு முகமொன்றே" என்னும் திருப்புகழில் "குன்றுருவ வேல் வாங்கி நின்றமுகமொன்றே" என்பதை "குன்றுருக" என்று படிக்கின்றார்கள் குன்று என்பது கிரௌஞ்ச மலையை. அதனை வேல் பிளந்து உருவிப்போனதேயல்லாமல் அம்மலையை உருகச்செய்யவில்லை. ஆகவே "குன்றுருவ" என்றே படிக்க வேண்டியது. அடுத்த வரியில் "மாறுபடு சூரனை வதைத்த முகமொன்றே" என்பதைச் "சூரரை வதைத்த முகமொன்றே" எனப்படிக்கிறார்கள். சூரன் ஒருவன்தான் அவனை வதைத்த முகமொன்றுதான் சூரர் பலர் இருக்கவில்லை மற்றவர்கள் அசுரர்கள் தாரக + அசுரன், தாரகாசுரன், சிங்கமுக+ அசுரன் சிங்கமுகாசுரன் எனப்படும். அவர்களையும் வதைத்தாலும் "சூரன்" என்ற பெயரில் ஒருவன்தான் முருகனை எதிர்த்து நின்று வதைக்கப்பட்டான். ஆகவே "சூரனை வதைத்த முகமொன்றே" என்பதே சரியானதாகும்

மேலும் இதே திருப்புகழில் வரும் "கூறுமடியார்கள் வினை தீர்க்குமுகம் ஒன்றே" என்பதைக் "கூறுமடியார்கள் வினை தீர்த்தமுகம் ஒன்றே" எனப் பலரும் படிப்பதுண்டு. இத்திருப்புகழில் கூறப்படும் முருகனது அருட செயல்களான சூரனை வதைத்தமை, வள்ளியை மணம்புணர வந்தமை என்பவை நிகழ்ந்து முடிந்த சம்பவங்கள். ஆதலால் அவை இறந்தகால எச்சவினைகளாக "வதைத்த" "வந்த" என வந்தமை பொருந்தும் ஆனால், அடியார்களது வினையைத் தீர்த்தலாகிய செயலை முருகப் பெருமான் என்றும் செய்துகொண்டேயிருப்பதனால் "கூறுமடியார்கள் வினை தீர்க்குமுகமொன்றே" என்றே அருணகிரிநாதரும் பாடியுள்ளார். எனவே நாமும் அப்பொருள் உணர்ந்து அங்கனமே பாடுவோமாக.

II. இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

இதில் "பிறவாகித் திரமான" என்பதைப் "பிறவாகித்திறமான" எனப்படிக்கிறார்கள் திரமான என்பது ஸ்திரமான என்னும் வடமொழியில் முதல்குறையால் "ஸ்" என்னும் வடஎழுத்துக் கெட்டுத் திரமான என்று நிற்கிறது. ஸ்திரம் என்பது நிலையான என்னும் பொருளை உணர்த்துவது. நிலையான வாழ்வு என்பது, பிறந்து இறக்கும் வாழ்வு இல்லாது பேரின்பமான முத்தியில் நிலைத்து நிற்கும். வாழ்வு. அதனையே அருணகிரி கேட்கின்றார். அவ்வாறின்றித் திறமான வாழ்வு என்றால், அது எவ்வாறான திறம்? எனக்கேட்டு விடையில்லாமை காணலாம். இன்னும் சிவபுராணத்திலும் சில பிழைகள் மாணவரும், பிறரும் விடுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மலஞ்சோரும் ஒன்பது வாயிற்குடிலை" என்பதைப் "பழஞ்சோறும் ஒன்பது வாயிற் குடிலை" என்கிறார்கள் மலஞ்சோரும் ஒன்பது வாயிற்குடிலை என்பது அழுக்குகள் வடிகின்ற ஒன்பதுவாயில்கள் உடைய உடம்பை என்று பொருள் தருவது. பழஞ்சோறும் என்றால் பொருந்துமா?

"கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க" என்பதைக் "குருமனிதன் தாள்வாழ்க" என்கிறார்கள் குருமணி ஞான ஆசிரியர்களுள் இரத்தினம் போன்றவர். குருமனிதன் என்னும் போது குருவாகிய மனிதன் என்று பெருமைப்பாடு குறைகிறது.

ஆகவே எழுத்துப்பிழைகள் விடுவதால் சொற்கள் மாறுபாடு அடைகின்றன. சொல் மாறும் போது சொல்லிய பாட்டின் பொருள் மாறுபடுபகின்றது. இதனால் பொருளுணர்ந்து சொல்லாமை ஏற்படுகின்றது. பொருள் உணர்ந்து சொல்லும்போதுதான் இறைவனிடத்தில் பக்தி உண்டாகிறது. ஆகவே பொருளுணர்ந்து சொல்லாவிடில் சொல்லுவார் சிவபுரத்தில் உள்ளார் சிவனடிக்கீழ்ச் செல்லாமை நிகழலாம்.

ஆகவே ஆசிரியர்களும், பெற்றோரும், மாணவர்களைத் தோத்திரம் ஓதும் போது கவனித்துத் திருத்தி நல்ல வழிகாட்டல், மேலான சிவத்தொண்டாகும் என்பதை எண்ணி உதவுவார்களாக.

## வாணி விழா

வாணி விழா வந்ததுவே
வாசமலர் பூத்ததுவே
வாசமிகு வசனங்கள்
வந்து கவி சேர்ந்ததுவே

தேசமெலாம் பொலிவிழந்து
குருதிமழை பொழிகையிலே
தேனமுத மணம்பரப்பி
வாணி விழா வந்ததுவே

இன்னமுத அவல் கடலை
இன்னிசையும் விழாத்திடலும்
கண்ணெதிரே அழிவுகளும்
அனாதையாய் பல சிசுவும்

வாணிவிழா போற்றி செய
பாரதியின் கவிநடையும்
தேனெனவே எண் திசையும்
தெவிட்டாத கவித்தமிழும்

சோடனைகள் மேடைகளும்
சேர்ந்த கடல் சனக்கூட்டம்
நான் தந்த காணிக்கை
வாணி அவள் ஏற்றிடுவாள்

செல்வன். முரளிதரன் மயூரன்
ஆண்டு 8C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

ஆக்கம், ஆற்றல், அறிவு மூன்றையும் முறையே அருளவல்ல இலக்குமி, காளி, சரஸ்வதி, ஆகிய தெய்வங்களை வழிபடுகின்ற காலப்பகுதி நவராத்திரி ஆகும்.நவராத்திரி என்னுஞ் சொல்லுக்கு வீடுகள் தோறும் கலை விளங்க கொலு அமைத்து ஒன்பது இராக்களும் முப்பெரும் சக்திகளுக்கும் விழா எடுப்பது என்பது பொருளாகும். உற்சவம் பத்து நாட்கள் நடைபெறுவதனால் இதனை வடநாட்டார் "தசரா" என அழைக்கின்றனர்.

புரட்டாதி மாதத்துப் பூர்வபட்ச பிரதமைத் திதி முதலாக உள்ள ஒன்பது இரவுகளும் இறுதிப் பத்தாம் நாள் விஜயதசமியும் சேர்ந்து பத்து நாட்கள் உற்சவம் நடைபெறும். முதல் மூன்று நாட்களும் வெற்றியைத் தருகின்ற துர்க்கையை வழிபடுவர். துர்க்கை வீரத்தின் உறைவிடமானவள். அன்னையிடம் தாமசகுணம் முக்கியமானதால் சகுணப்பிரம்மம் அதர்ம இருளை அழிக்கும் மகேஸ்வரர் ஆகி இவரது சக்தி, காளி, சாமுண்டி எனப் பெயர்களைப் பெற்றாள்.

அடுத்த மூன்று நாட்கள் செல்வத்தை அருளவல்ல இலக்குமிக்குரியதாகும். அன்னையின் குணங்களில் சத்துவம் முதன்மை என்பதால் சகுணப் பிரம்மம், உலகைக் காக்கும் மகாவிஷ்ணு ஆகி இவரது சக்தி வைஷ்ணவி, நாராயணி, இலக்குமி எனப் பெயர் பெறுகிறாள். வாழ்க்கைக்கு முக்கியமான சக்தியின் ஓர் வடிவம் நாராயணி ஆவாள்.

கடைசி மூன்று நாட்கள் சரஸ்வதியை வழிபடுவர். அன்னையிடம் ராஜஸகுணம் முக்கியமாகி சகுணப் பிரம்மம் படைத்தல் தெய்வமான பிரம்மாவாகி பிராம்மணி சரஸ்வதி நான்மறை நாயகி எனப் பெயர் பெறுகிறார். அறுபத்து நான்கு கலைகளுக்குரிய கடவுளான கலைமகளை வேண்டி கல்விக் கூடங்களிலும் தொழில் நிலையங்களிலும் விழா எடுப்பார்கள். வெள்ளைத் தாமரைப் பூவில் வீற்றிருக்கும் சரஸ்வதி மாதா, தீங்குரல் பாட்டிலும் மக்களின் மழலையிலும் கீதம் பாடும் குயிலின் குரலிலும், கிளியின் நாவிலும் இருப்பிடம் கொள்வாள்.

இவ்வாறாக ஒன்பது நாட்களும் அன்னையின் முப்பெரும் விழாவினை முடித்து பத்தாம் நாள் விஜய தசமியில் ஏடு தொடக்குதல் போன்ற வித்தியாரம்ப நாட்கள் நடைபெறும். நவராத்திரியில் விழா முடிவுறும்.

ஆற்றல், ஆக்கம், அறிவு ஆகிய மூன்றையும் அருள வல்ல காளி, இலக்குமி, சரஸ்வதி ஆகிய தெய்வங்களான சக்தி வழிபாடு பழைமை வாய்ந்ததாகும். கிருதயுகத்திலே பக்தியில் சிறந்த சுகேதன் எனும் அரசன் தனது இராச்சியமிழந்து மனைவியுடன் வனம் சென்ற போது அக்கிரசன் என்னும் இருடி ஒருவர் நவராத்திரி பூஜாமகிமையையும் அதன் முறையையும் உபதேசித்தார். சுகேதனும் பக்தியுடன் நவராத்திரி பூஜை செய்து தனது இராச்சியத்தைப் மீளப்பெற்றான் என்பது புராண வரலாறு.

தாயின் தன்மையுள்ள சக்தி வழிபாடு உலகம் முழுவதும் கொண்டாடுவது யாவரும் அறிந்ததே நவராத்திரி பத்து நாட்களும் தெய்வீகம் நிறைந்த கலைத் திருவிழா எனின் மிகையில்லை இப் புனித நாட்களில் விரதம் அனுஷ்டித்து தூய்மையாக மனமுருகி பாடல்பல பாடி இம்மையிலும், மறுமையிலும் இன்பம் தரவல்ல சக்தியின் அருள் பெற்று வாழ்வோமாக. மனித வாழ்வுக்கு இன்றியமையாத வீரம், செல்வம் அறிவு மூன்றும் அருளவல்ல முப்பெரும் தேவிகளையும் போற்றி வணங்குவதால் உலக வாழ்க்கை சிறப்புற அமையும் என்பது மிகத் தெளிவாகும்.

செல்வன். சரவணபவன் பரிஷித்

12 கலைப்பிரிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from:-*

# DILKA CREAM HOUSE

**Agent For:- Elephant House Products, Fiesta Ice Cream, News Papers & Bakers**

Proprietor:- S. Sriskantharasa

☎ 026 - 22709

No. 256 Thirugnanasampanther Street,
Trincomalee.

Enjoy Your Stay in Trincomalee at

# MANSION HOTEL

No. 23 Main Street,
Trincomalee.

T. P. 026 - 22745

- ROOMS WITH ATTACHED & COMMON BATH TOILETS
- ALL TYPE OF MEALS
- RESTAURANT
- TRANSPORT FACILITIES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாளின் கூர்மையை விட தாயின் கண்ணீருக்கு சக்தி அதிகம்

*With Best Compliments from:*

# DOLLAR AGENCIES

General Merchants, Wholesale & Retail

Transporters

**89, People's Park,**
**Colombo - 11.**

T. P. 01 - 433505

**78, 80, Main Street,**
**Trincomalee.**

T. P. 026 - 22716

026 - 22253

With Best Compliments from;

# St. Anthony's Consolidated Ltd.

*Office:*
76, Post Office Road,
Trincomalee.
T. P 026 - 22117

*Head office:*
516, Sri Sangaraja Mawatha,
Colombo - 10
T. P. 324261 - 5 LINES.

Telex : 22684 - Sancon Ce, Fax:: 94 -1 -446554

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தியின் மகிமை

"அகிலமெல்லாம் அணைத்து ஆளும் அன்னையவள் ஐந்தொழிலுக்கும் கருத்தா அவளே"

கருத்தாவாகிய சிவன், கணக்கிலடங்கா திருவுருங்களில் தோன்றி இவற்றை நடத்தினாலும் சக்தியின்றிச் சிவம் தனித்து இயங்காதாம். " சக்தியின்றிச் சிவன் இல்லை " என்பதன் மூலம் சக்தியின் வல்லமையையும், சிறப்பையும் உணர முடிகிறது. வானகம் முதல் வையகம் வரை சக்தியின் பிரவாகம் பரிணமித்திருப்பதை நாம் நாளாந்த வாழ்வில் காண முடிகிறது.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய தமிழ்க்குடிகளிடமே சக்தி வழிபாடு இருந்து ள்ளதாக சிந்துவெளிநாகரீகம் சான்றுபகர்கின்றது. ஆராய்விற்குட்படாததும், அளவிட முடியாததுமான சக்தியின் வல்லமையை கூறவும் முடியுமா?

உலகின் அன்புகள் அனைத்திலும் தாய்மை அன்பே சிறந்தது. தாய்நாடு, தாய்மொழி போன்று சக்தியை யும் அன்னை வடிவில் காண்கின்ற தன்மையை நோக்கினால் எல்லா அன்பையும் விட தாய்மை அன்பே சிறப் பிடம் பெறுகின்றது." தாயிடம் இறைஞ்சிப் பெறமுடியாததும் ஏதுமுண்டோ!

இத்தகைய தாய்மைக்கு முதலிடம் கொடுப்பது தங்கத்தமிழர் பண்பாகும். " வேண்டுபவர்கு வேண்டியவை வேண்டும் நேரம் கொடுத்து அபயம் அளிப்பவள் அன்னை". நிலத்தின் அடியில் உள்ள நீரை கிணறு, குழாய்க் கிணறு என்பன மூலம் எடுத்துக் கொள்கிறோம். அவ்வாறே அவனி முழுதும் வேண்டியதை பெற்றுக்கொள்ளவும் அவனி முழுதும் காக்கும் புவனியவளை போற்றும்முகமாகவும் முப்பெரும் தேவியராக நவராத்திரி விழாவில் வழிபடுகின்றோம்.

தனம் தரும் தேவியவள் சாந்த சொரூபியாக செந்தாமரைப் பூவில் இலக்குமியாக அமர்ந்திருக்க, சினம் கொண்டு காளியவள் துர்க்கையாக துட்டரைத் துவசம் பண்ண, மனம் கொண்ட கல்வி தரும் மகிமா அவள் வெண்டாமரையில் காட்சி கொடுக்கின்றாள். சரஸ்வதியவள் (இவ்விழாவில் வீரத்திற்குச் அதிபதியாக நின்று துர்க் கையாகவும், தனம் தரும் தேவியவள் சாந்த சொரூபியாக செந்தாமரை பூவில் அமர்ந்து இலக்குமியாகவும், கல்வியறிவை வழங்குபவளாக வெண்டாமரை பூவில் அமர்ந்து சரஸ்வதியாகவும் காட்சி கொடுக்கிறாள்.) கரங்க ளில் விளங்கும் ஏடு, கானம் இசைக்கும் யாழ், செபமாலை இவையனைத்தும் அவள் அழகிற்கு மேலும் மெரு கூட்டுவனவாம்.

'இத்தகைய வடிவங்களைப் பூசித்து மானிடர் தம் வாழ்வில் மாண்பு பெற முயற்சிக்கின்றனர். இத்தகை சக்தி வழிபாடே நவராத்திரி வழிபாடாகும். நவம் என்பது ஒன்பதைக் குறிக்கும். புரட்டாசி மாதத்தில் அமாவா சையை அடுத்து வரும் ஒன்பது நாட்களும் தேவி அருளைப் பெற பெரும்பாலோர் வழிபடும் நாட்களே நவராத்திரி விரத காலமாகும். புரட்டாதி மாதத்தில் சூரியன் கன்னிராசியில் பிரவேசிப்பதால் கன்னிமாதம், பெண் தெய்வத்திற்குரிய மாதம் என்பதும் இன்னுமொரு சிறப்பாம்.

பட்டமரம் துளிர்ப்பதும், வெப்பத்தால் வாடும் வையகம் வான்மழைகண்டு மகிழ்வதும் - இக்கன்னி மாத்தில் தான், இவ்வாறு புகழாரம் சூட்டப்படும் இக்கன்னி புரட்டாதி மாதத்தில் நவராத்திரியும் வருவது ஈண்டு குறிப்பிடத் தக்க அம்சமாகும்.

பேராண்மை நல்கும் பெருந்தேவி காளிக்கு முதல் மூன்று நாட்களும், வையகத்தோர்கு வாரி வழங்கும் திருமகள் இலக்குமிக்கு அடுத்த மூன்று நாட்களும், அள்ள அள்ளக் குறையாத கல்விச் செல்வத்தை வழங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைமகள் சரஸ்வதிக்கு இறுதி மூன்று நாட்களும், பத்தாம் நாள் விஜயதசமியன்று ஆறுபத்துநான்கு கலைக ளுக்கும் ஏடு தொடக்கும் வைபவமும், மகிடாசுர சங்காரம் என்னும் மானம்பூ விழாவும் கொண்டாடப்படுகிறது.

அத்துடன் விஜயதசமியன்று வித்யாரம்பமும், ஆயுத பூசையும், பாடசாலைப் புத்தகங்களை கலைமகளின் பார்வை படியும் வண்ணம் பூசையில் வைப்பதும் தற்போதும் காணக்கூடியதாகவுள்ளது.

தென்இந்தியாவிலே இவ் ஒன்பது நாட்களும் பொம்மைக் கொலு வைத்து வழிபடுவர். சுமங்கலிகள், கன் னிப்பெண்களை அழைத்து ஒன்பது நாட்களும் பஜனை செய்வர். சில பகுதிகளில் அவ் ஒன்பது நாட்களும் ஒவ் வொரு பருவமட்டத்திலான பெண்களை தேவியின் அம்சங்களாக பாவனை செய்து தியானித்து வழிபடுவர்.

எங்கு எவ்வாறு கொண்டாடினாலும் எதிர்பார்ப்பு ஒன்றுதான். அது ஆக்குபவளும், அழிப்பவளும், அன்னை பராசக்தியே என்பதாகும்.

இச்சக்தியின் அருட்திறமானது அளவிடற்கரியது. பக்தியே பெரிதென்று சக்தியவளை சிந்தித்திருந்தவர் அபிராமிப்பட்டர். அவர் தடுமாற்றத்தால் திதி மாறிச் சொல்ல அதனால் ஏற்பட்ட இக்கட்டான நிலையிலிருந்து பக்தனைக் காப்பாற்ற அன்னையவள் நிலவெறிக்கச் செய்யவில்லையா? அமாவாசையன்று அன்னை அருளால் அம்புலி தோன்றிய அற்புதத்தை எழுதவும், வார்த்தையுண்டோ?

அபிராமி அந்தாதி என்னும் பாமாலை சூடியவள் பார்குளிர காரிரவு ஒன்பதிலும் கருணை நல்கிடுவாள்,

"காடு வாழ்ந்து மாடு மேய்த்து காளியன்றி வேறொன்றும் அறியாத மட்டியை அன்னையவள் மகாகவி காளிதாசர் ஆக்கவில்லையா! சாகுந்தலம் என்னும் காவியம் பெறவில்லையா?"

இம் மகிமைகள் கொண்ட அன்னையவள் அருள் பெற உண்மை அன்பே போதுமானதாம். எனவே அற்பு தங்கள் மூலம் நற்கதிஅடையவைக்கும் ஆதிசக்தியவள் அருள் வேண்டும் என நாமும் இறைஞ்சி நிற்போம்.

ஆக்கம்:- இராமச்சந்திரன். நிருசாந்
ஆண்டு - 12 வர்த்தகம்

பாமரர்களாகிய பொதுமக்களை வாழ்க்கைப் போராட்டத்திற்குத் தகுதி பெற்றவர்களாக இருக்க உதவி செய்யாத கல்வி, ஒறுதியான நல்ல ஒழுக்கத்தையும், பிறருக்கு உதவி புரியும் ஊக்கத்தையும், சிங்கம் போன்ற மன உறுதியையும் வெளிப்படுத்தப் பயன்படாத கல்வி, அதைக் கல்வி என்று சொல்வது பொருத்தமா? எத்தகைய கல்வி தன்னம்பிக்கைளைத் தந்து ஒருவனைத் தனது சொந்தக் கால்களில் நிற்கும்படி செய்கிறதோ, அதுதான் உண்மையான கல்வியாகும்.

*சுவாமி விவேகானந்தர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திக்கக் கூடாதா......?

திருமதி. சித்திதேவி பத்மநாதன்
சேவைக்கால ஆலோசகர் (தமிழ் மொழி)

வீட்டின் அமைப்பிலே முக்கியத்துவம் பெறுவது, காண்போர் மயங்கும் கவினுறு அழகு என்பதை விட அதன் உறுதியான அத்திவாரமே அம்மனைக்கு மாண்பும், மதிப்பும் அளிக்கும். இன்றைய காலகட்டத்தில் அத்திவாரமிடப்பட்ட பிழைபாட்டால் பல மாடிக்கட்டிடங்கள் இடிந்து, உயிர்களை நூற்றுக்கணக்கில் பலிகொண்டசம்பவங்கள் நாமறிந்ததல்லவா?

மனித வாழ்க்கை - பல வகையில் ஏனைய உயிர்வாழ்க்கையிலும் உயர்ந்தது. எனக்கண்ட எம் முன்னோர் வாழும் முறையை நமக்கு வகுத்துத்தந்து சென்றுள்ளனர். பிரமச்சர்யம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என அவை நான்காகும். இதில் வாழ்வின் அத்திவாரம் போன்றது பிரமசாரியம் வேறொரு வகையில் சொன்னால் இன்றைய மாணவர் சமூகமே அதன் வாழ் முறையே பிரமச்சரியம் என விளக்கப்படுகிறது.

### மாணவர் பருவம்

வாழ்க்கைக்கு அத்திவாரமாயமைவது இப்பருவமே. ஆயுள் முழுவதற்குமே அது உயிர் ஊட்டுகிறது. கலைகள் பயில்வதற்கு இளமைப் பருவமே சாலச் சிறந்தது. புதிதாக வனைத்த சட்டி போன்றது இளமைப் பருவம். அப்போது அதன் மீது பதிப்பிக்கப்படும் உயர்ந்த எண்ணங்களும், சிரிய இயல்புகளும் என்றைக் கும் மாறா. இன்றைய அறிஞர்களின் ஏகோபித்த கருத்து, உடல் உழைப்பை ஒட்டிய தொழில் ஆடவர், மகளிர் ஆகிய இருபாலார்க்கும் வேண்டப்படுவது என்பதாகும்.

### இன்றைய கல்வி முறை

இதை விட முக்கியமானதொரு கோட்பாடு முன்னைய நாள் குருகுலக்கல்வியில் பேணப்பட்டு வந்தது. "மானிட வாழ்க்கையானது, பரஸ்பர உதவியை அடிப்படையாகக் கொண்டது" என்பதே அது. ஆனால் இன்றைய கல்விமுறையில் ஒரே போட்டிமயம். கல்வியானது சேவையாய் இருந்தது மாறி போட்டி மயமாய் மாறி இருக்கிறது. என்னென்ன முறைகளில் பிறரைவிடத் தாம் மேலான அந்தஸ்து வகிக்க முடியும் என்பதுவே இக் காலத்தவர் பெறும் பயிற்சியாகும்

### சத் – சங்கம் ( நல்லாரிணக்கம் )

பண்டைய கல்வி முறையில் குணசீலத்தை வளர்ப்பதில் கவனம் முழுவதும் செலுத்தப்பட்டது. ஒழுக்கமும் உயர்குணமும் உடையார்க்குப் பிறயாவும் உண்டு. இவை வெறும் ஏட்டுக்கல்வியால் வருவதன்று. ஒருவனுடைய புனித வாழ்வானது பலர் புனிதம் பெறுதற்குத் தூண்டுகோலாகின்றது. நலம் பெறுவதற்கு நல் லாரிணக்கம் இன்றியமையாதது. வெள்ளைத்துணி தோய்க்கும் சாயம் எதுவோ அதை ஏற்பது போன்று சிறுவர் மனது சகவாசத்திற்கேற்ப அமைகிறது. மேன்மையனைத்துக்கும் உறைவிடமான ஆசிரியர்களோடும். ரிஷிகளோடும் மாணவர், ஒன்றாக குருகுலவாசஞ் செய்தனர். காந்தத்தினை அணுகிய இரும்பு, காந்தம் பெறுவதுபோல மாணாக் கர் தம் குருவின் மாண்புகளைப் பெறலாயினர். புலனடக்கம், தொண்டுபுரிதல், பிறர்க்கென வாழ்தல் என்றிவை மலரது மணம் கமழ்வதுபோல அவர்களிடம் இயல்பாக அமையலாயின. உலையில் இட்ட இரும்பு துரு நீங்கப் பெறுவது போன்று, சத் - சங்கத்தால் தீக்குணங்களெல்லாம் பறந்தோடின. அஹிம்சை, பொறுமை, தபசு முதலிய தெய்வத்தன்மைகள் என்றைக்கும் மாறாவண்ணம் மனதிற் படிந்தன. வாழ்க்கை இனிது பண்பட்டபிறகு ஆத்ம சாதனம் பயிலுவிக்கப்பட்டது. அத்தடன் சமுதாய வாழ்க்கைக்குத் தேவையாயிருந்த தொழில்கள் பல கற் பிக்கப்பட்டன. தூய உள்ளம் அலர்ந்து ஞான ஒளிவீசும் முகவிலாசம், எக்காரியத்தையுஞ் செய்வதற்கெனப் பயிற்சி பெற்ற உடல், ஆகியவைகளோடு அவ்விளைஞர் திகழ்ந்தனர். இவர்கள் பிரமச்சாரியம் என்ற மாணவப் பருவத்தில் இப்படி பயிற்சி பெற்ற பின்பே இல்லறம் என்ற இரண்டாம் படியில் சமூக வாழ்க்கையில் பிரவேசிக்க அனுமதியையும், ஆசிர்வாதத்தையும் பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உடலும், உளமும்**

பொருளை மிகப் படைத்திருப்பதாலேயே ஒரு தேசம் மேலானதாய் விடாது. செல்வம் சேமிப்பதும், இராஜ்யம் நிறுவுவதும் பெரிதல்ல. இகலோக வாழ்வுக்கு இவையாவும் வேண்டப்படுவன எனினும், இவைகளை நன்னெறியில் பயன்படுத்தவல்ல உத்தமர்களே இவைகளுக்குப் புனிதமும் பண்பும் வழங்குகின்றனர். தமது தேசியக்கல்வியின் குறிக்கோள் மக்களை மிகமேலோர் - தேவர்கள் போன்று ஆக்குவதே.

நமது உடல், உளம் இவை நெருங்கிய தொடர்புடையவை. சரீரத்தில் உண்டாகும் மாறுதல் உளத்தையுந் தாக்குகிறது. உடல் வளர்ந்து பக்குவமடையும் பருவம் குமரப்பருவமாகும் இது இரு பாலர்க்கும் பொதுவானது.

ஏறக்குறைய பன்னிரண்டு முதல் பதினாறு வயதுக்குள் இந்தப் பருவ மாற்றம் நிகழ்கிறது. உடலின் மிகச் சிறந்த உறுப்பு மூளை. தாதுக்கள் அனைத்தின் சாரம் என்றே அதைச் சொல்லலாம். மண்டையோட்டினுள் அது மிகப் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. மக்களை மிருகத்தனத்தினின்று பிரித்தெடுத்துச் சிறப்பினை நல்குவது எண்ணம்.

**ஜீவ சக்தி**

மூளையினின்று மூலாதாரம் வரை சுழுமுனை என்று ஒரு நாடி Spinal cord உண்டு. இதை முதுகெலும்பு பாதுகாக்கிறது. இந்த முள்ளத் தண்டின் நடுவே உள்ள குழாய் வழியாக நாடி செல்கிறது. ஜீவ நாடிகளுள் சுழுமுனை நாடியே முக்கியமானது.

சிறுவர்களுக்குப் பக்குவம் வரும்போது மூளைக்கு ஒப்பாக ஓர் உயர்ந்த தாது இந்தச் சுழுமுனை நாடியில் உண்டாகி உச்சந்தலையிலிருந்து மூலாதாரம் (உடலின் அடிப்பாகம்) வரை அது பரவுவதற்கு அறிகுறியாக ஆங்காங்கே உரோமம்வளர ஆரம்பிக்கும். விந்து எனப்படும் இந்தத் தாது இரத்தத்தில் மிக உயர்ந்ததும் சக்தி வாய்ந்ததுமான அணுக்களினின்று உண்டாகிறது என்பதை வைத்தியரும், யோகியரும் ஒருங்கே இயம்புகின்றனர். இரத்தத்தை விட பன்மடங்கு சக்தி வாய்ந்த இத்தாது எல்லாம்வல்ல இறைவனிடமிருந்து வரும் பேராற்றலாகும். சூரிய ஒளிபோன்று அது எல்லோருக்கும் பொதுவானது. பணம் எல்லார்க்குஞ் சமமாக அளிக்கப்படுவதில்லை. ஆனால் விந்து எனுஞ் ஜீவதாதுவோ எல்லோருக்கும் பொதுவாய் இறைவனால் அளிக்கப்பட்டதுமன்றி அது செல்வத்து செல்வமுமாகும்.

இந்த விந்துதாரை மதயானையை விட பன்மடங்கு பலம் வாய்ந்தது. இது இந்திரியங்களை வேகம் பெறச் செய்து வெறிபிடித்துக் கட்டுக்கடங்காமல் அலைந்து திரியும், விஷய சுகங்களைப் பற்றி மனோராஜ்யம் பண்ணுவதில் பேருவகை பெறும் விந்துவை விரயஞ் செய்யவே இந்திரியங்கள் முனைந்து நிற்கும்.

ஆனால் இதை அடக்கி நல்வழியில் காப்பதே ஒருவன் அனுஷ்டிக்கத் தக்க விரதமாகும். நன்மை பயக்கும் ஒழுக்கத்துக்கு விரதம் என்பது பெயர். விந்துவைக் காப்பவன் தெய்வசம்பத்துக்கள் அனைத்தும் பெற்றிடுவான். இதுவே **ஆத்மசக்தி** எனப்படும்

'Charity is life and Sexuality is death" "தூய்மையே வாழ்வு சிற்றின்ப நுகர்ச்சியே மரணம்" என்றொரு முதுமொழி உண்டு. விந்துவை விரயம் பண்ணியவனிடம் திடமனம் இருக்காது. ஊக்கம் உற்சாகம் காணப்படாது. தேகம் தளர்வுறும், முகம் வாடி வதங்கி ஜீவகலை அற்றுப்போகும், ஒளிமழுங்கிய கண்களும் கிழத்தனம் தோன்றும். புத்தியில் தீட்சணியம் இராது சித்தமிசை சதா சஞ்சலமும் சந்தேகமும் குடிகொள்ளும். காமநோய்க்கு அவன் எளிதில் அடிமையாவான். - உடல் உறுப்புக்கள் நரம்புகள் தசைகள் அனைத்தும் வலிவற்றுப் போகும். எத்தகைய ஆகாரமும் மருந்தும் இந்த நோய்க்கு பரிகாரமாகாது. ஒழுக்கம் தவறிய ஒரு செய்கையினின்று இத்தனை கேடுகளும் தொடர்ந்து வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜீவதாதுவின் பெருமை

சிவசம்ஹிதை, பிரமசரியம் எனும் ஒழுக்கம் எத்தகைய பண்புகளை அளிக்கவல்லது எனவிளக்குகிறது. விந்துகலைந்து வீழ்வதால் மரணமும், முறையாகக் கட்டிக்காக்கப்படுவதால் சூரியப்பிரகாசந் தன்னைத்தானே விளக்குவது போன்று அது ஓவாது ஒளிர்ந்து ஜீவனமும் உண்டாகின்றன. மேலான மூளையும், நாடிகளும், தசைகளும், அதினின்று உண்டாகின்றது. ஆக பிரம்மச்சரியம் காப்பவனுக்கு அஞ்சா நெஞ்சு இருக்கும், அவன் வதனத்தில் ஆனந்தம் வழியும், கண்களில் ஒளிவீசும், சிதறடையாத அவனது சிந்தையிலே கூர் அம்பு போன்று அறிவு ஒளிரும், கொடுத்த கருமத்தை செய்து சாதிக்கும் வல்லமை பிரமச்சாரிக்கேயுண்டு. உள்வலிவு கலையாமை என்ற இவ்விரதத்தைக் கடைப்பிடிப்பவனே தேவன் எனும் உயர் நிலைக்குச் செல்கின்றான். சங்கரர், புத்தர் யேசுகிறிஸ்து, விவேகானந்தர் போன்ற பெரியார்கள் இதற்குத் தகுந்த எடுத்துக்காட்டாவார். மாணவர் சமுதாயத்து க்குத் தேவைப்படும் வழிகாட்டலை நல்லொழுக்கம் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை இங்குகூறும் முயற்சியின் விளைவே இவ்வெழுத்துக்கள்.

"ஆத்ம சக்தி" எனும் தலைப்பில் ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர் அருளிய கருத்துரைகளின் சிறு துளிகள் சிலவே இங்கு தரப்பட்டவை இந்த ஆத்ம சக்தியின் வடிவினை மேலும் காணவிரும்புவர் இராமகிருஷ்ண தபோவன வெளியீட்டைப் பெற்று வாசிக்கவும். கல்வியில் வேண்டும் நிலையை எட்டிடத்துடிக்கும் நெஞ்சங் களுக்கு உள்ளத்தையும், உடலையும் ஒழுங்கு படுத்தி உயர்ந்த லட்சியத்தைப் முன்வைத்து முன்னேற வழி இங்கு காணலாம் . உயர் இலட்சியமொன்றைக் கொண்டு அதில் கண்ணும் கருத்துமாய் இருப்பவர் அதை அடைந்தாலொழிய ஏனைய சிற்றின்பங்களின் மனஞ்செல்லார், மெய்வருத்தம் பாராமை, கண்துஞ்சாமை, பசிநோக்காமை, கருமமே கண்ணானவர் இடத்துக்காணும் குணங்களாம். மாணவச் செல்வங்களே! இன்றைய கால கட்டத்திலே கல்வி தவிர கதிமோட்சமில்லை என நன்குரைக்கப்பட்ட வேளையிலே நம் வாழ்வுயர கூறிய வழிமுறை பற்றி நீங்கள் ஏன் மீண்டும் ஒருதடவை படித்துச் சிந்தித்துப்பார்க்கக் கூடாது?

எல்லா மனிதர்களிடத்திலும் ஈஸ்வரன் இருக்கிறான், ஆனால் ஈஸ்வரனிடத்தில் எல்லா மனிதர்களும் இல்லை இதுதான் அவர்கள் துன்பப்படுவதற்கு காரணம்.

- ஸ்ரீ இராமகிருஷ்ணர் -

மனம் பால் போன்றது. மனதைத் தண்ணீர் போன்றுள்ள உலகில் நீ வைத்திருப்பாயாகில் பாலும் நீரும் கலந்து போகும். அதனாலே தான் மாந்தர் பாலை ஓர் அமைதியான இடத்தில் வைத்து அதைத் தயிராக உறையுமாறு விட்டு, பின்னர் அதினின்று வெண்ணெயைக் கடைந்து எடுக்கின்றனர். அதே போன்று ஏகாந்தத்திலே பண்ணப்படும் சாதனையின் மூலம் மனமெனும் பாலினின்றும் ஞானம், பக்தி ஆகிற வெண்ணெயைக் கடைந்தெடுப்பாயாக. பிறகு அந்த வெண்ணெயை உலகமாகிற நீரிலே மனமானது தனியாக மிதந்:து நிற்கும்.

"அரசன் ஒலிக" என்று கைதிகள் கூச்சலிட்டாலும் கைதிகளுக்கு உணவு கொடுத்து அரசன் காப்பாற்றுகிறார்.

அதுபோலவே "கடவுள் இலலை" என்று நாத்தீகம் பேசுபவனையும் கடவுள் காப்பாற்று கிறார்.

-கிருபானந்தவாரியார்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியும் சமயமும்

20ம் நூற்றாண்டை நோக்கிச் செல்லும் இன்றைய காலகட்டத்தில் பல்வேறு துறைகளில் பாரிய மாற்றங்கள் எற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான அபிவிருத்திகள் இலங்கையில் மாத்திரமன்றி உலக நாடுகளிலும் ஏற்பட்டு வருவது வியந்து போற்றுதற்குரியது.

பல துறைகளிலும் முன்னேற்றம் ஏற்பட்டு வருகின்ற போதிலும் மக்களை நல்வழிப்படுத்தும் சமயத் துறை இன்று ஏனோ பின்னடைவாகக் காணப்படுவது வருந்தக் கூடியதொன்றாகும். இதற்குத் காரணம் இன்றைய நாகரீக வளர்ச்சியும் "நான்" என்ற அகங்காரமுமே ஆகும். ஆனால் சமயத்துடன் தொடர்புடைய கல்வியானது இன்று கம்பியூட்டர் (Computer) துறை வரை வளர்ந்து சென்றுள்ளது மகிழ்ச்சிக்குரிய தொன்றாகும். கல்வியானது உயர்ந்த நிலையிலிருக்க சமயம் மட்டும் கீழ் நோக்கித் தள்ளப்படுவது நிறுத்தப்பட வேண்டும்.

கல்வி எமது எதிர்கால வாழ்க்கைக்கு எவ்வளவு அவசியமோ அதே போல் சமயமும் எம்மை நல்வழிப்படுத்துவதற்கு மிகவும் அவசியம். கல்வியைக் கற்கையில் எமது எதிர்காலப் பரீட்சையில் சித்தி எய்துவதே நோக்காகக் கொண்டிருக்கக்கூடாது. நாம் கற்றவற்றை செயற்படுத்த வேண்டும். அதாவது "அறம் செய்ய விரும்பு ஆறுவது சினம்" என்பதைப் படித்து விட்டு அதனை மனனம் செய்து வைத்திருப்பது மட்டும் போதாது. அவற்றை எமது செயலிலும் கடைப்பிடிக்க வேண்டும். இவ்வாறு செயற்பட்டு வருகையில் எமது உள்ளத்தில் இயற்கையாக தெய்வபக்தி ஏற்படும். இதனால் சிந்தனை தெளிவடைய செயல் தூய்மையடையும். கடவுள் பக்தி இருப்பதால் மனத்தை ஒரு முகப்படுத்தக் கூடிய நிலை ஏற்படும். இதனால் நாம் கடவுளைத் தியானிக்கும் பொழுதோ அல்லது கல்வியைக் கற்கும் பொழுதோ மனம் அதிலேயே லயித்திருக்கும். எனவே நாம் எண்ணிய நோக்கம் தடையின்றி நிறைவேறும். வகுப்பறையில் சொல்லித்தருவதையே மட்டும் கொண்டு கடவுள் அருள் இல்லாமல் எமது இலக்கைப் பூர்த்தி செய்வது கடினம். இவ்வாறு கடவுள் பக்தியில்லாத அறிவாளி குடிப்பதற்கு உகந்த நீரில்லாத கங்கையைப் போலாவார்.

எனவே எவ்வளவு தான் அறிவாளியாக இருந்தாலும் சிறிதளவேனும் கடவுள் பக்தி இருத்தல் மிகவும் இன்றி அமையாதது. எனவே அனைவரும் கல்வியை மட்டும் கல்லாது, அதை செயல்படுத்த முனையவும் வேண்டும். அப்போது அவர்களது கல்வி அறிவுவளர்வதுடன் சமயப்பற்றும் வளரும். இதனால் சமயம் பின் நோக்கி தள்ளப்படுவது தடுக்கப்படும்.

ஒரு நாட்டின் பெருமையை உயர்த்துவது அங்கு உள்ள பாடசாலையும், கோயிலுமே ஆகும். அவற்றின் முன்னேற்றத்தைக் கொண்டே அந்நாட்டின் அபிவிருத்தி அல்லது சிறப்பு பிறரால் மதிப்பிடப்படும்.

எனவே நாம் கல்வியை மட்டும் கற்பதோடு இல்லாது சமயத்தையும் வளர்க்கப் பாடுபட வேண்டும்.

செல்வன். ஸ்ரீஸ்கந்தராஜா. சிறிசங்கர்

12 வர்த்தகம் B

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயம்

உலகில் உள்ள சமயங்கள் யாவும் இன்னாரால் இன்ன காலத்தில் தோற்று விக்கப்பட்டவை என்ற திட்டவட்டமான வரலாற்றை உடையன. பௌத்த சமயம் புத்த பெருமானால் கி. பி. 6ம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்டது. கிறிஸ்தவ சமயம் யேசு கிறிஸ்துவால் 2000ம் ஆண்டுகளுக்கு முன் தோற்றுவிக்கப் பட்டது. இஸ்லாம் முகமது நபியால் 13ம் நூற்றாண்டிற்கு முன் தோற்றுவிக்கப்பட்டது. ஆனால் இந்து சமயம் யாரால் எப்போது தோற்று விக்கப்பட்டது என்று கூறமுடியாத பழம் பெரும் சமயமாகும். இந்தப் பெருமை காராணமாக வட மொழியில் இதனை சநாதன சமயம் என அழைக்கும் வழக்கம் காணப்படுகின்றது.

பிற மதங்களுக்கு இன்ன நூல் முதல் நூல் எனக் கூறமுடியும். ஆனால் இந்து சமயத்திற்கோ இவ்வாறு உறுதியாகக் கூறமுடியாது. வேதம் பொது நூல் என்றும் ஆகமம் சிறப்பு நூல் என்றும் கூறப் படினும் வேறு வேறு சாத்திர நூல்களையும், தோத்திர நூல்களையும் தமக்குரிய முதல் நூலாக கொள்ளும் வழக்கம் இந்து சமயத்தில் நிலவுகின்றது. வேதங்கள் ஆகமங்கள் மனிதரால் செய்யப்பட்டவை அல்ல என்று கூறும் மரபும் உண்டு. இவையே இந்து சமயத்தின் பலங்கள் என்று ஒரு சாராரும் பலவீனங்கள் என்று இன்னொரு சாராரும் உரைக்கத்தக்க அளவு இந்து சமயம் மர்மம் பொதிந்ததாய் விளங்குகின்றது என்று கூறுவதில் எவ்வித தவறும் இல்லை.

இந்து சமயம் பல தெய்வ வழிபாட்டைக் கொண்டது என்று ஒரு சாரர் அதன் மீது குறை கூறுவர். ஆனால் இந்து சமய தத்துவங்கள் ஏக தெய்வ வணக்கத்தை வலியுறுத்திய போதிலும் அத் தெய்வத்தை பல பெயரில் பல வடிவங்களில் வணங்குவதை குற்றமாக கொள்வதில்லை.

ஒரு நாமம் ஒருருவம் இல்லாத இறைவனுக்கு பல நாமம் கூறி வழிபடும் வழக்கத்தை ஒரு வகையிலே இந்து சமயிகள் பெருமையாகவே கொள்கின்றனர் எனலாம். இக்கோட்பாடு அவர்களின் சமய தத்துவத் தினை எந்த வகையிலும் பாதிக்காது என்று அவர்கள் நம்புகின்றனர். "உள்ள பொருள் ஒன்றே அறிவாளர் அதனை பல பெயரால் அழைப்பர்" என்ற கூற்று, இந்து சமயம் போலவே மிகவும் பழமையான ஒன்றா கும். இது வேதத்திலே மிகப்பழமையாத் கொள்ளப்படும் இருக்கு வேதத்தில் காணப்படுகின்றது.

இந்து சமயத்தை எதிர்த்தும் வேதக்கூற்றுக்களை மறுதலித்தும் இந்தியாவிலே தோன்றிய சமணம், பௌத்தம், உலகாயதம் என்பன இந்தியாவிலே தமது வாழ்வினை பெரும்பாலும் முடித்துக் கொண்டன என்றே சொல்ல வேண்டும் வாள் முனையிலே தமது சமயத்தை பரப்பிய இஸ்லாமியரும் இந்தியாவை இஸ்லாம்மயமாக்கவில்லை. உலகம் எல்லாம் கிளை பரப்பி வளர்ந்துள்ள கிறிஸ்தவரும் இந்துக்களின் நம்பிக்கையை முற்றாக அழிக்க முடியாததாகி விட்டது. ஏனெனின் இந்து சமயமானது மற்றைய எல்லா சமயத்தின் சிறப்பம்சத்தையும் தன்னுள் வாங்கிக் கொண்டு அதே சமயத்தில் தனது தனித்தன்மையையும் போற்றிக் காத்து வருவதே அதன் நிலைபேற்றுக்கு காரணம் எனலாம். சமணத்தின் துறவு மனப்பான் மையையும் இந்து மதம் ஒதுக்கவில்லை. பௌத்தத்தின் அஹிம்சை நெறியையும் ஏற்றுக் கொண்டு அது தன் உயிர் கொலை வேள்விக்கு பிரியாவிடையளித்தது. கிறிஸ்தவத்தின் "பகைவனுக்கு மன்னிப் பருளும் பண்பும் இந்து மக்களுக்கு புதியதன்று. விக்கிரக ஆராதனையை ஏற்காத உபநிடத சிந்தனையாளருக்கு இஸ்லாமியரின் விக்கிரக எதிர்ப்பு மனப்பான்மை என்றைக்கும் வியப்பை அளித்ததில்லை. எனவே இந்து மதமானது முன்னை பழமைக்கும் பழமையானதாய் (அளப் பரியதாய்) விளங்குவதால் அதனை முற்றாக அழிப்பது எவராலும் எக்காலத்திலும் முடியாத தொன்றாய் இருக்கின்றது. இதில் எவ்வித ஆச்சரியமும் இல்லை.

இந்து சமயத்தில் சாதிப்பிரிவினை போற்றப்படுவதாக குறை கூறப்படுவதுண்டு வேதங்களின் அடித் தளத்தில் தோன்றிய தர்மசாஸ்த்திரங்களால் ஏற்பட்ட வினை இது. ஆனால் வேத காலம் தொட்டு இன்று வரை ஞானிகளாகவும் அடியார்களாகவும் எந்த சாதியரும் ஆவதற்கு எவ்வித தடையும் இருக்கவில்லை. என்பது குறிப்பிடத்தக்கது. "சத்தியமே வெற்றி தரும்" என்பது உபநிடதமகாவாக்கியம் தன் தந்தை பெயர் அறியாத சந்தியகாமன் உண்மை பேசியதால் கௌதமரால் பிராமணராக அங்கீகரிக்கப்பட்டு சீடனாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டான். புராதன கால இருடிகளிற் பலரின் பிறப்பும் குலமும் பெருமைக்கு தடைக்கற்களாகி விடவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்....................
அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே"

என்பது அப்பர் சுவாமிகளின் திருவாக்கு, ஜேர்மனிய தத்துவ ஞானியான அல்பேட்ஸ்வெச்சர் இந்து சமய தத்துவம் வாழ்வை மறுக்கும் கோட்பாடுடையது என கூறுவார். கன்மம், மறுபிறப்பு கோட்பாடுகளை நம்பிக்கொண்டு வாழும் ஒரு சமுதாயம் பிற உயிர்களில் இரக்கமோ அன்போ காட்டாது. தனது ஆன்ம ஈடேற்றத்திற்கு பாடுபடுவதாக இருப்பது இயற்கையே"" என்று அவர் முடிவுகட்டி விடுகின்றார். இவர் கூற்று முழுமையாக உண்மையன்று. தானம். தயை. கருணை என்பன இந்துக்களின் உயிர் நாடியாக விளங்குவதைப் பழம் பெரும் உபநிடதங்களிற் கூட நாம் தெளிவாக காணலாம். தியாகமும் தானமும் இந்து மதத்திற்கு புதிய பண்டங்கள் அல்ல. "பரோபகாரம் இதம் சரீரம்" என்பதே இந்து மதக் குறிக்கோளாகும்.

வாழ்வை மறுதலிப்பது இந்து மதத்தின் இலட்சியமன்று. வாழ்வை இறைவனுக்கே அர்ப்பணித்து அவனை எல்லா உயிர்களிலும் கண்டு அந்த உயிர்கள் அனைத்திற்கும் தொண்டாற்றி வாழ்வதே உன்னத அன்மீக வாழ்வு என்பது இந்து மதத்திலும் பக்குவமாக அமைந்துள்ள தத்துவமாகும்.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகை புருஷார்த்தங்களும் இந்து மதத்தில் பேசப்படுகின்றன. வாழ்க்கையை மறுப்போர் தர்மத்தை செய்யவேண்டிய இன்றியமையாமை இல்லை. பொருளைப் பெற வேண்டிய அவசியம் இல்லை. இன்பத்தை நுகரவேண்டிய அவசியம் இல்லை. இம்மூன்றையும் சரிவர அடைந்தவரே மோட்சத்தை அடைவர் என்ற இலட்சியம் மிகவும் உன்னதமானது என்பதனை மறுத்தற்கில்லை.

மேலும் பிரமச்சரியம், கிருகஷ்தம், வானபிரகஷ்தம் , சந்நியாசம் என்று இந்து சமயியின் வாழ்க்கை நான்கு நிலைகளாக வகுக்கப்பட்டுள்ளது. மேலெழுந்த நோக்கில் இப் பிரிவினை செயற்கையானதாகத் தோன்றும், ஆனால் வாழ்க்கையில் இந்த இலட்சியம் உன்னதமானது என்பதை மறுத்தல் இயலாது.

எந்த வகையில் நோக்கினாலும் இந்து சமயம் பல சிறப்பம்சங்களை தன்னுள்ளே பொதித்தே உள்ளது என்பது தெளிவான உண்மையே ஆகும். சுருங்கச் சொன்னால் "இந்து சமயம் சமயங்களின் சமயம்" என்று கூறுவது எல்லா வகையிலும் பொருந்துவதே.

எனவே இந்துக்களாகிய நாங்கள் நவநாகரிகங்கள் சூழ்ந்த இந்த உலகிலே எங்கள் இந்து மதத்தினை சீர் குலைய செய்யாது அதனை கட்டி எழுப்பி அதன் வழி நெறிகளுக்கு கட்டுப்பட்டு நடப்போமாக.

**கனகசிங்கம் திலீபன்**
ஆண்டு 12
வர்த்தகப் பிரிவு

பகை, பொறாமை ஆகியவற்றை நீ வெளியிட்டால், அவை வட்டியும் முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வந்து சேர்ந்துவிடும். வேறு எந்தச் சக்தியாலும் அவற்றைத் தடுத்து நிறுத்த முடியாது. ஒரு முறை நீ அவற்றை இயங்கும்படி செய்துவிட்டால் அதனால் வரும் விளைவையும் நீ ஏற்றே ஆக வேண்டும். இதை நீ நினைவில் வைத்துக் கொண்டால் தீய செயல்களைச் செய்வதிலிருந்து அது உன்னைத் தடுத்து நிறுத்தும்.

சுவாமி விவேகானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரதை வளர வாழ்த்துகிறோம்.

இ. கி. ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின்
'சாரதை' சஞ்சிகை விழா சிறப்புற

நல் வாழ்த்துக்கள்

வளமான வாழ்வுக்கு

சணச வங்கி

'சாரதை' வளர வாழ்த்துகின்றோம்'

ஆர். ரீ. காந்த் டெயிலரிங்
R. T. KANTH TAILORING

நவநாகரீகமான ஆடைகளைத் தைத்து வழங்கும் சிறந்த டெயிலரிங் நிலையம்
Best Tailoring Mart For Tailoring New Fashionable Dress

உரிமை:- இ. இரகுநாதன்
Prop:- R. RAGUNAHTAN

No. 84, Thirugnanasampanther Street,
Trincomalee.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from:*

# Vijaya Traders

74, MAIN STREET,
TRINCOMALEE.

**Our Best Wisher to "SARATHAI"**

# SELVASANNITHI STORES

*Proprietor:* ***M. Valappillai***

58, Sea View Road,
Trincomalee.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசமய வளர்ச்சிக்கு திருமுறைகள் வகித்த பங்களிப்பு

செல்வி. நகுலேஸ்வரி நற்குணம் ஆசிரியை

தி/இ. கி. மி. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

இந்தியாவின் தெற்கே தமிழ்நாட்டில் நீண்ட காலமாக நிலைத்து இருந்த சைவசமயம், சங்கம் மருவிய காலப் பிற்பகுதியில் இருந்து வீழ்ச்சியடையத் தொடங்கியது. இந்நிலையை மாற்றி, மீண்டும் சைவசமயத்தை வளர்க்க வேண்டும் என்ற நோக்கோடு நாயன்மார்கள் அரும்பாடுபட்டனர். இவர்கள் பண்கனிந்த பாடல்கள் பலவற்றைப் பாடி அதன் ஊடாக சைவர்கள் மனதில் உறங்கிக்கிடந்த சமய உணர்வைத் தட்டி எழுப்பி சைவத்தை வளர்த்தனர். கி. பி. 6ம் நூற்றாண்டு தொடக்கம் 9ம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட பல்லவர் ஆட்சிக் காலத்திலேயே தென்னாட்டில் இத்தகைய பக்தி இலக்கியம் உருவாகியது. பின்பு அவை திருமுறை களாகத் தொகுக்கப்பட்டாலும் திருமுறைகளில் தொகுக்கப்பட்டிருக்கும் பாடல்கள் பல்லவர் காலத்திற்கு உரியவையே. 1 தொடக்கம் 12 வரையுள்ள திருமுறைகளை நாம் நோக்கும் போது அத்திருமுறைகள் நாம் சைவ சமய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

1ம் திருமுறை தொடக்கம் 3ம் திருமுறை வரைக்கும் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் பாடிய பாடல்கள் தொகுக்கப்பட்டு இருக்கிறது. சாமான்ய மக்களும் உணரக்கூடிய விதத்தில் சைவத்தின் முழுமுதல் தெய்வமாகிய சிவனை தடத்த இலக்கணத்தில் பாடியவர் இவர் ஆவார். "ஓம்" என்ற பிரணவ மந்திரமும் பஞ்சாட்சர மந்திரமும் சிவனுக்கு உரியவையாகும் . இந்த மந்திரங்கள் தமிழில் முதல் முதலாக தோன்றிய தேவாரத்தில் மறைந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. முதலாவது திருமுறையின் " தோடுடைய" என்று தொடங்கும் தேவாரத்தில் ஓங்கார ஓசை அமைந்திருக்கின்றது. என்பர். மேலும் இவரால் பாடப்பட்ட ஏனைய பாடல்களில் பஞ்சாட்சர மந்திரத்திற்கு வழிகாட்டப்பட்டு இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. 4ம் திருமுறை தொடக்கம் 6ம் திருமுறை வரைக்கும் அப்பர் சுவாமிகளது பாடல்கள் ஆகும். இவரது பாடலில் வரும் நமச்சிவாய திருப்பதிகம் நகராதி பஞ்சாட்சர மந்திரத்திற்கு வழிகாட்டுகிது. அது மட்டுமல்லாமல் இவர் தனது பாடலில் பல்வேறு வகையான இறை அற்புதங்களை புலப்படுத்துகிறார். சம்பந்த சுவாமிகள் அதிகமான பாடல்களை இயற்கை அழகோடு பாடியபோது, அப்பர் சுவாமிகள் தனது பாடல்கள் முழுவதிலும் உலக நிலையாமை, ஐம்புலன்களின் ஆசையினால் விளையும் துன்பம் ஆகியவற்றை உலகுக்கு எடுத்துக்காட்டி, சைவசமயத்தவர்கள் பிற பொருட்களின் மீது வைக்கும் பற்றுக்களை அறுத்து இறை அன்பே மெய்யான அன்பு என்பதை நிலைநிறுத்தி, அதன்பால் சைவர்களை அன்பு செலுத்த வைக்கிறார். இவரது பாடல்கள் அனைத்தும் மூன்று திருமுறைகளில் அடக்கப்பட்டு இருக்கிறது. நாம் அறிந்த பாடல்களை நோக்கும்போது உண்மையான பக்தனுக்கு, இடரில் இறைவன் இன்னருள் காட்டுவான் என்பதைப் புலப்படுத்தும் விதம் தெளிவாகிறது. "சொற்றுணை வேதியன்" "மாசில் வீணையும்" "கூற்றாயின வாறு" ஆகிய இவரது பாடல்கள் இதனை எமக்கு எடுத்துக் காட்டுகிறது. நாம் ஏழாவது திருமுறையில் தொகுக்கப்பட்ட சுந்தரரது பாடல்களையும் நோக்கும் போது அவரது பாடல்களும் சைவசமய வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்ததை காணலாம். "அந்தியும் நண்பகலும் அஞ்சுபதம்" என்ற பாடல் பிற்காலத்திலே சைவசமயத்தவர்கள் மத்தியில் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நாற்பாதங்கள் வளர்ச்சியடைவதற்கு வழிவகுத்தது. திருநாவுக்கரசு நாயனார்கூட இத்தகைய பக்திமார்க்கத்திற்கு வழிவகுத்து இருக்கிறார். "நிலைபெறுமாறு எண்ணுதியேல்" என்ற இவர் பாடல் எமக்கு இக்கருத்தைத் தெளிவுபடுத்திக் காட்டுகிறது.

முதலாம் திருமுறை தொடக்கம் ஏழாம் திருமுறை வரைக்கும் "அடங்கன் முறை" என்று அழைக்கப்படு கிறது. எட்டாவது திருமுறையில் திருவாசகமும் திருக்கோவையாரும் அடக்கப்படுகிறது. தோத்திரங்களின் வரிசையில் இவை இரண்டும் மிக மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக சொல்லப்படுகிறது. திருவாசகத்திற்கு சிறப்புக்கொடுக்கும் முகமாக "எல்லாம் வல்ல பொன்னம்பலவன் மாணிக்கவாசகர், சொல்லக் கேட்டு பிரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து கொண்டான்" என்று சிறப்பிக்கின்றார்கள். தான் ஊழிக்காலத்தில் தனித்து இருக்கும் போது அதனை ஓதி அமைதி பெறுவதற்காகவே அதனைப் பிரதிசெய்து கொண்டான் என்று பெரியார் ஒருவர் காரணம் காட்டு கிறார். மாணிக்கவாசக சுவாமிகளின் திருக்கோவையாரும் மிக மிக சிறந்த இலக்கியமே. திருச்சிற்றம்பலவனை பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு பாடப்பட்டது இத்திருக்கோவையார் ஆகும். 9 ம் பிரபந்தங்களில் ஒன்று என்றும், கோவைப் பிரபந்தத்தில் தலை சிறந்தது என்றும் இது சிறப்பிக்கப் படுகிறது. கவிதை அழகு, பொருள் அழகு, ஆகியவற்றோடு கூடிய மிக இனிமையான பாடல்களைக் கொண்ட இவை சிவனது பல்வேறு வகையான சிறப்புக்களை எடுத்துக்கூறுவனவாக அமைகிறது. சைவத்தை வளர்க்கும் நோக்கோடு பாடப்பட்ட பாடல்கள் இதில் சேர்த்துக் கொள்ளப்பட்டு இருப்பதனால் தென்னாட்டு சைவ சமய வளர்ச்சியில் இதன் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது. சேந்தனார் தொடக்கம் திருமாளிகைத் தேவர் வரை ஒன்பது பேரால் பாடப்பட்ட பாடல்கள் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, ஆகியவற்றிலே தொகுக்கப்பட்டு உள்ளது. சேந்தனார் அவர்கள் தில்லைநடராஜப் பெருமானின் தேர்ஓடமுடியாது இருந்த வேளையில் அதனை ஓடவைப்பதற்காக பாடியபாடல திருப்பல்லாண்டில் காணப்படுகிறது. திருமூலரினால் ஆக்கப்பட்ட திருமந்திரம் தமிழ்நாட்டில் சைவசமய வளர்சிக்கு மட்டுமல்லாமல் சைவசமயத்திலே தத்துவக் கருத்துக்கள் வளர்ச்சி அடைவதற்கும் காரணம் ஆகியது. செல்வம், கல்வி, மனஒருமை ஆகிய அம்சங்களை சமுதாய நல் வாழ்விற்காக திருமந்திரம் எடுத்துக் கூறுகிறது. தென்னாட்டிலே சைவசமயத்தவர்கள் மத்தியில் இவை வளர்வதற்கு திருமந்திரம் காரணமாகிறது. அத்தோடு பதி, பசு, பாசம், ஆகிய முப்பொருட்களைப் பற்றியும் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் ஆகிய மூவகை ஆன்மாக்களைப் பற்றியும் ஆணவம், கன்மம், மாயை, ஆகிய மும்மலங்கள் பற்றியும் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு நெறிகளைப் பற்றியும் கூறுவதோடு திருநீறு, திருவைந்தெழுத்து, திருக்கூத்து என்பவற்றையும் கூறுகிறது. அவ்வகையில் திருமந்திரம் தென்னாட்டு சைவசமய வளர்ச்சிக்கு அதிக பங்களிப்பைச் செய்கிறது. சமய தத்துவ வளர்ச்சி, வழிபாட்டு முறைகள் ஆகியவற்றினூடாக சமயம் வளர திருமந்திரம் காரணம் ஆகியது. காரைக்கால் அம்மையார், நம்பியாண்டார் நம்பி, முதலாக 11 பேர் பாடிய பாடல்கள் 11ம் திருமுறையில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இது நாற்பது பிரபந்தங்கள் என்றும் 40 தோத்திர நூல்கள் என்றும் அழைக்கப்படுவது முண்டு. 12ம் திருமுறை என்று சொல்லப்படும். சேக்கிழாரின் பெரியபுராணம் தென்னாட்டிலே சைவ சமயத்தின் பால் சங்கம வழிபாடு விருத்தி அடைவதற்கு காரணமாக அமைகிறது. சங்கம வழிபாட்டினை மேம்படுத்தவும், தொண்டர் தம் பெருமை கூறவும் அமைந்த பெரியபுராணம், சைவசமய வளர்ச்சிக்கு காரணம் ஆகியது எனலாம்.

சுருங்கக் கூறின் 1 தொடக்கம் 12 வரைக்கும் உள்ள திருமுறைகளில் தொகுக்கப்பட்ட பாடல்கள் சைவசமயத்தினதும், சைவர்களின் பரம்பொருளினதும் பல்வேறுபட்ட சிறப்புக்களை எடுத்துக் கூறுகிறது. இறைவனின் தடத்தநிலையில் வர்ணிக்கும் பாடல், சொரூப நிலையில் கற்பனை செய்யும் பாடல், திருத் தலங்களில் அழகைக் கூறும்பாடல், அவற்றின் மகிமை, இறை உண்மைகள், சமயக்கருத்துக்கள், வழிபாட்டு முறைகளை கூறும் பாடல்களே திருமுறையில் தொகுக்கப்பட்டது. இவைகளே சைவசமய வளர்ச்சிக்கு மட்டு மல்லாமல் இன்று வரைக்கும் சமயத்தை வளர்ப்பதில் பங்களிப்பு செய்கின்றன என்றும் கூறலாம்.

ஒரு மனிதன் உடலாலும் உள்ளத்தாலும் தூய்மையாக இருந்தால் அன்றி கோயிலுக்கு வருவதும் சிவபெருமானை வழிபடுவதும் பயனற்றனவாகும்.

உடலும் உள்ளமும் தூய்மையாக இருப்பவர்களின் பிரார்த்தனைகள் சிவபெருமானால் நிறைவேற்றப்படுகின்றன.

யார் தூய்மையற்றவர்களாக இருந்து கொண்டு சமயத்தைப்பற்றி மற்றவர்களுக்குப் போதிக்கிறார்களோ அவர்கள் இறுதியில் தோல்வியடைகிறார்கள்.

சுவாமி விவேகானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமதத்தில் பெண்ணுரிமை

'மாதராய் பிறக்க மாதவம் செய்ய வேண்டும்" என்று ஆண்களே பெருமைப்பட்ட அந்தப் பெண்மைக்கு, சமஉரிமையைப் பெற்றுக் கொடுப்பதற்காக உலகு இன்று அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கிறது. இதற்காக ஆங்காங்கே பெண்கள் மகாநாடும் பெண்ணுரிமைப் போராட்டங்களும் நடந்து கொண்டிருப்பது நாமறிந்த செய்தி. ஆனால் ஆன்மீக மேம்பாட்டிற்கும், மனிதஇன மேம்பாட்டிற்கும், ஆண்களுடன் பெண்கள் சமமாக நடத்தப்பட வேண்டும் என்பது மிக இன்றியமையாதது என்றுணர்ந்த இந்துமதம், அன்றே பெண்களுக்கு சமவுரிமை வழங்கியது. அது மட்டுமல்லாது அவர்களை மதித்துப் போற்றவும் வழிவகை செய்தது.

மனித இனத்துக்கு இரண்டு சிறகுகள் ஒன்று ஆண் மற்றையது பெண். இவ்விரு சிறகுகளும் அசைந்தால் தான் மனிதஇனம் மேலே மேலே செல்ல முடியும். ஒற்றைச்சிறகால் எந்தப்பறவையும் பறக்க முடியாது. எனவே ஆண்பெண் ஆகிய இருவருமே சமம். இதில் உயர்வு தாழ்வுக்கு இடமில்லை. இந்துமதத்தின் அடிப்படைக் கொள்கையே மனித இனம் முற்றிலுமாய் மோட்சம் எனப்படுகின்ற பேரின்ப சாம்ராச்சியத்தை அடைய வேண்டும் என்பதாகும். இதில் ஆணுக்கு ஒருநீதி பெண்ணுக்கு ஒருநீதி என்று ஒரு நாளும் இருந்ததில்லை தூய்மை தன்னடக்கம், தீவிர ஈடுபாடு, பவித்திரமான கொள்கை ஆகிய எல்லாமே இருவருக்கும் உண்டு.

இதற்குப் பல சான்றுகளை நாம் இந்துமதத்தில் காணக்கூடியதாய் உள்ளது. எல்லாம் வல்ல இறைவனைத் தந்தையாகவும், தாயாகவும் தோழனாகவும், தலைவனாகவும் பக்தி செய்து வழிபடும் மரபு இந்து சமயத்தில் உண்டு. இவற்றுள் அவ் இறைவனைத் தாயாக வழிபடும் முறை சிறந்ததாகக் கொள்ளப்படுகின்றது. அன்பு, தூய்மை, பொறுமை, தன்னலமின்மை, மன்னிக்கும் சுபாவம் ஆகியவற்றில் சிறந்த தாய்வடிவம் கொண்ட சக்தியை இந்து அடியார்கள் போற்றி வந்தனை செய்கின்றனர். அத்துடன் இறைவனையும், இறைவியையும் சரிசமனாக நோக்கி, அர்த்தனாரீஸ்வரர் வடிவில் வழிபடும் முறையும் இவர்களிடையே நிலவுகிறது. எனவே பெண்களுக்கு சமுதாயத்தில் வழங்கப்பட வேண்டிய சம உரிமைகளைக் கருத்தில் கொண்டு உரிமைகளை வழங்கியது மட்டுமல்லாது, சிந்துவெளிக் காலத்தில் இருந்து பெண்களைப் போற்றவும் இந்துமதம் வழிவகை செய்துள்ளது என்பது கண்கூடாகும்.

இவ்வாறு ஆண்களும், பெண்களும் சமனானவர்களாக கருதப்பட வேண்டியவர்கள் என்றாலும் உடல் ரீதியாகவும், உணர்வுரீதியாகவும் இவ் இருவர்களுக்கும் அடிப்படை வித்தியாசம் இருப்பதை மறுக்க முடியாது. இதை இந்து மதம் மிகச்சரியாக புரிந்துள்ளது. அதனாலேயேதான் ஆண்களுக்கு என்று சில நெறி முறைகளையும், பெண்களுக்கு என்று சில நெறிமுறைகளையும் அது வகுத்திருக்கின்றது. இதில் உயர்வு தாழ்வு என்பதே இல்லை. அவரவர் தர்மத்தை அவரவர் தீவிரமாக கடைப்பிடித்தாலே மோட்சம் உண்டு என்று அது திட்டவட்டமாக அறிவிக்கின்றது. அதுமட்டுமல்லாது சமுதாயத்தின் பலமும், மேம்பாடும் தனிப்பட்ட குடும்பங்களின் பலத்திலும் மேம்பாட்டிலுந்தான் அடங்கியுள்ளது என்பதை உணர்ந்த இந்துமதம் குடும்ப வாழ்க்கைக்கென நியதிகளையும் வகுத்துக் கொடுத்தது. குடும்பத்தின் மைய அச்சே பெண்தான் என்றது. அவர்களின்றி குடும்பம் எனும் சக்கரம் சுழல முடியாது என்று கூறிற்று. அதனாலேயே அவளுக்கு குடும்பப் பொறுப்புக்கள் ஏராளமாய் அமைந்தன. அவற்றைச் சரிவர நிறைவேற்றுவதே சுயதர்மம் என்றும், அதை நிறைவேற்றி அவள் மோட்ச சாம்ராச்சியத்தை அடைந்து விட முடியும் என்றும் தீர்மானமாய் கூறிற்று. இது ஒன்றும் அடிமைத்தனமல்ல. அவரவர் கடமையை நிறைவேற்றுவதன் மூலம் உய்வடைதலே இதன் பொருள். "இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றுமில்லை" எனும் பழமொழி எழுவதற்கு இதுவே அடிப்படை. எனவேதான் இந்துமதத்தில் பெண் பெரிதும் மதிக்கப்படுகிறாள். சீதாவும், சாவித்திரியும் தமயந்தியும், வாசுகியும் இவ்வாறான வழிமுறைகளைப் பின்பற்றி உய்வடைந்த உத்தமிகள். இந்துமதம் உலகுக்கு அளித்த உன்னதப் பெண்ரத்தினங்கள். கோடிக்கணக்கான மக்களுக்கு வழிகாட்டும் துருவ நட்சத்திரங்கள். அதுமட்டுமல்லாது வேதகாலத்திலும், அதன் பின் வந்த காலங்களிலும் பெண்களுக்கு ஏராளமான உரிமைகளும் சுதந்திரங்களும் வழங்கப்பட்டு வந்தது என்பதற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள், வேதம் முதலிய அறநூல்களைக் கற்றுத்தேர்ந்து பெரிய பெரிய துறவியர்களுக்கே ஆசிரியர்களாகவும் சிறந்த தபஸ்வியர்களாகவும் விளங்கினார்கள் என்பதற்கும் ஆதாரங்களை இன்றும் நோக்கக் கூடியதாக உள்ளது.

ஆனால் இடைப்பட்ட காலத்தில் சில இந்து சமயத்தைப் புரிந்து கொள்ளாதவர்களாலும், சுயநலவாதிகளாலும் பெண்கள் அலட்சியப்படுத்தப்பட்டமையும், அவர்கள் கல்வி கற்பதில் இருந்து பல உரிமைகள் பறிமுதல் செய்யப்பட்டு கிணற்றுத்தவளைகளாக மாற்றப்பட்டமையும், பெண்கள் உயிருடன் நெருப்பில் தள்ளப்படுகின்ற சதிச் செயல்கள் உருவாக்கப்பட்டமையும் வேதனையுடன் ஒப்புக் கொள்ளப்பட வேண்டிய ஒரு விடையமாகும். ஆனால் ஒன்று, இதற்கு இந்துமதக் கொள்கைகள் எதிர்ப்பானவையே. சில விஷமிகளின் சதிக்கு மதம் பொறுப்பல்ல. மதத்தின் பெயரால் நடக்கின்ற இந்தச் சதியை மனித இனம் முழுவதுமாய் எதிர்க்க வேண்டும். பெண்களை தெய்வமாக மதித்து, அவர்களுக்கு ஆண்களுடன் சமனான உரிமை வழங்கி கௌரவித்த இந்து மதம் இவ்வாறான தவறான கொள்கைகளை ஒருநாளும் ஏற்றதில்லை என்பதை ஒவ்வொரு இந்துவும் நன்குணர வேண்டும்.

**தங்கராஜா ஜீவராஜ்**
ஆண்டு 12 விஞ்ஞானப்பிரிவு

## சமயத்தை நோக்கி

ஒளியால் உருவாய் கருவாய்
மொழியாய் கனியாய் உலதாய்
உயர்ந்து வளர்ந்து நிமிர்ந்து
உதிர்ந்ததெங்கள் சைவமடா

★

பதி பசு பாசம் என்றும்
இருக்கு யசுர் சாமமென்றும்
சிந்து இந்து நாகரீகம்
புலர்ந்து பூத்தது உண்மையடா

★

கோயில் கூடம் தனில் சென்று
கோதை பார்பது முறையன்று
கோபியர் கூடவும் தானின்று
நகைகள் பார்ப்பது வேதமாடா

★

சிதைந்து வதைந்து நம் சமயம்
மடிந்து ஒடிந்து போவதனால்
வாழ்ந்தும் இருந்தும் என்ன பயன்
வாழ்வே சூனியமாகுமடா

கீதை பாதை தான் கூறி
கண்ணன் சொன்ன கனிமொழியில்
கற்க உற்றார் யாரும் இன்றி
கறையான் அரிப்பது தெரியுதடா

★

வேத வாசகம் வேம்பாகி
வேற்றுமைப் பேச்சே தலைக்கேறி
வேதியர் மீதும் பழி கூறி
வேடிக்கை பேசல் தீமையடா

★

போதும் போதும் களியாட்டம்
போவோம் போவோம் சமய பொதுக் கூட்டம்
நாளைய சமூகம் சீர் பெறவே
நாடுவோம் சமய கோட்பாடு

**ஆக்கம் - த. புஸ்பகாந்தன்**
ஆண்டு 13 கணிதப் பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மைச் சைவன்

சைவ நெறியிலே நின்று ஒழுகுபவன் சைவனாவான். சைவ நெறியே சிவநெறியாகும். சிவத்தைப் பரம் பொருளாகக் கொள்வது சிவ நெறியாகும். சைவ சமயத்தினனாகப் பிறந்து விட்டால் மட்டும் ஒருவன் சைவ னாகிவிட முடியாது. சைவ வேடந்தாங்கும் போலிச் சைவர்கள் பலர் மலிந்து காணப்படுகின்றனர். அவர்கள் சைவ ஒழுக்கங்களை வாழ்வில் கடைப்பிடிக்காதவர்கள். வாழ்க்கையில் சைவ ஆசாரங்கள் சைவ சீலங்கள், சைவ ஒழுக்கங்கள் என்பவற்றை மேற் கொள்பவர்களே உண்மைச் சைவர்களாவர்.

சைவ மக்கள் முழுமுதற் கடவுளாகிய சிவ பெருமானையும் அவரை அதிட்டித்து நிற்கும் விநாயகர், முருகன், வைரவர், அம்பாள், மஹாவிஷ்ணு முதலிய மூர்த்திகளையும் மனம், மொழி, மெய்களினால் வழிபட வேண்டும். இதுவே தலையாய் சைவ ஒழுக்கம். இத்தகைய இறைவழிபாடு நமது வாழ்வில் ஏற்படுகின்ற தீய எண்ணங்கள், தீய ஆசைகள் ஆகியவற்றை முளையிலேயே கருக்கி அழித்து விடுகின்றது. அதனால் மனந் தூய்மை பெறுகின்றது. தூய்மை பெற்று விட்ட எமது இதய கமலத்தில் இறைவன் எழுந்தருளி வீற்றிருக்கின் றான். எனவே சிவசிந்தனை நமது ஒழுக்கத்தை செம்மைப் படுத்துகிறது.

நாங்கள் எதை அதிகமாகச் சிந்திக்கிறோமோ அதன் மீது நமக்குப்பற்று உண்டாகின்றது. பரிச்சயம் ஏற்படுகிறது. பின்னர் அச்சிந்தனையிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ள முடியாமற் போய் விடுகின்றது. ஈற்றில் சிந்தித்து சிந்தித்து சிந்திக்கப்பட்ட அப்பொருள்மயமாகவே ஆகிவிடுகின்றோம். அத்தகைய சிந்தனை சிவசிந்தனையாக அமைந்து விட்டால் அதைவிடப் பெரும் பேறு வேறு எதுவும் கிடையாது. சிவசிந்தனையை எஞ்ஞான்றும் கொண்டவனே சைவசமயி ஆகின்றான்.

"உன்னை யொழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை யொருவரையான் பின் செல்லேன்"

என்றபடி தம்மை முழுமையாக அந்தச் சிவபரம் பொருளிடம் ஒப்படைத்து விட்டுத் தம்முடைய அன்றாட காரியங்களையும், கடமைகளையும் ஆற்றுகின்றவர்களுக்கு வாழ்வில் ஒரு பொல்லாப்பும் நேராது என்பது உறுதி. இறைவன் எல்லாம் அறிபவர். நாம் கேளாமலே நமக்குத் தேவையான எல்லாவற்றையும் அவர் தாமே முன் வந்து தருவார். எம்மை அவரிடம் ஒப்படைத்து விட்டு எவ்வித கலக்கமோ, அங்கலாய்ப்போ இன்றி, இறைவனை நினைத்தலும், வணங்கி வழிபடுதலும், துதித்தலும், பூசித்தலுமே நாம் செய்ய வேண்டியவை. நாம் உலகில் வாழ்கின்றோம்; பல்வேறு பதவிகளிலும், தொழில்களிலும் ஈடுபட்டு இருக்கிறோம்; அவற்றையெல்லாம் முட்டின்றி நெறிமுறை தவறாது ஆற்ற வேண்டும். அவை நம் கடமைகள். இக் கடமைகளை நாம் மேற் கொள்ளும் போது அவற்றில் எமது சிரத்தை முழுமையாகச் செல்லுமாயினும் எமது நாட்டம் எப்போதும் சிவபரம் பொருளினிடைத் திலேயே இருத்தல் வேண்டும். அப்போது தான் நமது பணிகளும், கடமைகளும் சீராக அமையும். அவ்வாறு சிவசிந்தனையோடு தமது பொறுப்புக்களையும், பணிகளையும் செய்துவருபவனே சைவ சமயி ஆகின்றான்.

எந்த மனிதன் வாழ்க்கையில் உண்மை, நேர்மை, சாந்தம், புலனடக்கம், கொல்லாமை, மன உறுதி, அன்பு, பிறர்க்குத் தீங்கு செய்யாமை, புலாலுண்ணாமை போன்றவற்றை சிரத்தையோடு அனுட்டிக்கிறானோ அவனே உண்மைச் சைவனாவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம், மொழி, மெய்களினால் எவரையும் பகைமை பாராட்டாதவன் மனத்திலிருந்து அகங்கார மமகாரங்கள், செருக்கு, கர்வம் ஆகியவற்றை முற்றாக வெளியேற்றியவன் பிறர் நன்மைக்கு உதவும் நற்காரியங்களில் ஈடுபாடுடையவன், ஏழை எளியோர், ஊனமுற்றோர், நலிந்தோர் ஆகியோருக்காக இரங்கி உதவுபவன், எல்லோரிடமும் இனிமையாகவும், கரிசனையுடனும் நடந்து கொள்பவன், சித்தம், முற்றிலும் அமைதியும் கருணையும் நிறையப் பெற்றவன் பிறர் மகிழ்சிசியடைவதைக் கண்டு தாமும் இன்புறுபவன் எப்பொழுதும் எதிலும் சிவபரம் பொருளை உணர்ந்து அதில் தன் சிந்தையைச் செலுத்துபவன் எவனோ அவனே உண்மைச் சைவன் ஆகின்றான். நாமும் சைவ ஒழுக்கங்களை வாழ்க்கையில் மேற்கொண்டு சிவகடாட்சம் பெற்று நல்வாழ்வு வாழ்வோமாக.

இ. கலைச்செல்வன்
ஆண்டு 13 கலைப்பிரிவு

# ஒழியட்டும் இவ்வேளையில்

அவனில் அசைபோடும் நெஞ்சங்களே!
ஆகும் மனதின் அமைதியைப் போல்!
நல்வழியில் பொறுமையைக் கடைப்பிடித்தே!
போற்றுவோம் போற்றியென்று சக்தியினையே!

❀

பாரினில் மன்னரைப்பணிய வைத்தே!
பார் போற்றும் தீரனாய் துலங்கவைத்தே!
பகைவரை பதைபதைக்கச் செய்திடுவாள்!
பராசக்கதி அவளென்று போற்றுவோமே!

❀

பாராளும் தேவரும் பயபக்தியுடனே!
பணிவது எந்தன் அலைமகளை!
வீட்டோடும் செல்வமாய் வாழ்வதற்கு!
விரும்பியே தேவியவளை போற்றுவோமே!

❀

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்!
அளித்து விட்ட களைமகளை - நாமும்!
தூய உள்ளம் கொண்டு துலங்கியவனாய்!
தொழுதிடுவோம் அன்னையின் திருவடியினையே!

❀

கற்றலும் இனிதாய் அமைவதற்கு!
களைத்திடுவோம் சோர்வை! இன்முகத்துடனே!
முன்னேறக் கல்வியில் கருத்துடனே!
முனைந்திடுவோம் வெற்றி திலகமிட்டே!

பண்பாடியே பகிர்ந்திடும் நெஞ்சங்களாய்!
பாரினில் உயர்வடையும் வரையில் நாமே!
கண் உறங்கா தகைமையாளர் போலிங்கே!
கற்றிடுவோம் பயன்தரும் கல்வியினையே!

❀

நவநாளும் நாதங்கள் ஒலித்திடவே!
நன் நெஞ்சங்கள் நவரசமாய் சிரித்திடவே!
நவ ராத்திரி என்று நாம் பூஜிக்கவே!
நன் நாளும் பிறந்தது இந்நாளிலே!

❀

சக்திகளே இவ்வாழ்வில் நிலைத்த தொன்றாய்!
சரித்திரமும் அவள் நாமம் புகழ்ந்திட்டதாய்
ஆதியும் அந்தமுமில்லா விளங்குபவளே!
அறிந்திட்டது நம் கண்கள் நவராத்திரியிலே!

❀

மாணவர் மாண்புடன் விளங்கிடவே!
மதியுடன் செயல்புரிவீர் இனிதுடனே!
நீயும் நானும் வேறென்ற பேதம்!
நினைவினில் ஒழியட்டும் இவ்வேளையிலே!

❀

ச. திருச்செந்தூரன்

ஆண்டு 9C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தி இயக்கமும் சைவ இலக்கியமும்

செல்வரெட்ணம் பத்மசீலன். (ஆசிரியர்)
தி. கி. ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

தென்னாட்டிலே சங்கம் மருவிய காலப் பகுதியினை அடுத்து கி. பி. 6-9ம் நூற்றாண்டு வரையுள்ள பல்லவர் ஆட்சி நிலவிய காலமே தமிழ் இலக்கிய வரலாற்றில் பல்லவர் காலம் எனப்படும். சங்கம் மருவிய காலப் பகுதியில் காரைக்கால் அம்மையாரினால் ஆரம்பிக்கப்பட்ட பக்தி பல்லவர் காலப்பகுதியில் உச்ச நிலையினை அடைந்ததனால் இக்காலப் பகுதியினை பக்தி நெறிக் காலம் என்பர். இவ்வாறு அழைக்கப்பட அடிப்படைக் காரணம் சமண, பௌத்த செல்வாக்கினால் ஏற்பட்ட இந்து சமயத் தளர்வும், அதனை மறுமலர்வு பெறச் செய்ய தோற்றம் பெற்ற நாயன்மார்களதும், ஆழ்வார்களினதும் சமயப்பணியும் எனலாம். இவர்கள் இரு கிளைகளாக பிரிந்து சைவம், வைணவம் என்ற நிலையில் இயக்க ரீதியாக இயங்கி இலக்கியங்களை தோற்றுவித்தனர்.

பல்லவர் காலத்தில் சைவத்தின் வளர்ச்சிக்கு நாயன்மார்களும், வைணவத்தின் வளர்ச்சிக்கு ஆழ்வார்களும் தொண்டாற்றினர் சைவத்துக்காக நாயன்மார்கள் எவ்வாறு செயற்பட்டார்களோ அதே போன்று வைணவத்திற்காக ஆழ்வார்களும் செயற்பட்டனர். ஆனாலும் இங்கு சைவத்தினையே ஈண்டு கவனித்தற்பாலது. இருவரும் ஒற்றுமையாகவே பக்தி இயக்கத்தை வழி நடத்திச் சென்றனர். இதற்கு சான்றாக "சங்கர நாராயண வணக்கத்தினைக்" குறிப்பிடலாம்.

சைவ சமயத்தில் பல பக்தி இலக்கியங்கள் தோற்றம் பெற்றதை அறியக் கூடியதாக உள்ளது. அவற்றுள் தேவாரம், திருவாசகம், திருமந்திரம் போன்றவற்றினையும், சிறு இலக்கியம் என்ற வகையில் கலம்பகம், உலா போன்றவற்றையும் குறிப்பிடலாம். இவ்வாறான அருட்பாடல்கள் மூலம் இறைவனது தத்துவம், சிறப்பு போன்றவற்றை புராண இதிகாசங்களில் கூறப்பட்ட உற்சவங்களையும், தாம் அனுபவவாயிலாக கண்ட உண்மையினையும் ஒன்று கூட்டியும், வகுத்தும் அருட்பாடல்களைப் பாடினார்கள். இப்பாடல்கள் வெறுமையாக அமையாது இசையுடன் பாடுகின்ற முறையினையும் ஏற்படுத்தினார்கள். பண்கள் பல காணப்பட்டது. நாயன்மார்களது பாடல்கள் பதிக வடிவில் அமைந்திருப்பதையும் காணக் கூடியதாக உள்ளது. அப்பதிகங்களில் இறையின் சிறப்பு, இடச்சிறப்பு, அழகு, பக்தி உணர்வு, பொருள் உணர்வு என்பவற்றையும் வெளிப்படுத்துவதாக உள்ளன. அவ்வாறான அருட்பாடல்கள் தமிழ் மொழியிலும் இருந்தமையினால் எல்லோரும் விளங்கிக் கொள்ளக் கூடியதாகவும் அமைந்தது. திருநாவுக்கரசு நாயனார் "சலம்பூவொடு தூப மறந்தறியேன் தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்" என்று பாடியுள்ளார். தமிழில் பாடல் பாடுகின்ற முறையும் பூசை தமிழில் நடைபெற்றது என்பதனையும் தமிழ்ச் சிறப்பினையும் இப்பாடல் மூலம் அறியக் கூடியதாக உள்ளது.

நாயன்மார்கள் தந்த இலக்கியங்களில் பல தத்துவக் கருத்துக்களை இலகு படுத்தியுள்ளார்கள். வேறு இலக்கியங்களிலும் உபநிடதங்களிலும் கூறப்பட்ட கருத்துக்கள். அதாவது சாதாரண மக்களால் விளங்கிக் கொள்ள முடியாத இறைவன், உலகு என்பவற்றுக்கு ஒரு திருமுறையிலே "அம்மையே அப்பா ஒப்பிலா மணியே" என்று குறிப்பிட்டு இறைவன் ஒப்பில்லாதவர் எல்லாவற்றிற்கும் மேலானவர் என்று குறிப்பிட்டு இலகுவான ரீதியில் விளக்கம் கொடுத்தார். அதே போன்று உருவம் இல்லாத இறைவனுக்கு உருவம் கொடுத்து, நித்திய, நைமித்திய பூசை என்பனவற்றுக்கு முக்கியம் கொடுத்தார். ஒரு நாமமும் இல்லாத இறைவனுக்கு பலநாமம் கூறியும், உலகமும், ஊரும் இல்லாத இறைவனுக்கு ஊர்களைச் சொல்லி வழிபாடாற்றியமையினை "குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்" என்னும் திருமுறை மூலம் விளக்கியுள்ளார்.

நாயன்மார்களைப் பல்லவர் காலத்தில் பலர் போற்றினாலும் சாதி, பேதம் இல்லாது தொண்டர் குலமே தொழு குலம் என்ற கருத்தை நிலைப்படுத்தினர். ஞானசம்பந்தர் உயர்குலத்தவர் (அந்தணர்) கண்ணப்ப நாயனார் வேடரிலும், அப்பூதி அடிகள் வேளாளர், சுந்தரர் சிவப்பிராமணர், சேந்தனார் புலையர் இவ்வாறு சாதி வேறுபட்டு காணப்பட்டாலும் யாவரும் சமம் என்பதனை திருநாவுக்கரசு நாயனார் பின்வரும் பாடலில் "ஆவுரித்துதின்று உழலும் புலையரேனும் கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே" என்று குறிப்பிட்டுள்ளார்.

புலாலை உணவாக உண்ணும் புலையராக இருந்தாலும் அவர்கள் இறைவனோடு மெய்யன்புடன் நட்புக் கொண்டால் நாம் வணங்குகின்ற இறைவனைக் காணலாம் என்று கூறுகின்றார். இதனூடாக சமத்துவக் கருத்தை காணக்கூடியதாக உள்ளது.

கொல்லாமை, புலால் உண்ணாமை, போன்றவற்றை ஏற்றுக் கொண்டமையோடு துறவு வாழ்க்கையையும் ஏற்றுக் கொண்டனர். ஆனாலும் இல்லறம் ஒரு போதும் பக்திக்கு தடையாக அமையவில்லை. இதற்கு சுந்தரமூர்த்தி நாயனாரது திருமணம் சான்றாகும். இதனை திருவெண்பாக்கத்தில் பாடிய பாடல்மூலம் அறியலாம். பல நாயன்மார்கள் இல்லறத்தில் வாழ்ந்துள்ளனர்.

பல்லவர் காலத்தில் மன்னர்கள் ஆலயங்களைக் கட்டுவித்தனர். அத்துடன் ஆலய வழிபாட்டிற்கும் உதவினர். மூடியிருந்த ஆலயத்தினை திருநாவுக்கரசு நாயனார் "பண்ணினேர் மொழி" பாடலைப் பாடி திறக்கவும், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் "சதுரம் மறை" எனும் பாடலைப் பாடி மூடவும் செய்தனர். அத்துடன் மட்டுமல்லாது தமிழ் நாடு முழுவதும் சென்று ஆலயங்களைத் தரிசித்தமையினையும் சிவத்தலங்கள் மீது திருமுறை பாடியமையினையும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயன்மார்கள் இறைவனோடு கொண்ட தொடர்பினை நோக்கும் போது, ஞானசம்பந்தர் தன்னைக் குழந்தையாகவும், இறைவனையும், இறைவியையும் பெற்றோராகவும் பாவனை செய்து பாடியுள்ளார் "தாயினும் நல்ல தலைவர் என்றடியார்" எனும்பாடல் மூலம் இதனை அறியலாம். இவர் கிரியை முறையில் நின்று வாழ்ந்து சாமீப முத்தி நிலையை அடைந்தார். சுந்தரமூர்த்தி நாயனார் இறைவனைத் தோழனாக உரிமையுடன் பாடியதை "பித்தாப் பிறைசூடி" எனும் பாடல் மூலமாக அறியக்கூடியதாக உள்ளது. அவர் யோக நெறியில் வாழ்ந்து சாரூப முத்தியினை அடைந்தார். அவ்வாறாக திருநாவுக்கரசு நாயனார் தன்னை இறைவனுக்கு அடிமையாகக் கொண்டு வழிபட்டுக் "கூற்றாயினவாறு" என்று பாடி உள்ளார். இவர் சரியை நெறியில் நின்று வழிபட்டு சாலோக முத்தி அடைந்தவர். மாணிக்கவாசக சுவாமிகள் அறிவு நிலையில் இறைவனை வழிபட்டமையினை "சீரும் திருவும் பொலியச் சிவலோகம்" எனும் பாடல் மூலம் விளக்கியுள்ளார். இவர் ஞான நெறியில் நின்று சாயுச்சிய முத்தி அடைந்தவர். இவ்வாறாக சைவநாற்பாத நெறி நின்று சமயகுரவர்கள் முத்தி பெற்றமையினையும் குறிப்பிடலாம்.

நம்பியாண்டார் நம்பியினால் தொகுக்கப்பட்ட திருமுறையில் திருஞானசம்பந்தரது திருமுறைகள் 1 - 3 வரையிலானது. இவை சிறு வயதில் பாடத் தொடங்கியதால் பண் நிறைந்ததாகவும், கனிவானதாகவும் சைவத்தின் மேன்மையினை வெளிபடுத்து கின்றனவாகவும், அவற்றைப் பாதுகாப்பதாகவும் காணப்பட்டது. திருநாவுக்கரசு நாயனார் வயதும், அனுபவமும் முதிர்ந்தவர் அவர் பாடிய தேவாரங்கள் 4 - 6 வரையிலான திருமுறைகளை உள்ளடக்கியதோடு, நிலையாமைக் கருத்துக்கள், ஆசையின் விளைவு, பக்தி வைராக்கியம் என்பவற்றை உள்ளடக்கியனவாகவும் காணப்படுகிறது. சுந்தரமூர்த்தி நாயனார் சிவனடியார் பெருமையை மக்களுக்கு எடுத்துக்காட்டியும் இறைவனைத் தோழமை நெறியில் நின்று வழிபடலாம் என்பதனைத் தனது வாழ்வின் மூலம் விளக்கியுள்ளார். இவரது பாடல்கள் 7ந் திருமுறையிலடங்கும். மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருமுறைகள் 8ந் திருமுறையினையுடையது. இவை கேட்போர் உள்ளத்தை உருக்கவல்ல தீந்தமிழ் பாடல்களாகும். ஆகவே தான் திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத் திற்கும் உருகாதார் என ஜி. யூ. போப் பாதிரியார் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆழ்வார்கள் இறைவனது தோற்றப் பொலிவை நாராயண வடிவத்தின் மூலம் மக்களுக்கு வெளிக் கொணர்ந்தனர் இதற்கு "பச்சைமால் மலை போல் மேனி பவளவாய் கமலச் செங்கண்" என்னும் பாடல்களின் மூலம் தெளிவு படுத்தியுள்ளனர். ஆண்டாள் பாடிய பாடல்கள் இறைவனைக் காதலனாகவும் தன்னைக் காதலியாகவும் பாவனை செய்து பாடும் போக்கு பக்தி வைராக்கியத் தின் பிணைப்பினை எடுத்துக் காட்டுகிறது.

சித்தர் வரிசையில் காணப்படுகின்ற திருமூலர் இயற்றிய திருமந்திரமானது இறைவனை அடையும் வழியான அன்பு பற்றியும் ஏனையவைபற்றியும் கூறுகின்றன. இவர் 3000 திருப்பாடல்களை பாடியுள்ளார். இது சைவசித்தாந்தக் கருத்துக்களையும், யோக நிலைகளையும், ஒழுக்க நெறிகளையும் எடுத்துக் கூறுவதுடன் ஆகமக் கருத்துக்ளை தமிழில் சிறப்பித்துக் கூறும் இலக்கியமாகவும் காணப்படுகிறது.

பல்லவர் காலத்தில் பிறமதங்களை கண்டிக்கின்ற நிலை காணப்படுகின்றது. அத்துடன் பிறமதங்களைச் சேர்ந்தவர்களை இந்து சமயத்திற்கு சேர்க்கின்ற முறையும் காணப்பட்டது. ஞானசம்பந்தரால் பாண்டிய மன்னன் மாறியமையினையும், சமணத்திலிருந்து திருநாவுக்கரசு நாயனார் மாறியமையினையும் காணலாம்.

பல்லவர் காலத்தில் இறைவனை மட்டுமன்றித் தொண்டர்களையும் வழிபடுகின்ற நிலை காணப்படுகிறது. சுந்தரமூர்த்தி நாயனார் "தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்னும் பாடலின் மூலம் விளக்கியுள்ளார் இறையடியார்களை வழிபடுகின்ற நிலைகாணப் பட்டமையினால் அவர்களது பெருமையைப் பற்றித் திருத்தொண்டர் தொகையிலே பாடியுள்ளமையினைக் காணக்கூடிய தாக உள்ளது. சிவவேடம், சிவசின்னம் என்பன வழிபாட்டுக்குரியனவாகவும் காணப்பட்டன. இதற்கு சான்றாக மெய்ப்பொருள் நாயனாரது வாழ்க்கையின் சம்பவங்கள் விளங்குகின்றன. இக்காலத்தில் சில மெய்யடியார்களும் தொண்டாற்றியுள்ளார்கள்.

இவ்வாறாக இந்து சமயத் தளர்ச்சியில் வளர்ச்சி காணவே நாயன்மார்களும், ஆழ்வார்களும் தோன்றிச் சமயப்பணியில் ஈடுபட்டனர். இன்றும் சைவசமயத்தின் பெருமையினையும், சிறப்பினையும் மக்கள் மனதில் பதித்து பக்தி உணர்வை ஊட்டுவதற்கு பக்தி இலக்கியங்களே பெரிதும் துணை புரிகின்றன.

இவ்வாறாக மேற்கூறப்பட்ட அம்சங்கள் யாவற்றையும் கொண்டு, பெருமளவு பக்தி இலக்கியங்கள் இக்காலத்தில் எழுந்து சைவத்தின் வளர்ச்சிக்கு துணைபுரிந்ததமையினால், இதனை பக்தி இயக்கமும் சைவ பக்தி இலக்கியமும் வளர்ச்சியடைந்த காலம் என்று கூறலாம்.

பிறரது குற்றங்களைப்பற்றி ஒரு போதும் பேசாதே. அவை எவ்வளவு கெட்டவை ஆனாலும் சரி, அதனால் எந்தப் பயனும் என்றும் விளைவதில்லை.

ஒருவனுடைய குற்றங்ளைப் பற்றிப் பேசுவதனால் அவனுக்கு ஒருநாளும் நீ உதவிசெய்தவனாகமாட்டாய். மாறாக அவனுக்கும் கேடு செய்து, உனக்கும் கேடு இழைத்துக் கொள்கிறாய்.

சுவாமி விவேகானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments from:-

# VIKNA TRADE CENTRE

**General Merchants, Transporters & Commission Agent**

**T. P. 026-22175**

# V. T. C.

181, Central Road,
Trincomalee.

*With Best Compliments from:-*

**Sairam**

# MAJOORANS BOOK CENTRE

Proprietor:- **V. RASAKKOONE**

V

**101, Vidyalayam Road,
Trincomalee.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனைத் திரும்பத் திரும்பப் புன்படுத்துவது அவனுடைய மனதே.

"சாரதை" சிறப்புற வாழ்த்துக்கள்

# வாணி புத்தகசாலை

❈ சகலவிதமான பாடசாலை உபகரணங்கள்
❈ இலங்கை, இந்திய சஞ்சிகைகள் மற்றும் நாவல்கள்
❈ உள்நாட்டு நாளாந்த வாராந்த செய்தித்தாள்கள்

**69A இராஜவரோதயம் வீதி, திருகோணமலை.**

Best Wishes:

# GNANAM MEDICALS

No. 223, THIRUGNANASAMPANTHER STREET,
TRINCOMALEE.

With Best Compliments from:

# Coranation Stores

**DEALERS IN:** Fansy Goods, Wall Clocks,
Gift Items, Electrical Goods & Baby Items

**172, N. C. ROAD, TRINCOMALEE.**

**T. P 026 - 22445**

**எமது அடுத்த இதழுக்காக வாசகர்களிடமிருந்தும், அறிஞர்களிடமிருந்தும் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன இவை ஆன்மீகம் தொடர்பானவையாக இருத்தல் வேண்டும்.**

அனுப்பவேண்டிய முகவரி-:

இதழாசிரியர்
"சாரதை"
தி/இ. கி. ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி
திருகோணமலை.

(இ - ஆ - ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி விழாவை முன்னிட்டு இந்து மாணவர் மன்றம் நடாத்திய சைவசமய அறிவுப் போட்டி முடிவுகள்

# 1993

## பேச்சுப் போட்டி (1)

### கனிஷ்ட இடைநிலைப் பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | கே. ஆனந்தபிரசாத் | 7B |
| 2ம் இடம் | ச. சஞ்சுதன் | 6B |
| 3ம் இடம் | சி. ஸ்ரீதரன் | 7A |

### சிரேஷ்ட இடைநிலைப் பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | ச. பாலமுரளி | 10A |
| 2ம் இடம் | ச. வினோதரன் | 9D |
| 3ம் இடம் | சூ. சூரியபிரசாந் | 10A |

### மேற் பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | சு. அரவிந்தன் | 12 கணிதம் |
| 2ம் இடம் | த. மகேஸ்வரன் | 13 கலை |
| 3ம் இடம் | இ. அசோக் | 12 உயிரியல் |

## எழுத்துப் போட்டி (2)

### ஆரம்ப கீழ்ப் பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | வி. சிவபிரதாப் | 1D |
| 1ம் இடம் | வி. சுகிசன் | 2C |
| 2ம் இடம் | பே. சுஜீவ் | 1C |
| 2ம் இடம் | பா. உமாசுதன் | 2C |

### ஆரம்ப மத்திய பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | கி. யூ. மயூரன் | 3A |
| 2ம் இடம் | தே. கபிஷன் | 3B |
| 3ம் இடம் | உ. சுதாகர் | 3B |

### ஆரம்ப மேற் பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | இ. புஸ்பராகவன் | 5A |
| 2ம் இடம் | நி. ராஜ்சங்கர் | 5A |
| 3ம் இடம் | பா. பாலசுந்தரம் | 5A |
| 3ம் இடம் | பே. நிருபன் | 5B |

### கனிஷ்ட இடைநிலைப் பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | ச. செந்தூரன் | 8D |
| 2ம் இடம் | ஸ்ரீ. வாகீசன் | 8C |
| 3ம் இடம் | சி. கஜராஜ் | 6B |

### சிரேஷ்ட இடைப் நிலைப் பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | க. ஜெயந்தன் | 11A |
| 2ம் இடம் | சி. கலாதரன் | 11A |
| 3ம் இடம் | க. கீதாஞ்சன் | 10A |

### மேற் பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | இ. ரட்ணரஞ்சித் | 13 உயிரியல் |
| 2ம் இடம் | த. சிவநாதன் | 12 வர்த்தகம் |
| 3ம் இடம் | கை. சாந்தரூபன் | 12 உயிரியல் |

## மனனப் போட்டி (3)

### ஆரம்ப கீழ்ப் பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | சி. மனோஜ்குமார் | 2A |
| 2ம் இடம் | ச. துவாரகன் | 2C |
| 3ம் இடம் | சூ. சூரியபிரதாப் | 1A |

### ஆரம்ப மத்திய பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | ம. சுவேஸ் | 3B |
| 2ம் இடம் | லோ. தசாந்தன் | 3B |
| 3ம் இடம் | இ. துஷ்யந்தன் | 3C |

### ஆரம்ப மேற் பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | பா. பிரசாந்தன் | 5 |
| 2ம் இடம் | பொ. ஆரணன் | 5 |
| 3ம் இடம் | மு. மனோராஜ் | 4A |

### கனிஷ்ட இடைநிலைப் பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | பா. பிரணவன் | 7B |
| 2ம் இடம் | ச. செந்தூரன் | 8D |
| 3ம் இடம் | ச. பிரசாத் | 8D |

### சிரேஷ்ட இடைநிலைப் பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | க. துஷ்யந்தன் | 11D |
| 2ம் இடம் | நா. தவப்புதல்வன் | 9A |
| 3ம் இடம் | க. தயாளன் | 10E |

### மேற் பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | வி. சூரியகுமார் | 12 கணிதம் |
| 2ம் இடம் | கே. ஆறுமுகவரதன் | 12 கணிதம் |
| 3ம் இடம் | கே. ஜெயந்திரகுமார் | 13 உயிரியல் |

## பஞ்சபுராணம் ஓதல் (4)

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | ச. செந்தூரன் | 8D |
| 2ம் இடம் | ச. தேவகாந்தன் | 3C |
| 3ம் இடம் | சு. சுஜிதன் | 11B |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய அறிவுப் போட்டி 1994

## பேச்சுப் போட்டி (1)

### கனிஷ்ட இடைநிலைப்பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | மு. மயூரன் | 7C |
| 2ம் இடம் | பா. கேதீசன் | 7B |
| 3ம் இடம் | க. பிரதீபன் | 7B |

### சிரேஷ்ட பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | த. அபிராம் | 10A |
| 2ம் இடம் | ச. பாலமுரளி | 11A |
| 3ம் இடம் | சோ. சுதாகரன் | 10E |

### மேற் பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | சு. அரவிந்தன் | 12 கணிதம் |
| 2ம் இடம் | பொ. தவசிதன் | 12 ,, |
| 3ம் இடம் | கோ. மணிவண்ணன் | 13 விஞ்ஞானம் |

## எழுத்துப் போட்டி (2)

### ஆரம்ப கீழ்ப் பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | ஜெ. மோகனகிருஷாந் | 1C |
| 1ம் இடம் | க. ஜனகன் | 1C |
| 1ம் இடம் | இ. நிரோஷ் | 1C |

### ஆரம்ப மத்திய பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | இ. மயூரன் | 3A |
| 1ம் இடம் | வி. சுகிசன் | 3B |
| 1ம் இடம் | சி. ஆரண்யன் | 3C |
| 1ம் இடம் | க. அருணரூபன் | 3C |

### ஆரம்ப மேற்பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | மு. மனோராஜ் | 5A |
| 1ம் இடம் | த. பிரதீபன் | 5B |
| 1ம் இடம் | சி. பத்மகரன் | 4A |
| | கி. யூ. மயூரன் | 4C |
| | இ. ஷீரஷாகர் | 4C |
| | தே. கபிஷன் | 4B |

### கனிஷ்ட இடைநிலைப் பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | பா. கேதீஷன் | 7B |
| 2ம் இடம் | சி. கஜராஜ் | 7D |
| 3ம் இடம் | ச. கிருஷாந்தன் | 8A |
| 3ம் இடம் | வெ. அருள்மோகன் | 8A |
| 3ம் இடம் | கு. பிரபாகர் | 8B |

### சிரேஷ்ட இடைநிலைப் பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | யோ. இலக்னேஸ்வரன் | 11D |
| 2ம் இடம் | சோ. ரமணீதரன் | 11D |
| 2ம் இடம் | சி. கஜேந்திரன் | 11D |
| 2ம் இடம் | த. ஜீவராஜ் | 11D |

### மேற் பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | அ. சிவகுமார் | 13 உயிரியல் |
| 2ம் இடம் | த. சிவநாதன் | 13 வர்த்தகம் |
| 3ம் இடம் | க. ஜெயந்தன் | 12 உயிரியல் |
| 3ம் இடம் | சி. கஜபதி | ,, |
| 3ம் இடம் | மு. காசிநாதன் | ,, |

## மனனப் போட்டி (3)

### ஆரம்ப கீழ்ப் பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | க. பிரகாஸ் | 2B |
| 2ம் இடம் | சு. சுதீஸ் | 1C |
| 3ம் இடம் | ஜெ. மோகன கிர்ஷாந்த் | 1C |

### ஆரம்ப மத்திய பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | சி. ஆரணியன் | 3C |
| 2ம் இடம் | ப. வித்தியாசாகர் | 3A |
| 3ம் இடம் | ஶ்ரீ. பிரேம்ஷாந்த் | 3C |

### ஆரம்ப மேற் பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | ம. சுவேஸ் | 4B |
| 2ம் இடம் | இ. தவக்குமரன் | 5C |
| 3ம் இடம் | ம. பிரசாந்த் | 4D |

### கனிஷ்ட இடை நிலைப் பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | ச. கிருஷாந்தன் | 8C |
| 2ம் இடம் | சாந்தரூபசர்மா | 7D |
| 3ம் இடம் | பா. பிரணவன் | 8C |

### சிரேஷ்ட இடை நிலைப் பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | ச. செந்தூரன் | 9A |
| 2ம் இடம் | ச. பிரசாத் | 9C |
| 3ம் இடம் | ஶ்ரீ வாகீஷன் | 9D |

### மேற் பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | தா. குபேந்திரன் | 12 வர்த்தகம் |
| 2ம் இடம் | வ. விஜயஹேமசந்திரா | 13 வர்த்தகம் |
| 3ம் இடம் | சா. ஜெயதாஸ் | 13 வர்த்தகம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய அறிவுப் போட்டி - 1995

## பேச்சுப் போட்டி (1)

### கனிஷ்ட இடைநிலைப் பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | அ. அச்சுதன் | 8 A |
| 2ம் இடம் | க. பிரதீபன் | 8 B |
| 3ம் இடம் | கா. ஜெயச்சந்திரன் | 6 A |

### சிரேஷ்ட இடைநிலைப் பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | சோ. சுதாகரன் | 11 E |
| 2ம் இடம் | ச. வினோதரன் | 11 B |
| 3ம் இடம் | ச. திருச்செந்தூரன் | 9 C |

### மேற் பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | ச. பாலமுரளி | 12 கணிதம் |
| 2ம் இடம் | ப. ராஜ்குமார் | 12 கணிதம் |
| 3ம் இடம் | யோ. மோகனதாஸ் | 12 வர்த்தகம் |

## எழுத்துப் போட்டி (2)

### ஆரம்ப கீழ்ப் பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | ந. சஞ்சீவன் | 1 A |
| 2ம் இடம் | ரா. நிரேஷ் | 2 C |
| 3ம் இடம் | ச. தனோசானந்தன் | 1 A |
| | ச. மயூரன் | 2 A |
| | கு. நிருஷன் | 2 A |
| | இரா. குணாளன் | 2 A |
| | நா. அருள்பிரசாந் | 2 A |

### ஆரம்ப மத்திய பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | சூ. சூரியபிரதாப் | 3 A |
| 2ம் இடம் | த. நிரோஷன் | 3 A |
| | உ. அருச்சுன் | 3 A |
| | ப. தனுபரன் | 3 B |
| | ஜெ. பிரதீபன் | 3 B |
| | தே. கிருஷாந்தன் | 3 C |

### ஆரம்ப மேற்பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | சி. ஆரணியன் | 4 C |
| 2ம் இடம் | சு. உதயகுமார் | 4 C |
| | க. அருண்ரூபன் | 4 C |

## மனனம் (3)

### ஆரம்ப கீழ்ப் பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | இரா. மால்மருகன் | 2 D |
| 2ம் இடம் | இ. குணாளன் | 2 A |
| 3ம் இடம் | சி. உமைபாலன் | 1 B |

### ஆரம்ப மத்திய பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | க. பிரகாஸ் | 3 B |
| 2ம் இடம் | ஜெ. பிரதீபன் | 3 B |
| 3ம் இடம் | கொ. சக்திப்பிரணவன் | 3 B |

### ஆரம்ப மேற் பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | ம. சுவேஸ் | 5 B |
| 2ம் இடம் | கே. கபீசன் | 5 B |
| 3ம் இடம் | க. ரவிராஜ் | 5 C |

### கனிஷ்ட இடைநிலைப் பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | பா. பிரசாந்தன் | 7 C |
| 2ம் இடம் | ப. சாந்தரூப சர்மா | 8 B |
| 3ம் இடம் | ச. சஞ்சயன் | 7 A |

### சிரேஷ்ட இடைநிலைப் பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | ச. கிரிசாந்தன் | 9 D |
| 2ம் இடம் | ச. செந்தூரன் | 10 A |
| 3ம் இடம் | சி. கௌதமன் | 10 A |

### மேற் பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | ரி. குபேந்திரன் | 13 வர்த்தகம் |
| 2ம் இடம் | கே. துஷ்யந்தன் | 13 கணிதம் |
| 3ம் இடம் | கு. பாலமுரளி | 13 உயிரியல் |

## பஞ்ச புராணம் ஓதுதல் (4)

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | பா. பிரணவன் | 9 C |
| 2ம் இடம் | ப. திவ்வியரூப சர்மா | 10 B |
| 3ம் இடம் | கிருஷாந்தன் | 9 D |

## சிவபுராணம் ஓதுதல் (5)

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | ப. சாந்தரூப சர்மா | 8 D |
| 2ம் இடம் | ச. பிரசாத் | 10 C |
| 3ம் இடம் | ச. செந்தூரன் | 10 A |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது இனிய நன்றிகளை........

- வாழ்த்துரை வழங்கிய அருள்திரு சுவாமிஜி அவர்கட்கும்

- வாழ்த்துரைகள் தந்தெமக்கு இனிய நல்வழி காட்டிட்ட மதிப்பிற்குரிய கல்லூரி முதல்வர்க்கும், அன்பிற்குரிய மன்றப் பொறுப்பாசிரியர்க்கும்

- இதழ் சிறப்புற தமது மேலான ஆலோசனைகளை வழங்கியுதவிய கல்லூரியின் பிரதி முதல்வர்களுக்கும், எமது ஆசிரியப் பெருந்தகைகளுக்கும்

- எம்முடன் உடனிருந்து தனது மேலான வழிகாட்டுதலை எமக்கு நல்கிய மன்றத்தின் பொறுப்பாசிரியர்க்கும்

- கருத்துக்கள் பல செறிந்த கட்டுரைகள் பல தந்த அறிஞர்களுக்கும், ஆசிரியப் பெருமக்களுக்கும்

- ஊக்கமுடன் எமக்கு ஆக்கங்கள் பல தந்த நோக்கு நிறை மாணவர்களுக்கும்

- ஆக்கப் பிரதிகளை அருமையாய் சரிபார்த்து ஊக்கமுடன் எமக்களித்து பேருதவி புரிந்திட்ட ஆசிரியர்களுக்கும்

- பொருத்தேற்ற அட்டைப்படத்தினை வரைந்தெமக்கு நல்கிட்ட ஓவியருக்கும்

- விளம்பரங்கள் தந்துதவி விழிப்பாய் இவ்விதழை களம் பெறச் செய்தமைக்காய் நிறை உளம் கனிந்த வர்த்தகப் பெருமக்கட்கும், நிதியுதவி நல்கிய அன்பர்களுக்கும்

- மலரை சிறப்புற அச்சிட்டுதவிய ஸ்ரீ கணேச அச்சகத்தார்க்கும்

**......இதயத்தால் இயம்புகிறோம்**

இந்து மாணவர் மன்றம்
இ. கி. ச. ஸ்ரீ. கோணேஸ்வரா இந்துக்கல்லூரி
திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from:*

# HILL PHARM

Inside Insurance Corporation of Sri Lanka Premises

## For Best Medical Service

**46/1, Main Street,**
**Trincomalee.**

*T. P.* **026-22157**

*Dr. N. Ravichandran*

கர்ப்பிணித்தாய்மார், குழந்தைகள், பெரியவர்கள், தோல், மனநோயாளர், மற்றும் குடும்பக் கட்டுப்பாடு திட்டமிடல் போன்ற ஆலோசனைச் சேவைகளுக்குத் தயக்கமின்றி நாடவேண்டிய இடம்.

## ஹில் பாமீ்

**46/1, பிரதான வீதி,**

**திருகோணமலை.**

அடக்கப்பட்டு சரியான வழியில் செலுத்தப்பட்ட மனமே மாபெரும் காரியங்களை ஆற்றவல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Best Wishes*

# New Gopalan Company

◇◇ 28, Sea View Road, Trincomalee. ◇◇

Distributors:- **Kelani Cables Ltd.**
**Central Industries Ltd.**
**Jinasena Ltd. & C. I. C. Paints**

Dealers:- **L. P. Gas, General Hardware & Building Material.**

**Show Room**

***207, Main Street, Trincomalee.***

T. Phone:- 026-22407 026-22013 026-22405


கணனி எழுத்தமைப்பு, ஓவ்செற் அச்சமைப்பு, திருஸ்ரீ கணேச அச்சகம், தொ. பே. 026-22617

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org